விலை: 50.00 Viber : 076 636 3378
பக்கங்கள் : நாற்பது

# வலம்புரி Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

UNION
moving money for better
உலகெங்குமுள்ள உறவுகளுக்கு துரித தபால்கள், பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப நாடுங்கள்
உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ் அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
(C-8544)
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com

சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2050 மார்கழி 04 வெள்ளிக்கிழமை (20.12.2019) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 01

## எதிர்ப்புகளுக்கு அஞ்சாத வலம்புரி
## தமிழ் மக்களின் நம்பிக்கைக்குரிய பத்திரிகை

### கம்பவாரிதி இ.ஜெயராஜ் புகழாரம்



உளம் மகிழ "வலம்புரியின்" இருபது அகவை நிறைவுச் செய்தி வந்து சேர்ந்தது. யாழ்ப்பாணப் பத்திரிகை உலகில் "வலம்புரியின்" சாதனை மிகப்பெரிது.

ஊடக அதிகாரத்தைப் பயன்படுத்தி மற்றவர்களை மிரட்டி.

தமது வசதிகள் வளர்க்கவும், பதவிகள் தேடவும் சிலர் முயன்று நின்ற நிலையில்,

அதிகாரமிக்க அவர்களின் எதிர்ப்புகளுக்கு அஞ்சாமல் தொடங்கப்பட்ட "வலம்புரி", மண்ணின் உணர்வுகளைப் பதிவு செய்து,

சமூகம், மொழி, சமயம், பண்பாடு என,

பலதிறத்தாலும் நம் தமிழ்ச் சமூகத்தை வளர்க்க, முடிந்தவரை பாடுபட்டதால்,

இன்று தமிழ்மக்களின் நம்பிக்கைக்குரிய பத்திரிகையாய் வளர்ச்சி பெற்றிருக்கிறது.

பேச்சுத்திறன், எழுத்தாற்றல், சமூக அக்கறை, அரசியல் ஈடுபாடு என,

பலதகுதிகளையும் கொண்டு செயற்பட்டு வரும்,

"வலம் புரியின்" 39

## 19ஆவது அரசியலமைப்பு பெரும் பிழை

# ஐ.நா தீர்மானத்தை ஏற்க முடியாது

### ஜனாதிபதி கோட்டா திட்டவட்டம்

(கொழும்பு) ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையினால் இலங்கை தொடர்பில் எதிராக நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானம் நாட்டுக்கு ஆபத்தாக அமையும் என்பதனால் தமது அரசால் அதனை ஏற்றுக் கொள்ள முடியாது என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்.

மேலும் 19ஆவது அரசியலமைப்பு திருத்தம் பெரும் பிழை எனவும் சுட்டிக்காட்டியுள்ளார். (39ஆம் பக்கம் பார்க்க)

உங்கள் 'வலம்புரி'க்கு இன்று அகவை 22

## வடக்கு ஆளுநராக பி.எஸ்.எம்.சார்ள்ஸ்

(யாழ்ப்பாணம்) வடக்கு மாகாண ஆளுநராக பி.எஸ்.எம்.சார்ள்ஸ் நியமிக்கப்படுவதற்கான முடிவுகள் எட்டப்பட்டுள்ளதாக நம்பத் 39

### வேலணைப் பிரதேச சபையில்
## வாக்குவாதம் முற்றி கைகலப்பில் முடிந்ததில்
### இரு உறுப்பினர்கள் காயம்

(யாழ்ப்பாணம்) வேலணைப் பிரதேச சபை அமர்வில் ஏற்பட்ட வாக்குவாதம் முற்றிக் கைகலப்பில் முடிந்ததில் இரு உறுப்பினர்கள் காயமடைந்து வைத்திய 39

## பௌத்த மக்களின் ஆணையை ஜனாதிபதி கோட்டா மீறிவிட்டார்

(கொழும்பு) பாட்டலி சம்பிக்க ரணவக்க மீதான வழக்கு, முற்றிலும் அரசியல் நோக்கம் கொண்டது. அரசியல் சூனிய வேட்டையை தற்போதைய அரசாங்கம் ஆரம்பித்துள்ளது எனக் கடுமையாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

ஜாதிக ஹெல உறுமய கட்சியினர், ஐ.தே.கவின் பிரமுகர்கள், பௌத்த பிக்குகள், சிவில் சமூக பிரதிநிதிகள் இணைந்து நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பில் இது தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கைது அரசியல் நோக்கத்தை கொண்டது. சம்பிக்கவை அரசியல் ரீதியாக படுகொலை செய்யும் நோக்கத்தை கொண்டது என ஜாதிக ஹெல உறுமயவின் இணைத் தலைவர் ஹெடிகல்ல விமலசார 39

### வெள்ளைவான் கடத்தல் விவகாரம்
## முன் பிணை கோரி ராஜித மனுத் தாக்கல்

(கொழும்பு) தன்னை கைது செய்வதற்கு முன்னர் பிணையில் விடுதலை செய்து உத்தரவிடுமாறு கோரி முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன முன் 39

### வவுனியாவில்
## மீன் பிடிக்கச் சென்ற குடும்பஸ்தர் சடலமாக மீட்பு

(வவுனியா) வவுனியா உளுக்குளம் பகுதியில் ஆணொருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது. 39

### 5 மணி நேரத்தில்
## கொழும்பிலிருந்து யாழுக்கு ரயிலில் பிரயாணம் செய்யலாம்

(கொழும்பு) கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு ஐந்து மணிநேரத்தில் பயணிக்கும் வகையில் வடபகுதியிலுள்ள ரயில் பாதை புனரமைக்கப்படவுள்ளது.

இந்தத் தகவலை ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

மஹவயிலிருந்து ஓமந்தை வரையான ரயில்பாதை சீரின்மையால், ரயில் போக்குவரத்து மந்தகதியிலேயே 39



## உண்மையைக் கண்டு பயம் கொள்வதால் என்னைக் கைது செய்யக் கோருகின்றனர்

### நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்) தன்னைக் கைது செய்ய வேண்டுமென தென்னிலங்கையில் கோரிக்கை விடுக்கப்படுவது அவர்களுடைய உள்ளெண்ணங்களை படம் பிடித்துக் காட்டுகிறது என வடக்கின் முன்னாள் முதல் 39

## ஆவரங்காலில் வாள்வெட்டு
### இளைஞன் படுகாயம்

(யாழ்ப்பாணம்) யாழ்ப்பாணம்- ஆவரங்கால் பகுதியில் நேற்றுப் பிற்பகல் இடம்பெற்ற வாள் 39

## நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# துப்பாக்கி ரவைகளுடன் ஓமந்தையில் ஒருவர் கைது

(ஓமந்தை)

ஓமந்தை கொந்தக்காரங்குளம் பகுதியில் நேற்று அதிகாலை துப்பாக்கி ரவையுடன் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்ற அதிகாலை 12.30 மணியளவில் வவுனியா பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் ஓமந்தை கொந்தக்காரங்குளம் பகுதியிலுள்ள வீட்டிற்கு சென்ற வவுனியா பொலிஸார் வீட்டினை சோதனை செய்த போது வீட்டிற்கு முன்பாகவுள்ள பூச்சாடியிலிருந்து T56 துப்பாக்கி ரவைகள் 189ம், எம்ரி ரவைகள் 154 ம் வைத்திருந்ததன் குற்றச்சாட்டில் 47வயதுடைய நபரை கைது செய்துள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வவுனியா குற்றத்தடுப்பு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

விசாரணைகளின் பின்னர் சந்தேக நபரை நீதிமன்றத் தில் முற்படுத்தவுள்ளதாக மேலும் தெரி வித்தனர். (ம-3,250,299)

### மருத்துவச் சான்றிதழ் பெறுவதற்கான

# நுழைவு அனுமதிச் சீட்டு வழங்குதல் நிறுத்தப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்தில் தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவனத்தினால் வழங்கப்படும் சாரதி அனுமதிப் பத்திரத்திற்கான மருத்துவச் சான்றிதழ் பெறுவதற்கான நுழைவு அனுமதிச் சீட்டு (ரோக்கன்) வழங்கும் நடைமுறை நிறுத்தப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் மருத்துவச் சான்றிதழ் பெறுவதற்கு வழங்கப்பட்ட ரோக்கன் நடைமுறையினை நிறுத்தி பொதுமக்கள் தாம் விரும்பிய திகதியில் பெற்றுக்கொள்வதற்கு ஏற்றவகையிலான நடைமுறைகள் யாழ்ப்பாண மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுத் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான அங்கஜன் இராமநாதன் அவர்களின் வழிகாட்டலில் இன்றைய தினத்திலிருந்து (20.12.2019) மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் சாரதி அனுமதிப் பத்திரத்திற்காக மருத்துவச் சான்றிதழை பெற விண்ணப்பிப்போர் தாங்கள் நேரடியாக யாழ்.மாவட்டச் செயலகத்திற்கு அருகிலுள்ள தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவனத்திற்கு வருகை தந்து தங்களுக்கு பொருத்தமான திகதியினைத் தெரிவு செய்து அத்திகதியில் மருத்துவச் சான்றிதழினைப் பெற்றுக் கொள்ள முடியும். (ம-3.10)

**விற்பனை உதவியாளர் தேவை**

யாழ் கார்கில்ஸ் சதுக்கத்தில் ( Cargills Square) அமைந்துள்ள பெண்களுக்கான ஆடைவிற்பனை நிலையமொன்றுக்கு சாதாரண பொது தராதரப் பரீட்சையில் சித்தி பெற்ற மற்றும் சிறந்த ஆங்கில அறிவையுடைய பெண் விற்பனை உதவியாளர் தேவை. (C-8596)

**077 951 0436, 021 221 6488**

# அதிபர் சேவை தரம் - 3 ஆட்சேர்ப்பில் முறைகேடு

## அமைச்சர் டக்ளஸ் நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

கடந்த ஆட்சிக் காலத்தில் நடைபெற்ற அதிபர் சேவை தரம் - 3 இற்கான ஆட்சேர்ப்பின்போது முறைகேடு இடம்பெற்றுள்ளதாக கூறப்படுகின்றமை தொடர்பில் கல்வி அமைச்சர் டளஸ் அழகப்பெருமவின் கவனத்திற்கு நீரக வள மூலங்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கொண்டு வந்துள்ளார்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியைப் பெற்றுத் தருவதாக உறுதியளித்தார். குறித்த ஆட்சேர்ப்பில் பாதிக்கப்பட்டவர்கள் நேற்று முன்தினம் மாளிகாவத்தையில் அமைந்துள்ள கடற்றொழில் நீரக வள மூலங்கள் அமைச்சரிடம் இது குறித்து முறையிட்டனர்.

இதன்போது, நாடளாவிய ரீதியில் சுமார் 610 தமிழ்மொழி மூல வெற்றிடங்கள் இருக்கின்ற நிலையில் 167 பேர் மாத்திரமே உள்வாங்கப்பட்டுள்ளதாவும் மொழிவாரியாக ஆட்சேர்ப்பு இடம்பெற வேண்டும் என்ற ஆட்சேர்ப்பு நியமங்களுக்கு மாறாக ஆட்சேர்ப்பு இடம்பெற்றமையினால் தாங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் இவர்கள் தெரிவித்தனர்.

மேலும், கடந்த ஆட்சியில் இருந்தவர்களிடமும் கடந்த ஆட்சிக்கு ஒத்துழைப்பு வழங்கியவர்களிடமும் இதுதொடர்பாக முறையிட தாங்கள் முயற்சித்தபோதும் தங்களுடைய கோரிக்கையை அவர்கள் யாரும் கண்டு கொள்ளவில்லை என்ற ஆதங்கத்தினையும் பாதிக்கப்பட்டவர்கள் வெளிப்படுத்தினர்.

உடனடியாக, கல்வி அமைச்சர் டளஸ் அழகப்பெருமவுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா குறித்த விடயம் தொடர்பில் கல்வி அமைச்சரிடம் குறிப்பிட்டார்.

குறித்த ஆட்சேர்ப்பு தொடர்பாக ஆராய்ந்து நடவடிக்கை மேற்கொள்வதற்கு சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவுறுத்துவதாக கல்வி அமைச்சரினால் அமைச்சர் டக்ளஸ்தேவானந்தாவுக்கு உறுதியளிக்கப்பட்டது. (ம-3)

## சாரதிகளை ஒப்பந்த அடிப்படையில் வாடகைக்கு அமர்த்துவதற்கான கூறுவிலை கோரல் - 2020
## மாநகர சபை யாழ்ப்பாணம்

மாநகர சபையின் தேவைகருதி சாரதிகளை ஒப்பந்த அடிப்படையில் வாடகைக்கு அமர்த்துவதற்கு, அவர்களை எமக்குத் தேவைப்படும் நேரத்தில் வழங்கக் கூடிய நிறுவனங்களிடம் இருந்து கூறுவிலைகள் கோரப்படுகின்றன. இக் கூறுவிலைகளைச் சமர்ப்பிப்பதற்கான கூறுவிலைப் படிவங்களை அலுவலக நேரத்தில் மாநகரசபையின் கொள்வனவுக் கிளையில் 23.12.2019 ஆம் திகதி முதல் பெற்று அதனைப் பூர்த்திசெய்து கடித உறையினுள் உள்ளடக்கி உறையின் இடதுபக்க மூலையில் "**சாரதிகளை வாடகைக்கு அமர்த்துவதற்கான கூறுவிலை**" எனக் குறிப்பிட்டு "**ஆணையாளர், மாநகரசபை, யாழ்ப்பாணம்**"எனும் முகவரிக்கு 31.12.2019 ஆம் திகதி பிற்பகல் 3.00 மணிக்கு முன்னர் பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

(நேரிலும் சமர்ப்பிக்கலாம்.)

**ஆணையாளர்**
**மாநகரசபை,**
**யாழ்ப்பாணம்.**

**19.12.2019**

(C-8595)

# அந்தியேட்டிக் கிரியையும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



அமரர்
**ஆறுமுகம் திரவியம்** (ஐயா தம்பி)

கடந்த 21. 11. 2019 வியாழக்கிழமை அன்று சிவபதம் அடைந்த எமது குடும்பத் தலைவர் அமரர் ஆறுமுகம் திரவியம் (ஐயாதம்பி) அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை சனிக்கிழமை 21.12.2019 காலை 6.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்த கரையில் நடைபெற்று, நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை 22.12.2019 நண்பகல் 12.00 மணியளவில் நெல்லியடி தடங்கன் புளியடி முருகன் ஆலய திருமண மண்டபத்தில் நடைபெறும் ஆத்மா சாந்தி நினைவேந்தல் நிகழ்விலும், தொடர்ந்து இடம்பெறும் மதிய போசன விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**(இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.)**

தகவல் : **குடும்பத்தினர்**
**077 504 3606**
**தோட்டத்துவளவு,அல்வாய் தெற்கு, வதிரி, கரவெட்டி.**

(C-8597)

# வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்

## 2020 ஆம் ஆண்டிற்கான பகிரங்க ஏல அறிவித்தல்

வலிகாமம் தெற்கு பிரதேசசபையின் எல்லைக்குட்பட்ட பின்வரும் சந்தைகள், கருவாட்டுக்கடை, இறைச்சிக்கடைகள் என்பவற்றை 2020.01.01 ம் திகதி தொடக்கம் 2020.12.31ஆம் திகதி வரை குத்தகைக்கு வழங்குவதற்கான பகிரங்க கேள்விகள் கோரப்படுகின்றன.

| தொ ா இ ல | விபரம் | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரத் தொகை (VAT,NBT தவிர) | மீளளிக்க கூடிய கேள்வி வைப்பு | ஏற்றுக் கொள்ளக் கூடிய ஆகக் குறைந்த கேள்வித் தொகை (VAT,NBT தவிர) | மாத வாடகை (VAT,NBT தவிர) |
|---|---|---|---|---|---|
| 1 | சுன்னாகம் பொதுச் சந்தை, (மீன் சந்தை மற்றும் மீன் வெட்டுமிடம் வாகன தரிப்பிடம் உட்பட) | 3,000.00 | 30,000.00 | 1,000,000.00 | |
| 2 | கருவாட்டுக் கடை இல 03 | 750.00 | 7,500.00 | 34200.00 | 250.00 |
| 3 | முட்டைக் கடை இல 04 | 750.00 | 7,500.00 | 36296.00 | 250.00 |
| 4 | கோழிக்கடை இல 06 | 1,000.00 | 10,000.00 | 190950.00 | 250.00 |
| 5 | இணுவில் சந்தை | 750.00 | 7,500.00 | 63650.00 | |
| 6 | ஏழாலை மயிலங்காடு ஆட்டிறைச்சிக் கடை | 750.00 | 7500.00 | 38475.00 | 250.00 |

01. காலம் :- 24.12.2019 மு ப 10.00
02. இடம் :- தலைமை அலுவலகம், வலிகாமம் தெற்கு பிரதேச சபை, கேகேஎஸ்வீதி, சுன்னாகம்.

ஏலம் சம்பந்தமான மேலதிக விபரங்களை எமது அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**க.தர்ஷன்**
**தவிசாளர்**
**வலிகாமம் தெற்கு பிரதேசசபை,**
**சுன்னாகம்.**


(C-8592)

# ராஜித எழுதித் தந்ததையே கூறினோம்!

## வெள்ளைவான் சாரதி அதிர்ச்சி வாக்குமூலம்

## குற்றப்புலனாய்வுத் திணைக்களம் நீதிமன்றில் அறிக்கை சமர்ப்பிப்பு





(கொழும்பு)

முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரட்ன கோரியதற்கிணங்கவே வெள்ளை வான் கடத்தல்கள் குறித்து ஊடகவியலாளர் சந்திப்பில் வெளிப்படுத்தியதாக, கைது செய்யப்பட்ட இரண்டு சந்தேகநபர்களும் வாக்குமூலம் அளித்ததாக குற்றப்புலனாய்வுத் திணைக்களம் தெரிவித்தது.

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர், ராஜித சேனாரட்ன ஏற்பாடு செய்திருந்த ஊடகவியலாளர் சந்திப்பில் வெள்ளை வான் சாரதி மற்றும் சாட்சி என்று கூறப்பட்ட இரண்டு சந்தேக நபர்கள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு எதிராக குற்றச்சாட்டுக்களை அடுக்கியிருந்தனர்.

இதனையடுத்து குறித்த சந்தேகநபர்கள் இருவரும் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தால் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

அவர்களிடம் விசாரணைகளை முன்னெடுத்து வரும் குற்றப்புலனாய்வுத் திணைக்களம் இதுதொடர்பாக நேற்று முன்தினம் புதன்கிழமை கொழும்பு பிரதம நீதவானுக்கு அறிக்கை சமர்ப்பித்தது. குறித்த அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது.

மேலும் ராஜித சேனாரட்ன கோரியதற்கிணங்கவே விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் தங்கம் மற்றும் வெளிநாட்டு நாணயம் தொடர்பாக ஊடகவியலாளர் சந்திப்பின்போது, பொய்யான தகவல்களை அளித்ததாக சந்தேக நபர்கள் ஒப்புக் கொண்டனர் என்றும் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினர் நீதிமன்றத்துக்கு தெரியப்படுத்தினர்.

இந்த ஒப்பந்தத்தை நிறைவேற்ற 3 மில்லியன் ரூபாயை தாங்கள் கோரியதாகவும் அமெரிக்கா அல்லது இங்கிலாந்து தூதரகத்தில் வேலையும் இரண்டு வீடுகளும் வழங்க ராஜித சேனாரட்ன ஒப்புக்கொண்டதையடுத்து, 2 மில்லியன் ரூபாயாக அதனை குறைக்க இணங்கியதாகவும் சந்தேக நபர்கள் தெரிவித்ததாக குற்றப்புலனாய்வுத் திணைக்களம் தெரிவித்தது.

ராஜித சேனாரட்ன எழுதிக் கொடுத்ததையே தாங்கள் கூறியதாகவும் வெள்ளை வான் கடத்தல் குறித்து தாங்கள் கூறியதில் எந்த உண்மையும் இல்லை என்றும் அவர்கள் ஒப்புக்கொண்டுள்ளனர் எனவும் குற்றப்புலனாய்வுத் திணைக்களம் நீதிமன்றத்திற்கு தெரியப்படுத்தியது. (இ-7)

## இந்திய நிறுவனத்திடம் 2 கோடி ரூபா இலஞ்சம்

### முன்னாள் ஜனாதிபதியின் அலுவலகப் பிரதானி மஹாநாம, அரச மரக்கூட்டுத்தாபனத்தின் முன்னாள் தலைவர் பியதாஸ

# குற்றவாளிகள்!



## நீதிமன்றம் அதிரடித் தீர்ப்பு

## மஹாநாமவுக்கு 20 பியதாஸவுக்கு 12 ஆண்டுகள் கடூழியச் சிறை

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதியின் அலுவலக பிரதானி பேராசிரியர் ஐ.எம்.கே. மஹாநாம மற்றும் அரச மரக் கூட்டுத்தாபனத்தின் முன்னாள் தலைவர் பியதாஸ திஸாநாயக்க ஆகியோர் குற்றவாளிகளாக நீதிமன்றத்தால் அறிவிக்கப்பட்டனர்.

குறித்த வழக்கு நேற்று வியாழக்கிழமை கொழும்பு மூவரடங்கிய (சம்பத் அபேகோன், சம்பத் விஜயரத்ன மற்றும் சம்பா ஜானகி ராஜரத்ன) விசேட மேல் நீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்தபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

அந்தவகையில் ஐ.எம்.கே. மஹாநாமவுக்கு 20 ஆண்டுகள் கடூழியச் சிறைத்தண்டனையும், 65 ஆயிரம் ரூபாய் அபராதமும் பியதாஸ திஸாநாயக்கவுக்கு 12 ஆண்டுகள் கடூழிய சிறைத் தண்டனையும், 55 ஆயிரம் ரூபாய் அபராதமும் விதிக்கப்பட்டது.

இந்திய நிறுவனம் ஒன்றிடமிருந்து 2 கோடி ரூபாய் இலஞ்சமாக பெற்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட இருவருக்கும் எதிராக குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்ட பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தனர்.

இதன்பின்னர் குறித்த வழக்கின் விசாரணைகள் அனைத்தும் கடந்த 4 ஆம் திகதி நிறைவடைந்த நிலையில், வழக்கின் தீர்ப்பு நேற்று அறிவிக்கப்பட்டது. (இ-7)

## சஹ்ரானிடம் ஆயுதப் பயிற்சி 64 பேருக்கும் மீண்டும் மறியல்

(ஏறாவூர்)

உயிர்த்த ஞாயிறு அன்று இடம்பெற்ற குண்டுத் தாக்குதலின் பின்னர் தேசிய தௌபீக் ஜமாத் இயக்கத்துடன் (சஹ்ரானுடன்) தொடர்புபட்டதாக கைதுசெய்யப்பட்ட 63பேரின் விளக்கமறியல் இம் மாதம் 31 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டது.

நுவரெலியாவிலுள்ள தேசிய தௌபீக் ஜமாத் தலைமையகத்தில் சஹ்ரானிடம் ஆயுதப் பயிற்சி பெற்றதாக சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்ட காத்தான்குடியைச் சேர்ந்தவர்களே இவ்வாறு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.


உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னர் மேற்கொள்ளப்பட்டு வரும் விசாரணைகளின் அடிப்படையில் இவர்கள் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

இந்நிலையில், மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற நீதிபதி ஏ.சி. றிஸ்வான் முன்னிலையில் நேற்று ஆஜர்படுத்தப்பட்டபோது இம்மாதம் 31ஆம் திகதி வரை விளக்கமறியல் வைக்க உத்தரவைப் பிறப்பித்தார். சந்தேக நபர்களில் 4 பெண்கள் அடங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.

மட்டக்களப்பிலிருந்து பிற மாவட்டங்களுக்கு அனுப்பப்பட்ட சந்தேக நபர்கள் நேற்றுப் பல மாவட்டங்களிலிருந்து அழைத்து வரப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## பரஸ்பர ஒத்துழைப்பு குறித்து

## பிரதமர்-இந்தியத் தூதுவர் சந்திப்பு



(கொழும்பு)

பிரதமர் மகிந்த ராஜபக்ஷவை, இலங்கைக்கான இந்திய தூதுவர் தரண்ஜித் சிங் சந்து சந்தித்து பேச்சு நடத்தினார். கொழும்பில் நேற்று முன்தினம் காலை இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பின்போது, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இந்தியாவுக்குப்பயணம்மேற்கொண்ட பின்னர், பரஸ்பர ஒத்துழைப்பு குறித்த பல்வேறு விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டதாக பிரதமர் செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. (இ-7)

# கொல்கத்தாவில் சூடு பிடித்தது ஐ.பி.எல் ஏலம்

# 15.5 கோடிக்கு விலை போன அவுஸ்திரேலிய வீரர்

2020ஆம் ஆண்டுக்கான ஐ.பி.எல். தொடருக்கான ஏலம் நேற்று கொல்கத்தாவில் மதியம் 2.30 மணிக்கு ஆரம்பமானது.

நேற்றைய தின ஏலத்தின் போது இந்திய அணியின் வீரர்களான ரவி பிஷ்னோய் 2 கோடி ரூபாய்க்கு கிங்ஸ் லெவின் பஞ்சாப் அணியும்,எம் சித்தார்த் 20 இலட்சம் ரூபாய்க்கு கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியும், இஷான் பொரல் 20 இலட்சம் ரூபாய்க்கு கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணியும், கார்த்திக் தியாகி,1.30 கோடி ரூபாய்க்கு ராஜஸ்தான் றோயல்ஸ் அணியும்,விக்கெட் காப்பாளர் அனுஜ் ராவத் 80 இலட்சம் ரூபாய்க்கு ராஜஸ்தான் றோயல்ஸ் அணியும், யஷஸ்வி ஜெய்ஸ்வாலை 2.40 கோடி ரூபாய்க்கு ராஜஸ்தான் றோயல்ஸ் அணியும், வருண் சக்ரவர்த்தி 4 கோடி ரூபாய்க்கு கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியும், வாங்கியுள்ளது.

சகலதுறை வீரர் தீபக் ஹூடா 50 இலட்சம் ரூபாய்க்கு கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணியும், இளம் இந்திய அணியின் தலைவர் பிரியாம் கார்க் 1.9 கோடி ரூபாய்க்கு சன்ரைசர்ஸ் கைதாராபத் அணியும், விராட் சிங் 1.9 கோடி ரூபாய்க்கு சன்ரைசர்ஸ் கைதாராபத் அணியும், ராகுல் திரிபாதி 60 இலட்சம் ரூபாய்க்கு கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியும், பியூஷ் சவ்லாவை 6.75 கோடி ரூபாய்க்கு சென்னை சுப்பர் கிங்ஸ் அணியும் வாங்கியுள்ளது.

மேற்கிந்திய தீவுகள் அணியின் வேகப்பந்து வீச்சாளர் ஷெல்டன் கோட்ரெல் 8.50 கோடி ரூபாய்க்கு கிங்ஸ் லெவின் பஞ்சாப் அணி வாங்கியுள்ளது.

அவுஸ்திரேலிய அணியின் வேகப்பந்து வீச்சாளர் நாதன் கூல்டர்-நைல் 8 கோடி ரூபாய்க்கு மும்பை இந்தியன்ஸ் அணி வாங்கியுள்ளது.

இந்திய அணியின் வேகப்பந்து வீச்சாளர் ஜெய்தேவ் உனட்கட் 3 கோடி ரூபாய்க்கு ராஜஸ்தான் றோயல்ஸ் அணி வாங்கியுள்ளது.




அவுஸ்திரேலியக் கிரிக்கெட் அணியின் விக்கெட் காப்பாளர் அலெக்ஸ் கெர்ரியை 2.4 கோடி ரூபாய்க்கு டெல்லி கெப்பிடல்ஸ் அணி வாங்கியுள்ளது.

தென்னாபிரிக்க கிரிக்கெட் அணியின் வேகப்பந்து வீச்சு சகலதுறை வீரர் கிறிஸ் மோறிஸ்சை 10 கோடி ரூபாய்க்கு றோயல் செலஞ்சர்ஸ் அணி வாங்கியுள்ளது.

இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் வேகப்பந்து வீச்சு சகலதுறை வீரர் சேம் கர்ரனை 5.5 கோடி ரூபாய்க்கு சென்னை சுப்பர் கிங்ஸ் அணி வாங்கியுள்ளது.

அவுஸ்திரேலியக் கிரிக்கெட் அணியின் வேகப்பந்து வீச்சாளர் பெட் கம்மின்சை 15.5 கோடி ரூபாய்க்கு கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணி வாங்கியுள்ளது.

இங்கிலாந்து அணியின் சகலதுறை வீரர் கிறிஸ் வோக்ஸ்சை 1.5 கோடி ரூபாய்க்கு டெல்லி கெப்பிடல்ஸ் அணி வாங்கியுள்ளது.

அவுஸ்திரேலியா அணியின் சகலதுறை வீரரான கிளென் மேக்ஸ்வெல்லை 10.75 கோடி ரூபாய்க்கு கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணி வாங்கியுள் ளது.

அவுஸ்ரேலியா அணியின் துடுப்பாட்ட வீரரான ஆரோன் பின்ஞ்சை, 4.4 கோடி ரூபாய்க்கு றோயல் செலஞ்சர்ஸ் அணி வாங்கியுள்ளது.

இங்கிலாந்து அணியின் துடுப் பாட்ட வீரரான ஜேஸன் ரோய்யை 1.5 கோடி ரூபாய்க்கு டெல்லி கெப்பிடல்ஸ் அணி வாங்கியுள்ளது.


இந்தியா அணியின் துடுப்பாட்ட வீரரான றொபின் உத்தப்பாவை ராஜஸ்தான் றோயல்ஸ் அணி வாங்கியுள்ளது. றொபின் உத்தப்பா முன்னதாக கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியில் விளையாடியிருந்தார்.

இங்கிலாந்து அணியின் தலைவர் ஓய்ன் மோர்கனை கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணி 5.25 கோடி ரூபாய்க்கு வாங்கியுள்ளது.

இதில் அவுஸதிரேலியாவின் அதிரடி துடுப்பாட்ட வீரரான கிறிஸ் லின்னை 2 கோடி ரூபாய்க்கு மும்பை இந்தியன்ஸ் அணி வாங்கியுள்ளது. முன்னதாக கிறிஸ் லின் கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணியில் விளையாடியிருந்தார்.

ஐபிஎல் ஏலத்தில் எடுக்கப்படாத வீரர்களாக புஜாரா, ஹனுமா விஹாரி, யுசப் பதான், கொலின் டி கிரான்ட்ஹோம், ஸ்டுவர்ட் பின்னி, ஹெய்ன்ரின்ச் கிளாசென், முஷ்பிகுர் ரகீம், குசல் பெரேரா, நமனன் ஓஜா,டேல் ஸ்டைன், சாய் ஹோப்,மோஹித் சர்மா, ஆண்ட்ரூ டை, டிம் சவூதி, ஆடம் சம்பா, இஷ் சோதி, ஜாஹிர் கான், ஹேடன் வோல்ஷ், மஞ்சோத் கல்ரா, ரோஹன் கதம், ஹர்பிரீத் பாட்டியா, டேனியல் சாம்ஸ், பவன் தேஷ்பாண்டே, ஷாரு கான், கேதர் தேவதர், கே எஸ் பாரத், பிரப்சிம்ரன் சிங், அங்குஷ் பெய்ன்ஸ், விஷ்ணு வினோத், ஆகாஷ் சிங், குல்வந்த் கெஜ்ரோலியா, துஷார் தேஷ் பாண்டே, ரிலே மெரிடித், கே.சி.காரியப்பா, மிதுன் சுதேசன், ஆர் சாய் கிஷோர், நூர் அகமட் ஆகியோர் காணப்படுகின்றனர்.

கடந்த 12ஆவது ஐ.பி.எல் தொடருக்கான ஏலத்தில் தமிழக வீரர் வருண் சக்கரவர்த்தியை 8.40 கோடி ரூபாய்க்கு கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணி எடுத்தது. அதே விலைக்கு, ஜெய்தேவ் உனத்கட்டை ராஜஸ்தான் றோயல்ஸ் அணி ஏலத்தில் எடுத்தது. இவர்கள் இருவரும் தான், கடந்த ஐ.பி. எல். ஏலத்தில் அதிக விலை போனவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.




## பாக் அணியுடனான 2 ஆவது டெஸ்ட் முதல் நாளில் இலங்கை சுமாரான ஆட்டம்

இலங்கை மற்றும் பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டியின், முதல்நாள் ஆட்டம் நிறைவுக்கு வந்துள்ளது.இதற்கமைய முதல் இன்னிங்ஸிற்காக துடுப்பெடுத்தாடிவரும் இலங்கை அணி, நேற்றைய ஆட்டநேர முடிவில், 3 விக்கெட்டுகள் இழப்புக்கு 64 ஓட்டங்களை பெற்றுள்ளது.

ஆட்டநேர முடிவில், லசித் எம்புல்தெனிய 3 ஓட்டங்களுடனும், அஞ்சலோ மெத்தியூஸ் 8 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காது களத்தில் உள்ளனர்.

அத்தோடு பாகிஸ்தான் அணியின் முதல் இன்னிங்ஸ் ஓட்டங்களுடன் ஒப்பிடுகையில், இலங்கை அணி 127 ஓட்டங்கள் பின்னிலையில் உள்ளது.

கராச்சி மைதானத்தில் நேற்றைய தினம் நடைபெற்ற இப்போட்டியில், நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பாகிஸ்தான் அணி, முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

இதன்படி முதலில் களமிறங்கிய பாகிஸ்தான் அணி, முதல் இன்னிங்ஸிற்காக 191 ஓட்டங்களை பெற்றுள்ளது.

இதில் பாகிஸ்தான் அணி சார்பில், ஷான் மசூத் 3 ஓட்டங்களையும், அபிட் அலி 38 ஓட்டங்களையும், அசார் அலி ஓட்டமெதுவும் பொறாத நிலையிலும், பாபர் அசாம் 60 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

அசாட் சபீக் 63 ஓட்டங்களையும் ஹரிஸ் சொஹைல் 9 ஓட்டங்களையும், மொஹமட் ரிஸ்வான் 4 ஓட்டங்களையும், யாசிர் ஷா மற்றும் மொஹமட் அப்பாஸ் ஆகியோர் ஓட்டமெதுவும் பெறாத நிலையிலும் ஆட்டமிழந்தனர்.


ஷாயின் அப்ரிடி 5 ஓட்டங்களையும், நயீம் ஷா ஓட்டமெதுவும் பெறாத நிலையில் ஆட்டமிழக்காது களத்தில் இருந்தார்.

இலங்கை அணியின் பந்துவீச்சில் லஹிரு குமார மற்றும் லசித் எம்புல்தெனிய ஆகியோர் தலா 4 விக்கெட்டுகளையும் விஷ்வ பெர்னான்டோ 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

இதனைத் தொடர்ந்து பதிலுக்கு முதல் இன்னிங்சை தொடங்கிய இலங்கை அணி, நேற்றைய ஆட்டநேர முடிவில், 3 விக்கெட்டுகள் இழப்புக்கு 64 ஓட்டங்களை பெற்றுள்ளது.

இதன்போது, ஒசத பெர்னான்டோ 4 ஓட்டங்களையும், திமுத்கருணாரத்ன 25 ஓட்டங்களையும், குசல் மெண்டிஸ் 13 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

பாகிஸ்தான் அணியின் பந்துவீச்சில், மொஹமட் அப்பாஸ் 2 விக்கெட்டுகளையும், ஷாயீன் அப்ரிடி 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.இன்னமும் 7 விக்கெட்டுகள் வசமுள்ள நிலையில், இன்று போட்டியின் இரண்டாவது நாளை இலங்கை அணி தொடரவுள்ளது.



## பராக்கிரமபாகு ம.ம.வியை வீழ்த்தி

## தேசிய சம்பியனானது மகாஜனா பெண்கள் உதைபந்தாட்ட அணி

அகில இலங்கை பாடசாலை அணிகளுக்கு இடையிலான 20 வயது பெண்கள் பிரிவு உதைப்பந்தாட்ட இறுதிப்போட்டியில் தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி அணி சம்பியனானது.

இந்தத் தொடரின் இறுதிப் போட்டி நேற்று மு.ப. 11 மணிக்கு கொழும்பு சிற்றிலீக் உதைபந்தாட்ட மைதானத்தில் இடம்பெற்றது.

தெல்லிப்பளை மகாஜனா பெண்கள் அணியை எதிர்த்து பராக்கிரமபாகு மத்திய மகாவித்தியாலய பெண் அணி மோதியது.

ஆட்ட நேரமுடிவில் தெல்லிப்பளை மகாஜனா பெண்கள் அணி 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று தேசிய சம்பியனானது.



மகாஜானா கல்லூரி அணியின் வெற்றிக் கோலினை தேசிய அணி வீராங்கனை சாணு பெற்றுக்கொடுத்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.



# சுவிஸ் தூதரகப் பணியாளரின் மனநிலை பரிசோதனைக்காக மூவர் கொண்ட குழு நியமனம்

(கொழும்பு)

கடத்தி தடுத்து வைக்கப்பட்டு பாலியல் துன்புறுத்தல்களுக்கு உள்ளாக்கப்பட்டதாகக் கூறப்படும் சுவிட்சர்லாந்து தூதரகத்தின் பணியாளர் கானியா பெனிஸ்ட பிரான்சிஸின் மனநலம் தொடர்பில் பரிசோதனை செய்ய மூவர் கொண்ட விசேட நிபுணர்கள் குழுவை கொழும்பு பிரதான சட்ட வைத்திய அதிகாரி அஜித் தென்ன கோன் நியமித்தார்.

விசேட வைத்திய நிபுணர்களான லூஷான் ஹெட்டி ஆராச்சி, கபில ரணசிங்க மற்றும் புஷ்பா டி சில்வா ஆகிய வைத்திய நிபுணர்களைக் கொண்ட குழுவே இவ்வாறு நியமிக்கப்பட்டது. (இ-7)

# மிலேனியம் சவால்கள் ஒப்பந்தம் தற்காலிகமாக இடைநிறுத்தம்

## ஆராய நால்வர் கொண்ட குழு நியமனம்

(கொழும்பு)

மிலேனியம் சவால்கள் (எம்.சி.சி) ஒப்பந்தத்தை தற்காலிகமாக இடைநிறுத்துவதற்கும் அது தொடர்பில் ஆராய்வதற்காக நான்கு பேர்கொண்ட குழுவொன்றை நியமிப்பதற்கும் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது.



அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடக சந்திப்பில் கலந்து கொண்ட அமைச்சரவை பேச்சாளர், அமைச்சர் பந்துல குணவர்த்தன இதனைத் தெரிவித்தார்.

கலாநிதி லலிதசிறி குணருவன் (தவிசாளர்), டீ.எஸ். ஜெயவீர, போக்குவரத்து அமைச்சின் முன்னாள் செயலாளர், ஜனாதிபதி சட்டத்தரணி நிஹால் ஜெயவர்த்தன மற்றும் நாலக ஜெயவீர ஆகியோர் இந்த குழுவின் உறுப்பினர்களாவர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# டெங்கு ஒழிப்பு நடவடிக்கைக்கு

## சுற்றுச் சூழல் பொலிஸாரை தருமாறு யாழ்.மாவட்ட செயலகம் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் டெங்கு ஒழிப்பு வாரத்தை வினைத்திறனாக அமுல் படுத்துவதற்கு ஒவ்வொரு பிரதேச சுகாதார வைத்திய அதிகாரிகள் பணிமனைக்கும் சுற்றுச் சூழல் பொலிஸாரை தருமாறு வடக்கு மாகாணப் பிரதிப் பொலிஸ்மா அதிபரை யாழ்.மாவட்ட செயலகம் கோரியுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் இம்மாதம் பிற்பகுதி வரை டெங்கு அனர்த்த வாரமாக யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் அங்கஜன் இராமநாதன் எம்.பி.பிரகடனப்படுத்தியுள்ள நிலையில் குறித்த வேண்டுகோள் வடக்குப் பொலிஸ்மா அதிபருக்கு அனுப்பப்பட்டது.

இதன் பிரகாரம் சாவகச்சேரி-7, நல்லூர்-4, உடுவில்-10, சங்கானை -5, தெல்லிப்பழை-5, கோப்பாய்-5, பருத்தித்துறை-4, காரைநகர்-4, மருதங்கேணி-4, வேலணை-5, ஊர்காவற்றுறை-4,சண்டிலிப்பாய்-5, யாழ்ப்பாணம்-16 மற்றும் கரவெட்டி-4 ஆகிய பிரதேச சுகாதாரப் பணிமனைகளுக்கும் சுற்றுச் சூழல் பாதுகாப்புப் பொலிஸாரை தருமாறு யாழ்.மாவட்ட செயலகத்தால் எழுத்து மூலம் கோரப்பட்டது. (இ-10)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கொடிகாமம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 140 | 250 | 200 | 200 | 200 |
| உருளைக்கிழங்கு | 150 | 150 | 180 | 150 | 200 |
| பச்சைமிளகாய் | 250 | 200 | 220 | 180 | 300 |
| தக்காளி | 160 | 130 | 140 | 100 | 150 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 120 | 220 | 100 | 80 |
| கோவா | 140 | 100 | 140 | 110 | 140 |
| கரட் | 300 | 300 | 240 | 220 | 400 |
| பூசணி | 60 | 40 | 50 | 70 | 80 |
| புடோல் | 150 | 160 | 160 | 80 | 160 |
| வாழைக்காய் | 80 | 80 | 80 | 80 | 120 |
| சின்ன வெங்காயம் | 500 | 400 | — | 400 | 600 |
| பெரிய வெங்காயம் | 160 | 160 | 160 | 160 | 160 |
| பாகற்காய் | 350 | 400 | 320 | 300 | 400 |
| வெண்டிக்காய் | 140 | 100 | 80 | 80 | 160 |
| கருணைக் கிழங்கு | 80 | 80 | 80 | 80 | 120 |
| பயற்றங்காய் | 240 | 260 | 200 | 160 | 200 |
| லீக்ஸ் | 120 | 90 | 360 | 340 | 400 |
| பீற்றூட் | 150 | 200 | 200 | 80 | 200 |
| கறிமிளகாய் | 250 | 250 | 220 | 210 | 280 |
| முருங்கைக்காய் | — | — | 800 | — | 800 |
| போஞ்சி | 240 | 260 | 280 | 200 | 200 |
| கத்தரிதம்புள்ள | 200 | 160 | — | 180 | 200 |
| கீரை - 1பிடி | 50 | 50 | 60 | 60 | 80 |
| தேசிக்காய் | 60 | 80 | 80 | 100 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 50 | 30-60 | 60 | 30-50 |
| இராசவள்ளி | 250 | 300 | 200 | 220 | 220 |
| வெங்காயப்பூ | 400 | — | — | — | — |
| முள்ளங்கி | 140 | 150 | 130 | 100 | 160 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 60 | 30 | 40 |
| வல்லாரை | 15 | 60 | 30 | 30 | 30 |
| ஈரப்பலா | 80 | 110 | — | 160 | 120 |


# வலம்புரி
## 20 ஆண்டு நிறைவு விழா

காலம் 20.12.2019 (வெள்ளிக்கிழமை)
இடம் துர்க்கா மணிமண்டபம்,நல்லூர்
நேரம் பிற்பகல் 3.00 மணி

தலைவர்
திரு.சிவஞானம் வெற்றிவேலாயுதம்
(நிர்வாக இயக்குநர்-வலம்புரி)

பிரதம விருந்தினர்
பேராசிரியர் பொன்.பாலசுந்தரம்பிள்ளை
(முன்னாள் துணைவேந்தர்-யாழ் பல்கலைக்கழகம்)

சிறப்பு விருந்தினர்கள்
பேராசிரியர் ப.சிவநாதன்
(ஓய்வுநிலை,பொருளியல் பேராசிரியர்.)
பேராசிரியர் கு.மிகுந்தன்
(பீடாதிபதி, உயர் பட்டப்படிப்புகள் பீடம்,யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)
வைத்தியகலாநிதி த.சத்தியமூர்த்தி
(பணிப்பாளர், யாழ்.போதனா வைத்தியசாலை)
திருமதி P.F.சின்னத்துரை
(ஓய்வுநிலை அதிபர்)

ஆசியுரைகள்

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சார்ய சுவாமிகள்
(ஆதீன முதல்வர், நல்லை ஆதீனம்)
சிவஸ்ரீ.சபா.வாசுதேவக் குருக்கள்
(குருபீடாதிபதி, வீணாகான குருபீடம்)
அருட்திரு ரூபன் மரியாம்பிள்ளை அடிகளார்
(ஊடக வருகை விரிவுரையாளர்,திறந்த பல்கலைக்கழகம்)
சுவாமி சிதாகாசானந்தா
(வதிவிட ஆச்சாரியார், சின்மயா மிஷன், யாழ்ப்பாணம்)
கலாநிதி ஆறு.திருமுருகன்
(தலைவர்-ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை)
அதிவண.பேராயர் கலாநிதி எஸ்.ஜெபநேசன்
(முன்னாள் பேராயர், தென்னிந்திய திருச்சபை)
அல்ஹாஜ் ஏ.எம்.அஸீஸ் மௌலவி (காஸிமி)
(தலைவர்-யாழ்.கிளிநொச்சி மாவட்ட உலமா சபை)

நிகழ்ச்சி முன்னிலைப்படுத்தல்
செந்தமிழ் சொல்லருவி திரு.ச.லலீசன்
(பிரதி அதிபர்-கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக்கலாசாலை)

### நிகழ்ச்சிநிரல்

- மங்கல விளக்கேற்றல்
- இறைவணக்கம்
- வரவேற்பு நடனம்
  (பொன்னாலை சந்திரபரத கலாலய மாணவிகள்-நெறியாள்கை திருமதி ஸ்ரீதேவி கண்ணதாசன்)
- வரவேற்புரை
  திரு.கணேசன் திருமாலழகன் (வலம்புரி)
- ஆசியுரைகள்
- தலைமை உரை
- சிறப்பு விருந்தினர் உரை
- பிரதம விருந்தினர் உரை
- சிறப்புரை
  திரு.நல்லையா விஜயசுந்தரம் (வலம்புரி)
- கௌரவிப்பு நிகழ்வு
- நன்றியுரை
  திரு.மாவை.நா.கஜேந்திரன் (முகாமையாளர்-வலம்புரி)

வலம்புரியின் 20 ஆவது ஆண்டு நிறைவு விழாவில் உங்கள் அனைவரையும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் இருகரம் கூப்பி அன்புடன் அழைக்கின்றோம்.

இல.3, 2ஆம் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

-வலம்புரிக் குடும்பம்-

நடுவுநிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# கனவுகளும் பலன்களும்

## கனவில் குரங்குகள் வந்தால்...

இந்தக் கனவிற்கு ஆழ்ந்த அர்த்தங்கள் இருக்கின்றன. கனவின் முதல் இரு வரிகளிலிருந்தே உங்கள் அலுவலகம் சம்பந்தப்பட்ட ஏதோ பிரச்சினை உங்களை வாட்டுகிறது என தெரிகிறது. தனிமைப்படுத்தப்பட்டு விட்டோமோ என்ற பயமே உங்கள் மனதில் பிரதானமாக இருக்கிறது. ஆகவே அது உங்கள் கனவிலும் பிரதிபலிக்கிறது.

குரங்குகள் தாக்குவதைப் பொறுத்தவரையில் அவை உங்களை கனிகளைக் கொண்டு தாக்குவது ஒரு விநோதம். குரங்குகள் கற்களால் தாக்குவது போல் வராமல் அவை கனிகளால் தாக்குகின்றன. அப்படி என்றால் உங்களுக்கு வரக் கூடிய ஆபத்து வெளிப்படையாக வராமல் ஏதோ ஒரு நன்மை போல வருகிறது. அலுவலகம் சம்பந்தப்பட்ட எந்தக் காரியத்தையும் சற்று ஜாக்கிரதையாக கையாளுங்கள். மாற்றலோ பிரமோஷனோ புது வேலை வாய்ப்போ எதுவாக இருந்தாலும் வருகிற மூன்று மாத காலம் ஏற்க வேண்டாம். அது நன்மை தருகிற மாதிரி வெளிப்படையாக இருந்தாலும் ஏதேனும் ஒரு நன்மை ஆபத்து உள்ளிருக்கும். அடுத்ததாக நடக்கும் நிகழ்வு மழை. மழை வந்தது குரங்குகள் ஆபத்து விலகுகிறது.

மழை என்பது வளத்தைக் குறிக்கும். ஆகவே உங்களுக்கு பொருளாதார ரீதியாக ஒரு நன்மை ஏற்படப் போகிறது. பிறகு நீங்கள் ஏதோ ஒரு வீட்டிற்குள் நுழைகிறீர்கள்.

அதில் சுற்றி இருக்கிறார். இதன் மூலம் இந்த பொருளாதார நன்மை உங்களைவிட உங்கள் குடும்பத்தினருக்குத்தான் அதிக பயன்தரப் போகிறது எனத் தெரிகிறது.

ஆகவே வருகிற சில மாதங்களில் அலுவலகம் சம்பந்தப்பட்ட விடயங்களில் எச்சரிக்கையாக இருங்கள். ஒரு எதிர்பாரா பண வரவு காத்திருக்கிறது!

# தென்மராட்சியில் கம்பன் விழா

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி இலக்கிய அணி நடத்தும் கம்பன் விழா நாளை 21 ஆம் திக்தி சனிக்கிழமை மாலை 5 மணிக்கும் நாளை மறுதினம் 22 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கும் மாலை 5 மணிக்கும் சாவகச்சேரி சங்கத்தானை தமிழ்க்கோட்டத்தில் நடைபெறும்.

பேராசிரியர் அ.சண்முகதாஸ் தலைமையில் நடைபெறும் முதலாம் நாள் நிகழ்வில் கம்பவாரிதி இ.ஜெயராஜ் தலைமையில் நடைபெறும் பட்டிமன்றத்தில் இராமனின் வெற்றிக்கு பெரிதும் துணை புரிந்த உடன்பிறவாத் தம்பி குகனே என இரா.செல்வவடிவேல், த.கருணாகரன், சுக்கிரீவனே என க.குமாரதாசன், பரா.ரதீஸ், வீடணனே என பேராசிரியர் ஸ்ரீ.பிரசாந்தன், அ.வாசுதேவா ஆகியோர் வாதிடுவர்.

இரண்டாம் நாள் நிகழ்வுகள் யாழ்.பல்கலைக்கழக பொருளியல் துறைப் பேராசிரியர் செ.சந்திரசேகரம் மற்றும் கலாநிதி எஸ். ஜெபநேசன் ஆகியோர் தலைமையில் நடைபெறும்.

இதில் கம்பவாரிதி இ.ஜெயராஜ் தலைமையில் "வாழ்வியல் கம்பன்" என்னும் தலைப்பில் கருத்தரங்கு இடம்பெறும்.

கருத்துரைகளை பேராசிரியர் ஸ்ரீ.பிரசாந்தன், பேராசிரியர் தி.வேல்நம்பி, க.குமாரதாசன், கலாநிதி ஆறு.திருமுருகன், பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா ஆகியோர் வழங்குவர். (இ-5)

# 'சின்மய நாதம்' வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்.சின்மயா மிஷனின் காலாண்டுச் சஞ்சிகையான "சின்மய நாதம்" வெளியீட்டு விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணி முதல் 10.30 மணிவரை இல. 9, செட்டித்தெரு ஒழுங்கை, நல்லூரில் அமைந்துள்ள சின்மயாமிஷன் பிரார்த்தனை மண்டபத்தில் இலங்கை வங்கியின் ஓய்வு நிலை முகாமையாளர் தம்பு கதிர்வேல் தலைமையில் நடைபெறும்.

இதில் யாழ்.சின்மயாமிஷன் சுவாமி சிதாகாசானந்தா ஆசியுரை வழங்குவார். வெளியீட்டு உரையை ஆசிரியர் க.மு.நித்தியானந்தன் நிகழ்த்துவார். (இ-7)

# 250 குடும்பங்களுக்கு மரக்கன்றுகள் வழங்கல்





(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கிழக்கு சுவிஸ் ஒன்றியத்தின் அனுசரணையோடு வடமராட்சி கிழக்கு பிரதேச செயலக உத்தியோகத்தர் நலன்புரிச் சங்கத்தால் வடமராட்சி கிழக்கு பிரதேச செயலகத்திற்குட்பட்ட கிராமங்களைச் சேர்ந்த 250 குடும்பங்களுக்கு மரக்கன்றுகள் அண்மையில் வழங்கப்பட்டன. (இ-64)

# காற்றாலை நிறுவனத்துக்கு எதிராக ஒரு வாரத்துக்குள் வழக்குத் தாக்கல்

## சாவகச்சேரி பிரதேச சபை எழுத்து மூலம் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி மறவன்புலவுப் பகுதியில் அமைக்கப்பட்டு வரும் காற்றாலை குறித்து சாவகச்சேரி பிரதேச சபையின் அனுமதி பெறப்படாத திட்டங்களுக்கு எதிராக ஒரு வார காலத்துக்குள் வழக்குத் தாக்கல் செய்யப்படும் என சாவகச்சேரி பிரதேச சபை, ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு எழுத்து மூலம் தெரியப்படுத்தியது.

சாவகச்சேரி பிரதேச சபைக்குட்பட்ட மறவன்புலவுப் பகுதியில் அமைக்கப்பட்டு வரும் காற்றாலைகளை நிறுத்துமாறு கோரி நேற்று முன்தினம் புதன்கிழமை கிராம மக்கள் மற்றும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் ஒன்றிணைந்து கவனயீர்ப்புப் போராட்டத்தை சாவகச்சேரி பிரதேச சபை வரை நடத்தியிருந்தனர்.

இந் நிலையில் சபையின் அனுமதியின்றி இடம்பெற்று வரும் காற்றாலை அமைப்பு நடவடிக்கைகளுக்கு எதிராக நீதிமன்றில் வழக்குத் தொடுக்கப்பட வேண்டுமென ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் வலியுறுத்தினர்.

இதன் பிரகாரம் பிரதேச சபை குறித்த நீதிமன்ற நடவடிக்கைக்குச் சம்மதம் தெரிவித்துள்ள நிலையில் நீதிமன்ற உத்தரவின் பிரகாரம் மேலதிக நடவடிக்கை எடுக்கப்படும் என சாவகச்சேரி பிரதேச சபையின் தவிசாளர் க.வாமதேவன் எழுத்து மூலம் உறுதிப்படுத்தினார். (இ-10)

# திருவாசகம் ஓதிய பூர்த்தி நாள்

(யாழ்ப்பாணம்)

நீர்நொச்சித் தாழ்வு ஸ்ரீ சித்தி விநாயகர் தேவஸ்தானத்தில் இன்று வெள்ளிக்கிழமை திருவாசகம் ஓதிய பூர்த்தி நாள் நடைபெறும். (இ

# இராசி பலன்

**மீனம்:** நண்பர்களின் சந்திப்பால் பரவசமடைவீர்கள் எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், போசன நன்மையுண்டு, வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள்.

**மேடம்:** சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம் பெறலாம்,தேக நலனில் முன்னேற்றம் காண்பீர்கள், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும், உறவினர்களின் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு.

**இடபம்:** வியாபாரத்தை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், தாழ்ந்த சுபாவமுண்டு, சிந்தித்து செயற்பட்டு சிறப்புக்களை காண வேண்டிய நாள்.

**மிதுனம்:** மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறும் வாய்ப்புண்டு, பெரிய மனிதர்களின் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு, புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும்.

**கும்பம்:** வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், நீங்கள் பெரியளவில் மதித்த ஒருவர் அர்ப்பத்தனமாக நடந்து கொள்ளலாம், திடீர் பணச் செலவுகள் ஏற்படலாம், வேலைச்சுமை கூடும்.

**கடகம்:** உறவினர்கள் உங்கள் முன்னேற்றத்தில் அக்கறை காட்டுவர், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், இல்லத்தில் இனிய சம்பவங்கள் இடம் பெறலாம், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும்.

**மகரம்:** தந்தை வழி உறவினர்கள் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, தித்திக்கும் பயணங்கள் இடம் பெறலாம், ஆன்றோர்களின் சந்திப்பு இடம் பெறலாம்.

**சிம்மம்:** எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டும் சூழ்நிலை உருவாகும், வாக்கு மேன்மையுண்டு, பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், நண்பர்கள் வழியில் சுபதகவல்கள் வந்து சேரலாம்.

**தனுசு:** உறவினர்களும், நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், தொழில் முன்னேற்றம் கருதி முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள், உற்சாகமும் மகிழ்ச்சியும் கூடும் நாள்.

**விருச்சிகம்:** குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம் பெறலாம், தன்னம்பிக்கை துளிர்விடும் நாள், காரிய அனுகூலமுண்டு, பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள்.

**துலாம்:** மனதில் இனம்புரியாத சஞ்சலங்கள் தோன்றி மறையும், தொழில் ரீதியான பயணங்கள் இடம் பெறலாம், சுபகாரியச் செலவுகள் ஏற்படலாம், தேவையற்ற விவாதங்களைத் தவிர்ப்பது நல்லது.

**கன்னி:** ஆழ்ந்த சிந்தையுண்டு, விருந்துகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, பெரிய மனிதர்களின் சந்திப்புக்கள் இடம் பெறலாம், வழிபாட்டு சிந்தனைகள் மேலோங்கும் நாள், போசன சுகமுண்டு.

**கிரகநிலை**

| | | | |
|---|---|---|---|
| | | | ராகு |
| | இராசி பலன் | | |
| சுக் | கிரகநிலை | | |
| சனி, கேது, குரு, சூரி | புத | செவ் | சந் |

சந்திராஷ்டமம்: பூரட்டாதி, உத்திரட்டாதி

20.12.2019

மார்கழி 04, வெள்ளிக்கிழமை

சூரிய உதயம் காலை 6.23 மணிக்கு

நவமி முன்னிரவு 8.02 மணிவரை

அத்தம் முன்னிரவு 10.12 மணிவரை

சுபநேரம் 6.24-7.54 மணிவரை

இராகுகாலம் 10.54-12.24 மணிவரை

வளவன்

# ஆதனப் பெயர் மாற்றம்

யாழ்ப்பாணம் மாநகர சபைக்குட்பட்ட வட்டாரம்-14 ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள ஆதன இலக்கம் 743/7 என்னும் வரி மதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம் E.E.நீக்கிலாம்பிள்ளை என வரிமதிப்பு பதிவேட்டில் பதியப்பட்டு காணப்படுகிறது.

குறித்த ஆதனத்தினை பிரசித்த நொத்தாரிசு க.சிவலிங்கம் அவர்கள் முகதாவில் 18.09.1989 ஆம் திகதியிடப்பட்ட 8017 ஆம் இலக்க சீதன உறுதி மூலம் இல. 205/3 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியைக் கொண்ட அருளப்பு அந்தோனிப்பிள்ளை பெண் சின்னம்மா ஆகியவர்கள் கடந்த 50 வருடங்களாக தாங்கள் ஆட்சி செய்து வந்ததாக வெளிப்படுத்தி அவர்களின் புத்திரி இராமு சிவசாமி பெண் கமலாவுக்கு சீதனமாக விற்றுள்ளனர்.

பின்னர் ஆஸ்பத்திரி வீதி 205/3 இராமு சிவசாமியும் பெண் கமலாவும், கச்சேரி றெயில்வே வியூ 17/3 பாக்கிய நாதர் அன்ரனி கைம்பெண் புஸ்பவதிக்கு 12.03.2001 ஆம் திகதியிடப்பட்ட பிரசித்த நொத்தாரிசு இராமநாதன் ஜெயசிங்கம் மூலம் 2497 ஆம் இலக்கத்தில் நிறைவேற்றிய அறுதி உறுதி மூலம் அறுதியாக வழவிற்றுள்ளார். பின்னர் யாழ்ப்பாணம் பாக்கியநாதன் அன்ரனி கைம்பெண் புஸ்பவதி பிரசித்த நொத்தாரிசு யோகநாதன் சந்தியநாதன் 2004.10.09 ஆம் திகதியிடப்பட்ட 808 ஆம் இலக்க அறுதி உறுதி மூலம் இராமு சிவசாமியும் பெண் கமலாவும், அறுதியாக விற்றுள்ளனர்.

பின்னர் 205/3 இலக்கத்தைச் சேர்ந்த இராமு சிவசாமியும் பெண் கமலாவும், பிரசித்த நொத்தாரிசு தீ.மு. அந்தோனிப்பிள்ளை அவர்களால் 21.09.2005 ஆம் திகதியிடப்பட்ட 2454 ஆம் இலக்க அறுதி உறுதி மூலம் றெஜி கருணசூரியதாஸ் சொலமனுக்கும் பெண் வுளோறெஞ்சியாவுக்கும் அறுதியாக விற்றுள்ளனர்.

பின்னர் யாழ்ப்பாணம் பிரதான வீதி, 143 ஆம் இலக்கத்தைச் சேர்ந்த றெஜி கருண சூரியதாஸ் சொலமனும் பெண் வுளோறெஞ்சியாவும் 05.09.2012 ஆம் திகதியிடப்பட்ட 13 ஆம் இலக்க அறுதி உறுதி மூலம் கந்தசாமி ஜெயநாதனுக்கு அறுதியாக விற்றுள்ளனர். குறித்த ஆதனம் 10.09.2013 ஆம் திகதியிடப்பட்ட 5030 ஆம் இலக்க இ.சபேசன் பிரசித்த நொத்தாரிசு மூலம் வரையப்பட்ட அறுதி உறுதி மூலம் அவுஸ்திரேலியாவில் வசிக்கும் கந்தசாமி ஜெகநாதன் தனது அற்றோனித்தத்துவகாரி கந்தசாமி ஜெகநாதன் பெண் விஜயசாளினி மூலம் தம்பிராசா சிறிஸ்கந்தராசாவிற்கு அறுதியாக விற்றுள்ளார்.

குறித்த ஆதனத்தை ஆயிலி காரைநகரைச் சேர்ந்த தம்பிராசா சிறிஸ்கந்தராசா 22.04.2019 ஆம் திகதியிடப்பட்டு பிரசித்த நொத்தாரிசு வீரகத்திப்பிள்ளை கௌதமன் முகதாவில் வரையப்பட்ட 863 ஆம் இலக்க அறுதி உறுதி மூலம் தவசீலன் சுஞ்சீவிற்கு அறுதியாக விற்றுள்ளார்.

ஆதன விபரம்:- வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் யாழ்ப்பாண மாநகரசபை யாழ்ப்பாண பிரதேச செயலர் பிரிவு சுண்டுக்குளி கோவிற்பற்று சிவியாதெரு இறை J/74 கிராமசேவகர் பிரிவில் அமைந்துள்ள இளஞ்சிங்க ஆராச்சி வளவு நில.பர 0 குளி 16.64 இது நில அளவையாளர் பி.தனராஜா 1989.09.13 ஆம் திகதி அளந்து தயாரித்த 1756 இலக்கப்படத்தில் துண்டு 1 ஆகக்காட்டப்பட்டுள்ளது. இந்த நிலப்பரப்பு பூச்சியம் குளி பதினாறு தசம் ஆறு நான்கிற்கு எல்லை.

கிழக்கு:- சாம் சுந்தரத்திற்குரிய ஆதனம்.

வடக்கு:- இளையவி தவத்திற்கும் எம் தம்பிராசாவுக்கும் உரிய ஆதனங்கள்.

மேற்கு:- கணபதி அந்தோனிப்பிள்ளைக்குரிய ஆதனம்.

தெற்கு:- தெற்கே உள்ள ஆஸ்பத்திரி வீதிக்கு போக்குவரத்து செய்யும் ஒழுங்கையும் முகப்பு மேற்படி படத்தில் துண்டு 2 எனக்காட்டப்பட்ட ஆதனமும்.

தற்போது தவசீலன் சஞ்சீவ் இவ்வாதனத்தை தனது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர் மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்தின் ஏதேனும் பகுதிக்கு உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகை பிரசுரித்த திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும் உரிமை கோராவிடத்து குறித்த ஆதனமானது தவசீலன் சஞ்சீவ் என்னும் பெயரிற்கு பெயர் மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாதனம் பெயர் மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாணம் மாநகர சபை பொறுப்பாளி அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(இம்மானுவல் ஆனல்ட்)
முதல்வர், மாநகரசபை.

(C-8581)

# உணவக வேலை ஆட்கள் தேவை

கொழும்பில் ஆரம்பிக்கப்பட்டுள்ள ஐஸ்கிறீம் மற்றும் தோசை மால் கடைக்கு

- ஐஸ்கிறீம் வெட்டிக் கொடுக்கக் கூடியவர்கள்.
- தோசை வகைகள் செய்யத் தெரிந்தவர்கள்.
- சிற்றுண்டி வகைகள் செய்யத் தெரிந்தவர்கள்.
- சமையல் வேலை தெரிந்தவர்கள்.
- உணவு ஐஸ்கிறீம் பரிமாறக் கூடியவர்கள்.

உடன் தேவை. ஆண்/பெண்கள் இருபாலாரும் விரும்பத்தக்கது.

திறமைக்கு தகுந்த சம்பளம் கிடைக்கும். உணவு, தங்குமிட வசதியுண்டு.

**தொடர்புகளுக்கு: ராஜன்- 077 771 0785**

(C-8591)

# துயர் பகிர்கின்றோம்

## திரு.பழனியப்பா இராமச்சந்திரன்

பிறப்பு 11 • 02 • 1924



இறப்பு 18 • 12 • 2019

எமது ஆசிரியை திருமதி. சிவச்சந்திரா தவராஜா அவர்களின் தந்தையும், ஆசிரியர் திரு. த.தவராஜா அவர்களின் மாமனாருமாகிய திரு.பழனியப்பா இராமச்சந்திரன் அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு துயரடைகின்றோம். அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.

(C-8590)

ஆசிரியர் கழகம்,
யா/மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை.




## மயானத்தை அழகுபடுத்தும் திட்டம்



(நெளுக்குளம்)

வவுனியா பூந்தோட்டம் இந்து மயானத்தை அழகுபடுத்தும் நோக்குடன் மரநடுகைத் திட்டம் ஒன்று நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்டது.

மயானத்தை அழகுபடுத்தும் திட்டத்தில் முதற்கட்டமாக மயானத்தின் வளாகத்தைச் சுற்றி மரக்கன்றுகள் நாட்டி வைக்கப்பட்டன.

மயான அபிவிருத்தி சங்கத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்நிகழ்வில் சங்கத்தின் தலைவர் இ.பாஸ்கரன், உபதலைவர் முகமது பைசர் மற்றும் நிர்வாக உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். (9-299)

# இரணைதீவில் பாரிய கடலட்டை கிராமம்

## 350 பேருக்கு வேலை வாய்ப்பு

## அமைச்சர் டக்ளஸ் நடவடிக்கை



(கிளிநொச்சி)

**இரணைதீவில் கடலட்டை கிராமம் ஒன்றை உருவாக்குவதற்கான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ளுமாறு துறைசார் அதிகாரிகளுக்கு கடற்றொழில் நீரகவள மூலங்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அறிவுறுத்தியுள்ளார்.**

இரணைதீவை அண்டிய கடல் பிரதேசத்தில் சுமார் 60 ஹெக்டேயர் விஸ்தீரமான கடலட்டை வளர்ப்பிற்கு பொருத்தமான சூழல் இருப்பது ஆய்வுகளின் மூலம் கண்றியப்பட்டுள்ள நிலையில் அமைச்சர் மேற்குறித்த அறிவுறுத்தலை துறைசார் அதிகாரிகளுக்கு வழங்கியுள்ளார்.

கடந்த பல ஆண்டுகளாக யுத்தம் காரணமாக இடம் பெயர்ந்திருந்த மக்கள் அண்மையில் இரணைதீவில் மீளக் குடியேறியிருந்தனர். எனினும், கடற்றொழிலை நம்பி வாழுகின்ற இரணைதீவு மக்களின் புனர்வாழ்வுக்கு கடந்த அரசாங்கத்தினால் போதிய கவனம் செலுத்தப்படவில்லை என்ற குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டு வந்தது.

இந்நிலையில் குறித்த மக்களின் பிரச்சினைகள் கடற்றொழில் அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது. இதனையடுத்து, இரணைதீவு கடல் பிரதேசத்தின் சூழலியல் தன்மைகள் தொடர்பில் ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு நாரா எனப்படும் தேசிய நீரியல்வள ஆராய்ச்சி அபிவிருத்தி முகாமை நிறுவனத்தின் அதிகாரிகளுக்கு அமைச்சர் அறிவுறுத்தியிருந்தார்.

அதன்படி, கடல் நீர்வாழ் உயிரின வளர்ப்பு, கடல் உயிரியல் கடற்படுக்கை மற்றும் சூழலியல் ஆய்வாளர்கள் கொண்ட குழுவினர் நேரடியாக இரணைதீவு பிரதேசத்திற்கு விஜயம் செய்து ஆய்வுகளை மேற்கொண்டதன் அடிப்படையில் கடல் வளர்ப்புக்கு உகந்த பிரதேசம் அடையாளம் காணப்பட்டுள்ளது. குறித்த பிரதேசத்தில் கடலட்டை கிராமம் உருவாக்கப்படும் பட்சத்தில் இரணைதீவில் மீளக்குடியேறியிருக்கும் மக்களின் வாழ்வாதாரத்தில் பாரிய மாற்றத்தை ஏற்படுத்தும் .

குறிப்பாக அடையாளப்படுத்தப்பட்ட குறித்த பிரதேசத்தில் அமைக்கப்படவுள்ள கடலட்டை கிராமத்தின் மூலம் 350 இற்கும் மேற்பட்ட இரணைதீவு மக்கள் வேலை வாய்ப்பை பெற்றுக்கொள்வதோடு வருடாந்தம் சுமார் 3 கோடி ரூபாய் வருமானத்தையும் ஈட்டிக்கொள்ள முடியும் என துறைசார் நிபுணர்களினால் மதிப்பிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (9)

## திருவாசக முற்றோதல்

(பளை)

பளை நரசிங்க வைரவர் ஆலயத்தில் திருவாசகம் முற்றோதல் நிகழ்வு எதிர்வரும் 22 ஆம் திகதி நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் புராணிகர்கள், சிவனடியார்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (9)

# கடந்த அரசு விடுவிக்காத காணிகளை இந்த அரசு விடுவிக்க வேண்டும்

## சிவமோகன் எம்.பி.கோரிக்கை

(அக்கராயன்)

கடந்த அரசின் காலத்தில் விடுவிக்கப்படாத மக்களின் காணிகளை இந்த அரசு விடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனப் பாராளுமன்ற உறுப்பினர் சிவமோகன் கோரிக்கை விடுத்துள்ளார். அவர் அனுப்பியுள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கையில்,

தர்மத்தின் குரலாய் ஒலிக்கும்

# வலம்புரி 20 ஆவது ஆண்டு நிறைவு மலர்


# சரஸ்வதி மண்டபம்

## ராஜா கிறீம் ஹவுஸ்






அனைவருக்கும் இனிய நத்தார் புதுவருட வாழ்த்துக்கள்



- யாழ்.மாநகரில் மிகப் பிரமாண்டமான மண்டபம்.
- நியாயமான கட்டணங்களுடன் கூடிய தரமான சேவை.
- எல்லா மதத்தினருக்கும் அவரவர் கலாசாரத்திற்கும் விரும்பிய நிறத்துக்கும் ஏற்ற வகையில் மணவறை அலங்காரங்கள்.
- முற்றிலும் குளிரூட்டப்பட்ட (A/C) வசதி.
- மண்டபத்துடன் இணைந்த ஐஸ்கிறீம் விற்பனை நிலையம்.





37, சேர்.பொன் இராமநாதன் வீதி
(நாச்சிமார் கோவிலுக்கு அருகில்)
யாழ்ப்பாணம்.

021 320 7369
077 923 4176



# Ahtus

வலம்புரியே நீ பல்லாண்டு காலம் வாழ்க!



**Ahtus Enterprises (Pvt) Ltd**

ஆதுஸ் என்ரபிறைசஸ் (பிறைவேற்) லிமிட்

குழந்தைகள், தாய்மார்களுக்கு
வேண்டிய அனைத்துப் பொருட்களையும்
பெற்றுக்கொள்ளலாம்.

FARLIN
YOUR BABY IS OUR CONCERN

உலகின்
அதி சிறந்ததை
உங்கள் குழந்
தைக்கு வழங்
கிடுங்கள்





இல.30, கன்னாதிட்டி றோட்,
(வண்.சிவன் கோயில் முன்பாக)
யாழ்ப்பாணம்.

Tel : 077 742 7322

தர்மத்தின் குரலாய் ஒலிக்கும்


# வலம்புரி 20 ஆவது ஆண்டு நிறைவு மலர்


மக்கள் மனங்களில் இன்று போல் என்றும் நிலைத்திட
மனமுவந்து வாழ்த்துகின்றோம்

## SHETHRABALAKA Book Shop



பத்திரிகைகள், சஞ்சிகைகள், பாடசாலை உபகரணங்கள், எழுது கருவிகள், காகிதாதிகள் மற்றும் அழகுசாதனப் பொருட்கள்



Kandy Road,
Kodikamam
Tel:- 077 220 8366

## வேலு அன் கோ

வெதுப்பக உணவு வகைகள், பிஸ்கட் வகைகள், பால்மா, ஐஸ்கிறீம் வகைகள், இனிப்புப் பண்டங்கள் மற்றும் பத்திரிகைகள் அனைத்தையும் ஒரே கூரையின் கீழ் பெற்றுக்கொள்ளலாம்.



இல. 12, சந்தை கட்டடத் தொகுதி,
மானிப்பாய் வீதி, மருதனார்மடம்.

## மணியம் ஸ்ரோர்ஸ்
## MANIUM STORES

நாளாந்த பத்திரிகைகள், சஞ்சிகைகள், சிங்கள ஆங்கில கொழும்பு பத்திரிகைகள் மற்றும் பாடசாலை உபகரணங்கள், காகிதாதிகள்




Kandy Road,
Chavakachcheri.
Tel: 077 902 4275

HOTLINE 0777 17 35 17

## IT மற்றும் ஆங்கிலம் இரட்டை டிப்ளோமா

TVEC APPROVED CENTRE



புதிய பிரிவுகள் ஆரம்பம்
20-12-2019 - (Mon)
9 am or 3pm

O/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கான

**IT Courses**
- Dip.in Information Teachnology
- Office Automation
- PC Application
- Microsoft Office
- Web Designing
- Hardware,Mulitmedia,
- Auto CAD,Java,C++,PHP

DMI COMPUTER EDUCATION
TVEC Reg.No.:P25/0056

NVQ COURSES
ICT -Full Time (Level 4 )
CAA -Full/Part Time
புதிய பிரிவுகள் 2/1/2020 ஆரம்பம்

- இலங்கை மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்டது.
- NVQ சான்றிதழ்களை வழங்கிவரும் ஒரேஒரு தனியார் கணினி நிறுவனம்

யாழில் ஆங்கிலக்கல்விக்கு No.1 பயிற்சி மையம்

DIPLOMA IN ENGLISH
SPOKEN ENGLISH
Reading Writing Listening Speaking
Foundation ENGLISH | Diploma in Fluent English Part-I | Diploma in Fluent English Part-II

சர்வதேச ஆங்கிலப்பரீட்சைகள்
IELTS
# Unique Test Tips
# 40 hrs with free 4mock exam
# Latest course Material ( Book 12)

IELTS Life Skills
திருமணம் செய்து UK செல்வோருக்கானது
• DMI , British Council இன் அங்கீகரிக்கப்பட்ட பரீட்சை பதிவு மையமாகும்

## DMI COMPUTER EDUCATION

யாழ்ப்பாணம் No.113, கன்னாதிட்டி வீதி (சயன்ஸ்ஹோல் அருகாமை) 021 222 4403

| M.M.V. வீதி, | கண்டி வீதி, (HNB வங்கி அருகாமை) | No.130,கே.கே.எஸ் வீதி, (NSB வங்கி அருகாமை) | | A9 வீதி, ஆனந்தபுரம் (மத்திய கல்லூரி முன்பாக) |
|---|---|---|---|---|
| நெல்லியடி | சாவகச்சேரி | சுன்னாகம் | சீரணிச்சந்தி சண்டிலிப்பாய் | கிளிநொச்சி |
| 021 226 2470 | 021 227 0775 | 021 224 1970 | 021 225 6665 | 021 228 5655 |
| 0777577333 | 0777227074 | 0776032300 | 0761354503 | 0776398096 |

முடிவிலா அகவை காண வாழ்த்துகின்றோம்

## மயூரா

தொலைத் தொடர்பகம்
- தொலைபேசி மீள் நிரப்பல் வசதிகள்
- பாடசாலை உபகரணங்கள்
- இணைய வசதிகள்
- நகல்பிரதி
- கைத்தொலைபேசி இணைப்புக்கள்
- காகிதாதிகள்
- பத்திரிகை விளம்பரங்கள்
- மற்றும் அச்சமைப்பு வசதிகள்

**மயூரா கூல் பார்**
ஐஸ்கிறீம்
சொக்லேற்
சிற்றுண்டி
தேநீர் வகைகள்
சாவகச்சேரி வீதி, அல்லையம்பதி துன்னாலை.

**மயூரா உணவு வழங்கல் சேவை**
சகல நிகழ்வுகளுக்குமான காலை, மாலை, மதிய உணவுகள், பலகார வகைகள் அனைத்தையும் அதற்குரிய சகல ஏற்பாடுகளுடன் பெற்றுக் கொள்ளலாம்.
021 226 3209, 077 930 4363, 077 780 5338
mayooracommunication@gmail.com

## ராஜா ஸ்ரோர்ஸ்

புதுப் பொலிவுடன்

எல்லா விதமான வர்ண பூச்சுக்கள், வீட்டு மின் இணைப்பு உபகரணங்கள் எல்லாவற்றையும் ஒரே கூரையின் கீழ் பெற்றுக்கொள்ள முடியும்.
வர்ண பூச்சு வகைகளுக்கு அதிரடி விலைக் கழிவுகள் வழங்கப்படும்
20% - 45 % வரையான கழிவுகளைப் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்..

ராஜா ஸ்ரோர்ஸ்




இருபாலை வீதி, கோண்டாவில்.

தர்மத்தின் குரலாய் ஒலிக்கும்
வலம்புரி 20 ஆவது ஆண்டு நிறைவு மலர்







தர்மத்தின் குரலாய் ஒலிக்கும்
வலம்புரி 20 ஆவது
ஆண்டு நிறைவு மலர்



வாழ்க வலம்புரி ! வளர்க உனது சேவைகள்!!
வாணி
ரெக்ஸ்
Vani Tex
அன்பர்கள், நண்பர்கள்,
வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
இனிய நத்தார் புதுவருட
வாழ்த்துக்கள்
021 222 5578 / 021 222 9286
No. 81, Grand Bazzar Road, Jaffna.


ஜீவாகாரம்
குழந்தைகள் முதல்
முதியோர் வரை பாவிக்க
உகந்தது சத்துணவு
நடுநிலை தவறா நாளிதழே உம் சேவை
தொடர வாழ்த்துகின்றோம்.
ANNA
JEEVAKARAM


Anna Coffee
100% Pure Ground Coffee
ANNA SPICED COFFEE
Superbly Blended & Roasted to a Strict Formula....


எமது புதிய தயாரிப்புக்கள்....
ANNA Chinese NOODLES
ANNA SAMBRANI
அண்ணா தொழிலகம் - இனுவில்.
TEL: 021 - 2241565,
021 7200800, 0112 - 436063


வலம்புரியே நீ பல்லாண்டு காலம் வாழ்க!
American Water
American Just drink it!
யாழ். மாவட்ட ஏக விநியோகஸ்தர்கள்
P.N.K.
Group
American
Just drink it!
589, K.K.S.Road, Jaffna.
T.P :- 021 221 7277, 021 222 3096


தர்மத்தின் குரலாய் ஒலிக்கும்
வலம்புரி 20 ஆவது
ஆண்டு நிறைவு மலர்



தூய்மையானதும் நீண்ட காலம்
பாவிக்கக்கூடியதுமான இல்லத்தரசிகளின்
ஒரே தெரிவு
லிற்றோ
LITRO GAS
12.5 kg
LITRO GAS
வலம்புரி-நீ-பல்லாண்டு
காலம் வாழ்க!
லிற்றோ காஸ்
ஏக விநியோகஸ்தர்
முடியாத பாசம்
உனக்காக அழும் விழிகள்
நீ மட்டும் சாய்ந்து கொள்ள தோள்கள்
உன்னைபார்த்துக்கொள்ளும்
ஒரேயொரு தேவதை "அம்மா"
LITRO GAS
தேசத்தின் பசிபோக்கிடும்
எரிவாயு விநியோகஸ்தர்
S.V.Murugesu
Litro Gas Distributor
106, Hospital Road, Jaffna.
T.P - 021 492 5830
021 222 4341
Branch :- No-288, A9- Road,
Karadipokku, Kilinochchi,
T.P - 021 492 5827


வாடிக்கையாளர் அனைவருக்கும் இனிய நத்தார் புதுவருட வாழ்த்துக்கள்
Since 1978
நடராசா கஜந்தன்
NJ
நியூ மைதிலி
ஜுவலர்ஸ்
அன்புள்ள அப்பா
காலத்தை வெல்லும் கலை
நுட்பத்துடன்மின்னும் பொன்நகையால்
மேலும் உங்கள் புன்னகை
ஒளிரும் விரையுங்கள்
நியூ மைதிலிக்கு
வாடிக்கையாளர் அனைவரும் 2020 ஆம்
ஆண்டிற்குரிய உங்களுக்கான நாட்காட்டியை
எம்மிடம் வந்து பெற்றுக்கொள்ளவும்
ஒரிஜினல் தங்க நகைகளை
பெற்றுக்கொள்ள நீங்கள் நாடவேண்டிய இடம்
இல.38,40, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
Tel : 021 221 7878 Fax : 021 221 7877
newmaithily40@gmail.com
newmaithily Jewellers
0094 21 221 7878

தர்மத்தின் குரலாய் ஒலிக்கும்
வலம்புரி 20 ஆவது ஆண்டு நிறைவு மலர்


# மாபெரும் பண்டிகைக்கால சலுகை!!!

நீர் சுத்திகரிப்பு துறையில் முன்னோடியும் மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமான **Everpure Hi-Tec (Pvt) Ltd.** இடமிருந்து **10% - 40 %** வரையிலான விலைக்கழிவும் மற்றும் பரிசுப் பொருட்களும்

☞ வீட்டிற்குரிய **RO Water System - 24,999/=** லிருந்து




☞ காரியாலயம், தொழிற்சாலைகளுக்கான

**RO Water Filters**



மணிக்கு 25 - 30 Lits - **54,400/=**
மணிக்கு 50 - 60 Lits - **115,400/=**
மணிக்கு 125 - 150 Lits - **275,000/=**
மணிக்கு 250 - 300 Lits - **375,000/=**

**Everpure Hi-Tec (Pvt) Ltd.**
No.581, K.K.S Road, Jaffna. (மனோகரா சந்திக்கு அருகாமையில்)
HOTLINE: 075 331 3310 ☎ 021 222 6888

☞ **உங்கள் வீட்டில் கல்சியம், காவிபடிதல் பிரச்சனையா?!!!**




உங்கள் வீடுகளில் பொருத்தப்பட்டிருக்கும் விலையுயர்ந்த Tiles, Bathroom Fittings, Washing Machine களை *கல்சியம், மக்னீசியம், மற்றும் காவிப் படிவு* களிலிருந்து பாதுகாக்க **EVRO WATER SOFTENER**ஐ பொருத்தி பயன்பெறுங்கள்

☞ **HYBRID கழிவுநீர் சுத்திகரிப்பு இயந்திரம்**




அனுகூலங்கள்:
- குறைந்த செலவு
- சிறிய இட பரப்பு போதுமானது (6' X 4')
- நிலத்துக்கு அடியில் வைக்கக்கூடியது
- நிரம்பி வழியாதது
- துர்நாற்றம், கிருமிகள் அற்றது

உங்களின் வீடு மற்றும் தொழிற்சாலை (Toilet, Kitchen, Bathroom, Washing Machine) கழிவுகளை மீள்சுழற்சி முறையில் சுத்திகரித்து மீண்டும் பாவனைக்கு உகந்த நீராக மாற்றித்தரும்



## உங்களை சிறந்த பேச்சாளராக்கும் பிரயோக நாளாந்த நிகழ்ச்சித் திட்டம் !

தலைநகரில் தங்குமிட வசதியுடன் ஒரேயொரு முழுநேர கல்விநெறி

**சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் மூலம் சாதாரண தரத்துக்கு தோற்றியவர்களுக்கு விசேடமானது!**

**களனியில், ஹட்டனில்**
**எம்மிடம் 28 நாட்கள் போதும்.**

# ஆங்கிலம் பேச்சுப் பயிற்சி முகாம்

உணவு பானங்கள், தங்குமிட வசதியுடன் முழுமையான பாடநெறிக் கட்டணம் ரூபா **33,900** (தவணைக் கட்டணங்களாகச் செலுத்தலாம்)

பெண்பிள்ளைகளுக்கான தனியான தங்குமிட வசதி வழங்கப்படும்.

- ☐ 28 நாட்களுக்குள் உங்களைத் திறமையாக ஆங்கிலம் பேசும் ஆங்கிலப் பற்றுடைய நபராக்குவதை நாம் உறுதிப்படுத்துகிறோம்.
- ☐ முதல்5 நாட்களின் பின்னர் நீங்கள் சிங்களம் மற்றும் தமிழ் மொழியில் பேசுவது நிறுத்தப்படும்.
- ☐ முதல் 5 நாட்களுக்குள் ஆங்கிலம் பேசுவதற்கு வேண்டிய பின்னணியை நாம் ஏற்படுத்துவோம்.
- ☐ நீங்கள் அறியாத மொழியைப் பழகவேண்டியது அந்த மொழியின் மூலமே. ஆங்கிலத்தை ஆங்கிலம் மூலமே நாம் கற்பிப்போம். இலகுவாக ஆங்கிலம் பேசும் அறிவை நாம் உறுதிப்படுத்துகிறோம்.

**துரித அழைப்பு : 0715669641**

## சிங்கள மொழி பயிற்சி முகாம் 15 நாட்களுக்கு

- ☐ சிங்களம் கற்கக்கூடிய ஒரு சிறந்த வாய்பை தவறவிடாதீர்கள்.
- ☐ விரைவில் கற்கக்கூடிய வகையில் தாங்கள் கற்பிக்கவுள்ளோம்.
- ☐ இவ் கற்கைநெறி 60 பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளது
- ☐ முழுமையான சிங்களவர்கள் போல் பேசப்பழகுதல்
- ☐ ஒவ்வொரு பிரிவுக்கும் 20 பேர் வரை அனுமதிக்க உள்ளனர்

பதிவுக்கட்டணம் 21,900/- மட்டுமே

- ஆங்கில பயிற்சியுடன் சிங்கள பாடநெறியையும் தெரிவு செய்பவர்களுக்கு 20% விசேட கழிவு உண்டு
- பாடநெறி முடிவில் பட்டமளிப்பு விழா நடைபெற்று இறுதிச் சான்றிதழ் வழங்கப்படும்


BLOOMING BUDS — The Wisdom of children

**BLOOMING BUDS INTERNATIONAL E CAMPUS SPOKEN ENGLISH CAMP**
Head Office : No. 40, Kandy, Dalugama, Kelaniya. T.P. : 075 4933349 / 0112912641
www.bloomingbudsecampus.com facebook.com/bloomingbuds international ecampus
Hatton Branch : No. 43, Darawela Rd, Dickoya, Hatton. Telel: 051 2222741 / 070 3318641

தர்மத்தின் குரலாய் ஒலிக்கும்

# வலம்புரி 20 ஆவது ஆண்டு நிறைவு மலர்

## வலம்புரி தர்மத்தின் குரல் முன்னாள் முதலமைச்சர் வாழ்த்து



இலங்கையின் வட பகுதியில் பிரசுரிக்கப்படும் தமிழ் தினசரி பத்திரிகைகள் அரசியல் கள நிலவரங்களையும் பாராளுமன்ற செய்திகளையும் நாட்டு நடப்புக்கள் பற்றியும் அவற்றின் ஸ்திரமற்ற நிலைப்பாடுகள் பற்றியும் ஏனைய பிற தகவல்களையும் நாளாந்தம் மக்களுக்கு வழங்குகின்ற அரும் பணியை சிறப்பாக ஆற்றி வருவது நாம் அனை வரும் அறிந்ததே. அந்த வகையில் கடந்த 20 வருடங்களாக தமிழ் மண்ணில் தர்மத்தின் குரலாக ஓங்கி ஒலித்துக் கொண்டிருக்கும் வலம்புரி நாளிதழின் நடுநிலையான செயற்பாடு மக்களால் போற்றப்படுகின்றது.

விற்பனை மேம்படுத்தலையும் இலாப நோக்கையும் அடிப்படையாகக் கொண்டு சில பத்திரிகைகள் மக்களுக்கு தவறான பல பரபரப்பூட்டக்கூடிய தகவல்களை வெளியிட்டு அதன் மூலமாக வளம் பெறுவது இன்று கண்கூடு. ஆனால் பத்திரிகைகள் உண்மையான செய்திகளையும் திரிபுபடுத்தப்படாத நடுநிலையான தகவல்களையும் வழங்குவது அவசியமாகும். வலம்புரி நாளிதழின் மிகக் குறுகிய கால வளர்ச்சியானது அதன் நடுநிலைத் தன்மையை எடுத்துக்காட்டுவதாகும். வேறு சில தமிழ்ப் பத்திரிகைகள் போன்று திரிபுபடுத்தப்பட்ட செய்திகளையும் சார்பு அரசியல் கலப்புள்ள செய்திகளையும் பிரசுரிப்பதற்கு பதிலாக உண்மையான கள நிலவரங்களை உண்மைச்செய்தியாக மக்களுக்குச் சென்றடையச் செய்வதில் வலம்புரியின் பங்களிப்பு மிக உயரியது.

பத்திரிகைகள் இன்றைய அரசியல் நிலைவரங்களின் அடிப்படையில் மக்களுக்கு உண்மைச் செய்திகளை வழங்குவதுடன் மட்டும் நின்றுவிடாது மொழிசார்ந்த தமது இனங்களின் எதிர்கால வளர்ச்சிக்கும் பண்பட்டதொரு சமூகத்தை உருவாக்குவதற்கும் அரும்பாடுபடவேண்டும். காலம்காலமாக பேரினவாதிகளால் ஏமாற்றப்பட்ட எமது சமூகம் தொடர்ந்தும் ஏமாற்றப்படுகின்ற நிலையில் இருந்து சற்று விலகி தமிழ் மக்களின் தேவைகளையும் உரிமைகளையும் அவர்களின் சுயாட்சியையும் தாமே பெற்றுக்கொள்ளக்கூடிய வகையில் பத்திரிகைகள் அவர்கள் சார்பில் நடந்து கொள்வது அவசியம். மத்திய அரசின் கட்டுப்பாடுகளில் இருந்து எம் மக்கள் விலகி தம்மைத்தாமே ஆளக்கூடிய ஒருநிலையை உருவாக்குவதற்கு அனைத்துத் தமிழ்ப் பத்திரிகைகளும் தம்மாலான உதவிகளையும் வழிகாட்டல்களையும் வழங்குவதற்கு முன்வரவேண்டும் என இச்சந்தர்ப்பத்தில் விநயமாக வேண்டிக் கொள்கின்றேன்.

இன்றைய தினம் அகவை இருபதை நிறைவு செய்து சிறப்பாக இயங்கிக் கொண்டிருக்கின்ற வலம்புரி நாளிதழ் மென்மேலும் வளர்ச்சி பெற்று ஒரு முன்னணித் தமிழ் நாளிதழாக வெளிவர எமது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன். வலம்புரிச் சங்குநாதம் தமிழ் உலகெங்கும் பரவி ஒலிக்கட்டும்.

**நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன்**
**முன்னாள் முதலமைச்சர், வடமாகாணம்,**
**இணைத் தலைவர் , தமிழ் மக்கள் பேரவை.**

## மக்களின் நன்மதிப்பு பெற்ற வலம்புரி மாநகர முதல்வர் வாழ்த்து




தமிழ் மொழியை வளர்த்து நாடு நலம் பெற கடந்த இரண்டு தசாப்தங்களாக நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் நாளிதழாக மக்களின் நன்மதிப்பு பெற்ற வலம்புரி சங்குநாதம் பத்திரிகை பல்லாண்டு காலம் சீரும் சிறப்புடன் செயற்பட வேண்டும் என மனமார வாழ்த்துகின்றேன்.

மேலும் இப்பத்திரிகையின் வளமான சேவை எம்மவர்க்கு என்றும் வேண்டும் என இதய பூர்வமாக வாழ்த்துகின்றேன்.

**இம்மானுவல் ஆனல்ட்**
**முதல்வர், யா. மா.சபை.**

## வலம்புரி நீதியின் குரல் செஞ்சொற் செல்வர் ஆசி



இருபது ஆண்டுகளாக எம் மண்ணில் வெளி வரும் வலம்புரி பத்திரிகையின், ஆண்டு விழாக் குறித்து வாழ்த்துவதில் மிகவும் ஆனந்தமடைகிறேன். 1999 முதல் இன்று வரை மக்களின் மனதைக் கவர்ந்த பத்திரிகையாக வலம்புரி மிளிர்வது அனைவரும் அறிந்ததே. அரிய தகவல்களோடும், சிறந்த ஆசிரியர் கருத்தோடும் தினமும் வெளிவரும் வலம்புரிக்கு, வாசகர் தொகை அதிகரித்துக் கொண்டே செல்கின்றது. குறிப்பாக எங்கள் மண்ணில், நீதி நிலைத்திடக் காத்திரமான பங்களிப்பினை வலம்புரி வழங்கி வருகிறது. தமிழர்களின் பூர்வீக சமயமாகிய சைவசமயத்துக்கு உரிய கௌரவம் வழங்கி வரும் வலம்புரி பத்திரிகையை நாம் நன்றியோடு வாழ்த்தக் கடமைப்பட்டுள்ளோம். சைவ சமயத்துக்கு இடையூறுகள் வரும் போதெல்லாம் வலம்புரி நீதி நெறியில் நின்று குரல் கொடுப்பது மறக்க முடியாதது.

இன்று எம் மத்தியில் மக்களை ஆற்றுப்படுத்தும் சக்திகளிலொன்றாக ஊடகங்கள் விளங்குகின்றன. ஊடகங்கள் ஊடாக அறங்களை என்றும் காக்க வேண்டும். எம் மண்ணில் மக்களை வளமாக வாழ வைப்பதற்குரிய வழிகளை ஊடகங்கள் வழங்க வேண்டும். வலம்புரி பத்திரிகை என்றும் தன் தூய பணி தொடர துர்க்கை அம்பாளைப் பிரார்த்திக்கிறேன். வலம்புரி பத்திரிகையின் பணிப்பாளர்கள், பிரதம ஆசிரியர், ஆசிரியர்கள், பணியாளர்கள் அனைவருக்கும் இதய பூர்வமான வாழ்த்துக்களையும் நல்லாசிகளையும் தெரிவித்து அமைகிறேன்.

**கலாநிதி. ஆறு.திருமுருகன்**
**தலைவர்,**
**ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,**
**தெல்லிப்பழை.**

## முல்லை. அரச அதிபரின் வாழ்த்து




சவால்கள் மற்றும் போட்டிகள் நிறையப் பெற்றதும் வலுப்பெற்று வருகின்றதுமான இன்றைய காலத்தில் உண்மைத் தன்மை மற்றும் நடுநிலைமை பேணுகின்ற சக்திவாய்ந்தவை பத்திரிகைகளே எனக் கூறின் மிகையாகாது. அவ்வகையில் வலம்புரி நாளிதழானது தமிழ் பேசும் மக்களின் பிரதேசத்திலிருந்து தடைகள் பலவற்றைத் தகர்த்தெறிந்து ஊடகத்துறையில் அகவை இருபதைக் கடந்து புதிய அகவையில் காலடி பதிப்பதையிட்டு எனது அன்பான வாழ்த்துக்களை வழங்கி நிற்பதோடு வாழ்த்துச் செய்தியை வழங்குவதிலும் பூரிப்படைகின்றேன். இன்றைய 21 ஆம் நூற்றாண்டிலே ஆதிக்கம் செலுத்துகின்ற இணையத்தளங்கள் மற்றும் ஏனைய சமூக வலையமைப்புக்களினூடாக மிக வேகமாக செய்திப் பரிமாற்றம் இடம்பெறுகின்ற போதிலும் ஒவ்வொரு தமிழ்ச் சமூகத்தினரிடையேயும் செய்திகளை சொல் வடிவிலே சுமந்து செல்லுகின்ற ஆற்றல் பத்திரிகைகளுக்கேயுரியது எனலாம்.

எனவே புதிய அத்தியாயத்தில் சுவடுபதிக்கும் வலம்புரி நாளிதழின் சேவைகள் யாவும் செவ்வனே தொடரவும் தமிழ் மண்ணிலே அகலக் கால்பதித்து அனைவரது கைகளிலும் தவழ வேண்டுமெனவும் இப்பத்திரிகைத் துறையின் வளர்ச்சிப் படியிலே தொடர்ந்து பயணிக்கும் அனைத்துக் குழுமத்திற்கும் எனது வாழ்த்துக்களை அன்போடு பகிர்வதோடு இப்பத்திரிகைத் துறையானது என்றும் ஊடக தர்மத்தின் வழி நின்று உண்மைத்தகவல்களை நடுநிலைமை தவறாது சமூகக் கட்டமைப்பினைச் சிதறடிக்காத வகையிலும் அகிலமெங்கும் உரைத்து வளர்ச்சிப் படியினை எட்டிச் செல்ல எமது நல்லாசிகளை வழங்கி நிற்கின்றேன்.

**திருமதி. றூ.கேதீஸ்வரன்**
**அரச அதிபர், முல்லைத்தீவு.**

## மக்களின் புகழ் பெற்ற வலம்புரி துணைத் தூதர் வாழ்த்து



ஊடகங்கள் மக்கள் ஆட்சியின் நான்காவது தூண் என்று கூறப்படுகின்றது. கத்தியை விட பேனா முனை கூர்மையானது என்று ஊடகத் துறையின் சிறப்பினைக் கூறுவார்கள். அந்தளவிற்கு ஊடகத்துறையின் முக்கியத்துவம் அங்கீகரிக்கப்பட்ட தொன்றாகும். இலங்கையின் ஊடகத்துறை வரலாற்றில் நாளேடுகளின் பங்கு அளப்பரியது. அதிலும் குறிப்பாக வடமாகாணத்தினைப் பொறுத்தவரையில் பல்வேறு இலத்திரனியல் ஊடகங்கள் காணப்பட்டாலும் இன்றும் நாளேடுகள் வாயிலாகவே பெருமளவு செய்திகளை மக்கள் தெரிந்து கொள்வதனை காணக்கூடியதாக உள்ளது. அந்தவகையில் யாழ். குடாநாட்டு நாளேடுகளில் நீண்ட வரலாற்றுப் பின்னணியையும் மக்களிடையே புகழ் வாய்ந்த ஒன்றாகத் திகழும் வலம்புரி நாளிதழ் வெற்றிகரமாக இருபது ஆண்டுகளை நிறைவு செய்து தன் ஜனநாயகப் பணியை தொடர்ந்து 20.12.2019 இல் அகவை 21 இல் வெற்றிகரமாக தடம்பதிக்கின்றமையையிட்டு அளவிலா மகிழ்ச்சியடைகின்றேன்.

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ் எனும் மகுடவாசகத்துடன் வெளிவரும் வலம்புரி நாளேடானது தொடர்ந்தும் தமிழ் மக்களின் மனதில் சிறப்புடன் விளங்க வாழ்த்துகின்றேன்!

இதன் வெற்றிக்காக அயராது பாடுபட்ட நாளேடு ஆசிரியர், உதவி ஆசியர்கள், செய்தியாளர்கள் மற்றும் ஊழியர்களுக்கு எனது மனமார்ந்த பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் இனிவரும் காலங்களிலும் வலம்புரி நாளிதழ் உண்மையின் உரைகல்லாக மிளிர்ந்து தமிழ் மக்கள் மனம் வென்ற நாளிதழாக தொடர்ந்து மலரவேண்டுமென எனது மனமார்ந்த வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்!

**ஸ்ரீமான் ச.பாலச்சந்திரன்**
**இந்திய துணைத்தூதர், யாழ்ப்பாணம்.**

## வரலாற்றை ஆவணப்படுத்தும் பணி பணிப்பாளர் வாழ்த்து



பத்திரிகைகள் சனநாயகத்தின் 4 ஆம் தூண் என்று சொல்லப்படுகிறது. ஒரு நாட்டில் சனநாயகம், நீதி, இனங்களுக்கிடையிலான சக வாழ்வு நிலைபெறுவதுக்குப் பத்திரிகைகள் பிரதான பங்கு வகிக்கின்றன. தினசரிப் பத்திரிகை ஒன்று ஊடகத்துறையில் 20 ஆண்டுகளை நிறைவு செய்வது என்பது ஒரு மைல் கல் ஆகும். வலம்புரி நாளிதழ் கடந்த 20 ஆண்டுகளில் ஊடகத்துறையில் பல சவால்களைச் சந்தித்தும் அனுபவங்களைப் பெற்றும் வளர்ந்துள்ளது. தமிழ் மக்களது வரலாற்றை ஆவணப்படுத்துவதில் வலம்புரி ஆற்றி வரும் பணி பாராட்டுக்குரியது. இலங்கையில் தமிழர் என்ற வரலாற்று நூலை தினசரி வெளியிட்டு இன்றைய இளைய தலைமுறையினர் தமிழினத்தின் வரலாற்றை அறிந்து கொள்ள வழிவகை செய்துள்ளதுடன் இதுபோன்ற பல வரலாற்றுத் தொடர்களைக் குறிப்பாக நூல்வடிவம் பெறாத ஆவணங்களைத் தொடர்ச்சியாக வெளியிட்டு மக்கள் மத்தியில் தகவல் தொடர்பாடலில் காத்திரமான பங்கு வகிக்கும் வலம்புரி நாளிதழின் பணி மிகவும் சிறப்பாக குறிப்பிடத்தக்கது.

வலம்புரி நாளிதழ் பிரதேச பத்திரிகையாக மட்டும் நின்றுவிடாது எதிர்காலத்தில் தேசிய நாளிதழ் என்று கூறத்தக்க வகையில் பல்லின அறிஞர்களின் ஆய்வுகளையும் கருத்துக்களையும் தாங்கி வெளிவரல் வேண்டும். இன்று இலத்திரனியல் ஊடகங்கள் பல்கிப் பெருகி இருப்பினும் அச்சு ஊடகங்களே ஊடக ஒழுக்க நெறியைப் பேணி வருகின்றன. செய்திகளின் நம்பகத்தன்மையை உறுதிப்படுத்தி வெளியிடுவதில் அச்சு ஊடகங்கள் கூடிய கவனம் கொண்டிருப்பது வரவேற்கத்தக்கது. இலத்திரனியல் ஊடகங்களும் ஊடக ஒழுக்க நெறியைப் பேணல் வேண்டும். ஒரு செய்தி , ஒரு தகவல் சமூகத்துக்கு எத்தகைய பயனைத் தரும் என்று சிந் தித்து அதனை பிரசுரித்தல் ஆரோக்கியமானது.

பத்திரிகைத் துறையில் அனுபவமிக்க முதியவர் ஒருவர் என்னிடம் பின்வருமாறு கூறினார். "முன்னைய காலத்தில் ஒரு பத்திரிகையின் முன்பக்கத்திலே ஒருவர் மறைந்த செய்தியைப் பிரசுரிக்க மாட்டார்கள். அதுமட்டுமல்ல அதிர்ச்சியான, துக்கமான செய்தியையும் பிரசுரிக்கமாட்டார்கள்." தமிழ்ப் பத்திரிகைகள் இவ்விடயம் குறித்துச் சிந்திப்பது நல்லது. வலம்புரி பத்திரிகையின் ஊடகப் பணி மேலும் சிறப்படைய என்னுடைய வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

**வைத்திய கலாநிதி த. சத்தியமூர்த்தி**
**பணிப்பாளர், போதனா வைத்தியசாலை,**
**யாழ்ப்பாணம்.**

தர்மத்தின் குரலாய் ஒலிக்கும்
வலம்புரி 20 ஆவது ஆண்டு நிறைவு மலர்


# Yarl Smart Water Solution (Pvt) Ltd


Yarl Smart Water Solution

*"Smart Water , Smart Life"*

## நீரில் உள்ள பிரச்சினைகளின் தீர்வாக நாங்கள்......




- உங்கள் வீடுகளில் உள்ள கிணற்று நீர் பிரச்சினைகளில் இருந்து விடுபட வேண்டுமா?
- வீடுகளில் பொருத்தப்பட்டிருக்கும் விலையுயர்ந்த Tiles,Bathroom Fittings,Washing machines என்பன கல்சியப்படிவுகளிலிருந்து விடுபட வேண்டுமா?
- தொழிற்சாலைகள்,உணவகங்கள், வாகன service station போன்ற இடங்களில் வெளியாகும் கழிவு நீர் பிரச்சினைகளிலிருந்து விடுபட வேண்டுமா?




05 வருடங்கள்

நீர் சுத்திகரிப்பு துறையில் திறமை வாய்ந்த தொழில்நுட்பவியலாளர்கள்

**Industrial Water Treatment Plants**






- இலவச நீர்ப்பரிசோதனை
- இலவச ஆலோசனை
- 24 Hours விற்பனைக்குப் பிந்திய சேவை
- Life Time service warranty


**Water Treatment Chemicals and Equipments.**



**Design, Construction And Maintenance of Swimming Pool & Spa**



**Design, Construction and Maintenance of Wastewater Treatment Plants**



Head Office:-No.341,K.K.S Road,
Jaffna.
021 430 0044,076 666 5267

Branch:-Karadippokku Junction,
Kilinochchi.
021 430 0045,076 1000 231

Hotline:- 077 057 3684 , 077 473 9802

தர்மத்தின் குரலாய் ஒலிக்கும்
வலம்புரி 20 ஆவது ஆண்டு நிறைவு மலர்

AHUJA
கோபுரம் சவுண்ட்ஸ்

SHURE
PEAVEY
interM
HiTone BOSS
Wharfedale Pro
D.A.S. SOUND PRODUCTS
AHUJA Redefining Sound
Soundking
YAMAHA
AKG
TOA
JBL
SENNHEISER
MX
max
BEHRINGER

ஒலிபெருக்கி சாதனங்களும்
அதற்குரிய உதிரிப் பாகங்களும்
எம்மிடம் பெற்றுக்
கொள்ளலாம்
இல. 53 மஞ்சவனப்பதி வீதி,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.



வலம்புரி நாளிதழுக்கு வாழ்த்துக்கள்
சாரங்கா
நகை மாடம்
இல.157/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி 021 222 6972, தொலைநகல்: 021 222 8869
Saranka
Nakai Maadam
Sharanga Money Exchange (pvt) Ltd.
No.157/1, Kasthuriar Road, Jaffna.
Tel: 021 222 6972, Fax: 021 222 8869.
Email:sarankajewellers@yahoo.com
Web: www.saarangajewellers.com




கல்கமுவ ஸ்ரோர்ஸ்
சகல விதமான பலசரக்கு பொருட்களை
மொத்தமாகவும், சில்லறையாகவும்,
மலிவாகவும் பெற்றுக்கொள்ளலாம்.
தொ.பே :- 021 222 0966
077 183 6625
இல. 133/1, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.



T.K.T
TKT Mark நல்லெண்ணெய்
No.1
4ஆவது தலைமுறையாக இன்றும் அதே தரத்துடன் பாரம்பரிய பழைய முறையில்
மரச்செக்கிலிருந்து ஊற்றியெடுக்கப்படும் நல்லெண்ணெய்
It's an Authentic Sesame Oil and The Best One in Our Products
மொத்த மற்றும் சில்லறை விற்பனையாளர்:
தயாரிப்பாளரும் ஏகவிநியோகத்தரும்
தில்லையம்பலம் கந்தையா ஸ்ரோர்ஸ்
நவாலி வீதி, மூத்தநயினார் கோவிலடி,
ஆனைக்கோட்டை, யாழ்ப்பாணம்.
T.P : 077 832 8828, 077 652 8633, 021 225 5718



# பாரதியின் 'ஜதி பல்லக்கு'



தகைசார் தமிழ்ப்பேராசிரியர்
அ. சண்முகதாஸ்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

இந்த மாதம் - டிசெம்பர் மாதம்- ஒரு சிறப்புமிகு மாதம். தமிழ் மொழியின் மிக முதன்மையான அடையாளமாகிய ஐயன் திருவள்ளுவனை "வள்ளுவன் தன்னை உலகினுக்கே" தந்து தன்னையும் உலகுக்குள் நுழைத்த மகாகவி சுப்பிரமணிய பாரதியார் பிறந்த மாதம் இது.

"சுவை புதிது, பொருள் புதிது, வளம்புதிது, சொற்புதிது, சோதி மிக்க நவகவிதை, எந்நாளும் அழியாத மாகவிதை" நமக்குத் தந்த நம்முடைய தமிழ்க் கவிஞனின் அகவை 138 நிறைவுபெறும் இம் மாதத்திலே அகவை 20 இனை நிறைவுசெய்யும் நம் மண்ணின் ஊடகம் வலம்புரியினை வாழ்த்தி "பல்லாண்டு" கூறி, படிப்போர் மகிழ, "பாரதியின் ஜதி பல்லக்கு" கட்டுரையை எழுதுகிறேன்.

டிசெம்பர் மாதம் முதலாம் திகதி தொடக்கம் 11ஆம் திகதி வரை சென்னையிலுள்ள வானவில் பண்பாட்டு மையம் "பாரதி பண்பாட்டுத் திருவிழா"வினைக் கொண்டாடியது. அதில் 6, 7, 8 ஆம் திகதிகளில் நடைபெற்ற பன்னாட்டுக் கருத்தரங்குக்கு எங்களை அழைத்திருந்தார்கள்.


கருத்தரங்குத் தொடக்கவிழா 6ஆம் திகதி மாலை நடைபெற்றது. எங்களை மெய்சிலிர்க்க வைத்த ஒரு நிகழ்வு அங்கு நடைபெற்றது. நாலு அல்லது ஐந்து வயதுக் குழந்தை முதல் இருபது வயது இளையவர்கள் வரையான 200 பேர் மேடையிலே பல வண்ண ஆடைகளை அணிந்து 'பாரதி பஞ்சரத்தினம்' பாடினார்கள்.

தியாகராஜசுவாமிகள் பாடிய பஞ்சரத்தினக் கீர்த்தனைகளை இசைவல்லோர் பாடுவதை நாம் கேட்டுள்ளோம். நம்முடைய பெரும் புலவனின் ஐந்து பாடல்களைத் தேர்ந்தெடுத்து 'பாரதி பஞ்சரத்தினம்' எனப் பெயரிட்டு அவற்றை அந்த 200 பிள்ளைகளும் பாடிய போது சொர்க்கத்தில் காலுக்குமேல் கால்போட்டு இருந்துகொண்டு பாரதி நாம் எல்லோரும் மகிழ்ந்ததை விட, மிக உயர்வான மகிழ்ச்சியினைப் பெற்றிருப்பான் என நம்புகிறோம்.

பாரதி பிறந்த நாள் டிசெம்பர் 11 ஆம் நாள். தமிழ் நவகவிதையினை நாவலிக்கக் கூவியழைத்த அந்த மகாகவியின் இறுதி மூச்சுப் பிரிந்து இன்றும் அங்கே உலாவிக் கொண்டு இருக்குமென நாம் நம்புகின்ற திருவல்லிக்கேணி பார்த்தசாரதி திருக்கோயிலுக்கு முன்னாலே 11.12.2019 அன்று சென்னை வானவில் பண்பாட்டு மையம் பாரதிக்கு "ஜதி பல்லக்கு" நடத்தியது.

மூவாயிரத்துக்கு மேற்பட்ட கல்லூரி மாணவர்கள் அந்த நிகழ்ச்சியிலே பங்குபற்றினார்கள். "ஜதி பல்லக்கு" என்றால் என்ன என அது தொடர்பான சுவையான தகவலைத் தரவே இக் கட்டுரையை நான் வலம்புரிக்கு எழுதுகிறேன்.

1919ஆம் ஆண்டில் எட்டயபுரம் மகாராஜா மகாகவி பாரதியைத் தன்னுடைய அரச அவையிலே வந்து தன்



கவிதையினைப் பாடும்படி அழைப்பு விடுத்தாராம். அதற்கு மறுமொழியாக நம்முடைய கவிஞன் அரசருக்கு ஓர் ஓலை எழுதினான். "ஸ்ரீ எட்டயபுரம் மகாராஜ ராஜேந்த்ர ஸ்ரீ வெங்கடேசு ரெட்டப்ப பூபதி அவர்கள் சமூகத்துக்கு:- கவிராஜ ஸ்ரீ சி. சுப்பிரமணிய பாரதி எழுதும் ஓலைத் தூக்கு" என்று தொடங்கி எழுதுகிறான்.

தொடக்கத்திலேயே மன்னனுக்கு ஒன்றை உணர்த்துகிறான். நீங்கள் அரச ஸ்ரீ ஆக இருக்கலாம், ஆனால் நானோ "கவிராஜ ஸ்ரீ" என சொல்லி வைக்கிறான். இவ்விடத்தில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற ஒரு நிகழ்வு நினைவுக்கு வருகிறது.

இங்கு பாராளுமன்ற உறுப்பினர்கள் "பா.உ." என்ற சுருக்கத்தினைப் பயன்படுத்துவர். மன்னவன் கந்தப்பு (பள்ளி ஆசிரியர்) என்னும் தன் நண்பருக்கு ஒரு பாராளுமன்ற உறுப்பினர் ஒரு மடல் எழுதி கீழே தன் பெயர் எழுதி பின்னாலே "பா.உ." எனக் குறிப்பிட்டிருந்தார். அதற்கு மறுமொழி எழுதிய மன்னவன்" மடலின் முடிவிலே தன் பெயர் எழுதி பின்னாலே "பா.உ." என எழுதியனுப்பினார்.

பாராளுமன்ற உறுப்பினர் பின்னர் அவரைக் கண்ட பொழுது "என்ன நீங்களும் "பா.உ." ஆகிவிட்டீர்களா" என்று கேட்டாராம். அதற்கு மன்னவன் "ஆம். நீங்களும் "பா.உ." நானும் "பா.உ." என்றார். நீங்கள்பாராளுமன்ற உறுப்பினர். நான் பாடசாலை உபாத்தியாயர்". இது நகைச்சுவைக்கேயன்றி பாரதியுடன் ஒப்பிடுதற்கல்ல.

பாரதி மன்னனுக்கு எழுதிய ஓலையில் "மன்னவனே நம்முடைய நாட்டிலே தமிழறிந்த மன்னர் எவரும் இல்லையே என்ற குறையை நீ மன்னவனாகி தீர்த்து வைத்துள்ளாய்" என்று குறிப்பிட்டு, தான் ஒரு குறையினைத் தீர்த்துவைத்துள்ளதாக,

**"புவியனைத்தும் போற்றிடவான்**
**புகழ்படைத்துத்**
**தமிழ்மொழியைப் புகழி லேற்றும்**
**கவியரசர் தமிழ்நாட்டுக் கில்லை**
**யெனும்**
**வசையென்னாற் கழிந்த தன்றே"**

என்று கூறுகிறான்.

ஓலையின் முடிவிலே தான் மன்னன் அவையிலே வந்து கவி சொல்லுவதென்றால் வெற்றிப் பறைகள் முழங்க வேண்டும், சாலுவைகள் (பொன்னாடைகள்) போர்க்கப்பட வேண்டும், பொற்பைகள் (பொற்கிழிகள்) வழங்கப்படவேண்டும், ஜதி பல்லக்கிலே என்னை ஏற்றி வலிய பரிவாரங்கள் சூழ நான் வர பரிசளித்து நீங்கள் பல்லூழி வாழ வேண்டும் என்று வரிசையாகக்கூறினான். அவனுடைய கவிதை அடிகள் வருமாறு:

**"ஜயப்பறைகள் சாற்றுவித்துச்**
**சாலு வைகள் பொற்பைகள்**
**ஜதிபல்லக்கு**
**வயப்பரிவா ரங்கள்முதற் பரிச**
**ளித்துப் பல்லூழி வாழ்க நீயே!"**

இவ்வாறு பாரதி மன்னனிடம் வேண்டியவை யாவும் கொடுபட்டனவோ என்பது பற்றிச் சான்று எதுவும் இல்லாமையால், அப் பெருங்கவிஞனின் ஆசைகளை, சென்னை வானவில் பண்பாட்டு மைய நிறுவுநர் வழக்கறிஞர் ரவி கல்யாணராமன் தீர்த்துவைக்க எண்ணிய தன் விளைவே "ஜதி பல்லக்கு" என்னும் நிகழ்வாகும். இது புதிய நிகழ்வல்ல. ஆண்டாள், "நூறு தடா நிறைந்த அக்கார அடிசில் சொன்னேன்" என்று அன்று நேர்ந்ததைப் பிற்காலத்தில் இராமனுசர் நூறு தடாவில் அக்கார அடிசில் பண்ணிப் படைத்ததை நாம் அறிவோம்.

இது போலத்தான் நமது கவி ஆசைப்பட்ட ஜதிபல்லக்கு நன்றாக அமைக்கப்பட்டு அவனுடைய திருவுருவம் அப்பல்லக்கில் ஏற்றப்பட்டு சால்வைகள், பொற்கிழி (பின்னர் இது தற்போது தமிழ்நாட்டிலுள்ள ஒரு பெருங்கவிஞனுக்கு வழங்கப்பட்டது) எல்லாம் வைக்கப்பட்டு, பேரிகை கொட்ட, பெருந்திரளானோர் புடை சூழ, கற்றவர்கள், தமிழ்நாடு அரச அமைச்சர்கள் முதலானோர் அப்பல்லக்கினைச் சுமந்து வந்த காட்சி கண்கொள்ளாதது. நம்முடைய இனத்துக்கும் மொழிக்கும் உலக முகவரி தந்த மகாகவிக்கு நாம் வேறு என்ன கைம்மாறு செய்யலாம்?

# யாழ்ப்பாணத்தில் அகராதிக் கலை

## சில குறிப்புக்கள்



பேராசிரியர்
எஸ். சிவலிங்கராஜா

தமிழ்க் கல்வி, புலமை மரபிலே புதுவதாகப் புகுந்து நிலையான இடத்தைப் பெற்ற துறைகளுள் அகராதித் துறையும் ஒன்றாகும். அகராதித்துறை, அகராதி இயல், அகராதிக்கலை முதலான சொற்களை அகராதி பற்றிய ஆய்வாளர்கள் பயன்படுத்துகின்றனர். நாம் இக்கட்டுரையிலே அகராதிக்கலை என்ற சொல்லையே பயன்படுத்துகின்றோம்.

யாழ்ப்பாணத்துக் கிராமங்களிலே பிரச்சினைக்குரிய வினாக்களைத் தொடுப்பவனை அல்லது பல்வேறு அர்த்தங்களிற் பேசுபவனை " அவன் அகராதி பிடிச்சவன்" என்று கூறும் வழக்கம் நீண்ட காலமாக நிலவிவந்தது. இன்றும் சிறுபான்மையாக வழக்கில் உள்ளது. யாழ்ப்பாணத்துப் பாமர மக்களிடையே அகராதி என்பதன் கருத்துநிலை விளங்காதவற்றை விளங்க/ விளக்க உதவுவது என்பதற்கு மறுதலையாக வழங்கி வந்தமை வியப்புக்குரியது. அகராதி படிச்சவன் என்பது அகராதி பிடிச்சவன் என மருவியதோ என்பதும் ஆய்வுக்குரியது. எனவே யாழ்ப்பாணத்துக் கல்வி மரபிலே அகராதியின் தோற்றம், வளர்ச்சி, பண்பாடு பற்றி அறிவதும் ஆராய்வதும் இன்றியமையாததாகும்.

யாழ்ப்பாணத்துச் சமூகத்தில் நீண்ட நெடுங்காலமாக நிலவிவந்த மரபுவழிக் கல்விப் பாடத்திட்டத்திலே நிகண்டுகளுக்கு மிக முக்கிய இடம் இருந்தது. அக்காலத்திலே நிகண்டு படிக்காதவனைப் படித்தவனாகச் சமூகம் அங்கீகரிக்கவில்லை. தமிழிலே பலவகையான நிகண்டுகள் காலத்திற்குக் காலம் தோன்றியுள்ளன. இவற்றிலே மண்டலபுருடரின் சூடாமணி நிகண்டு சிறப்பானதென மரபுவழிப் புலமையாளர்கள் கூறியுள்ளனர். 19 ஆம் நூற்றாண்டுத் தமிழ்க்கல்வி மரபிலே நிகண்டுகள் பிரதான இடத்தைப் பெற்றன என்பதற்குப் பல நிகண்டுகளும் உரைகளும் அச்சுவாகனம் ஏறியமை சான்றாகும். சூடாமணி நிகண்டினை ஆறுமுகநாவலர் 1867 ஆம் ஆண்டு பதிப்பித்துள்ளார். சுன்னாகம் அ.குமாரசுவாமிப்புலவர் சூடாமணி நிகண்டுக்கு உரையெழுதியுள்ளமை குறிப்பிடத்தக்கது. தமிழ்ப் புலமையாளர்கள் நிகண்டிலே நல்ல பயிற்சியும் தேர்ச்சியும் உடையவர்களாக விளங்கினர். யாழ்ப்பாணத்துத் தமிழ்ப் புலமையாளர்கள் புதுவதாக நிகண்டினை ஆக்கும் திறன் உடையவர்களாகவும் விளங்கினர்.

19 ஆம் நூற்றாண்டின் கடைக்கூறிலே (1876) வல்லை வயித்தியலிங்கம் பிள்ளை எழுதிய சிந்தாமணி நிகண்டு வெளிவந்தது. நாமறிந்தவரையிலே யாழ்ப்பாணத்திற் புதுவதாக நிகண்டொன்றினை ஆக்கியவர் வல்லை வயித்தியலிங்கம் பிள்ளை அவர்களே என்பது குறிப்பிடத்தக்கது. மாணவர்கள் மனனம் செய்து வைத்திருக்கச் செய்யுள் வடிவிலான நிகண்டுகள் வசதியாய் இருந்தன. வல்லை வயித்தியலிங்கம் பிள்ளையின் சிந்தாமணி நிகண்டு தாதுவருஷம் சித்திரை மாதம் (1876) வெளிவருவதற்கு முன்னரே யாழ்ப்பாணத்திலே அகராதியும் வெளிவந்துவிட்டது. நவீனத்துவ நோக்கில் அகராதி எழுந்தபோதும் மரபு வழிக் கல்விப் பண்பாட்டின் கட்டிறுக்கத்தைப் பேண விரும்பியவர்கள் நிகண்டினையே பெரிதும் விரும்பிக் கற்றனர், கற்பித்தனர்.

மரபு வழிப் புலமையாளர்களில் ஒரு சாரார், நிறுவன வழிவரும் அறிஞர்களுடன் இணைந்து அகராதி ஆக்கும் பணியிலே ஈடுபட்டிருந்த வேளையிலே வல்லை வயித்தியலிங்கம்பிள்ளை சிந்தாமணி நிகண்டினை இயற்றினார். நிகண்டு செய்வதற்கு ஆழ்ந்தகன்ற இலக்கிய, இலக்கண, மொழிப்புலமை வேண்டும். வல்லை வயித்திலிங்கம் பிள்ளையிடம் இவை நிரம்பியிருந்தன என்பதற்குச் சிந்தாமணி நிகண்டு சாட்சியாகும். கருதிய பொருளைக் கொடுக்கும் என்ற கருத்தில் அமையும் சிந்தாமணி என்ற சொல்லை மகுடமாக வைத்து நிகண்டினை இயற்றினார். சென்ற ஆண்டு (2013) சிந்தாமணி நிகண்டின் இரண்டாம் பதிப்பு நோக்கு வெளியீட்டாளர்களால் வெளியிடப்பட்டுள்ளது. சிறப்பான முறையில் நேர்த்தியாக இதனை ஜெயதேவன், பன்னிருகைவேலன் ஆகியோர் மீளப் பதிப்பித்துள்ளனர்.

யாழ்ப்பாணத்து மரபுவழித் தமிழறிஞர்களுக்கு நிகண்டு கடினமானதாக இருந்தது என்று கூறமுடியாது. தமிழைக் கற்றுத் தம் சமயத்தின் பால் ஈர்க்க விரும்பிய மிஷனரிமார் தமிழ்மொழியைக் கற்க விரும்பினர். அவர்களுக்குத் தமிழ்மொழியிலே வழங்கும் சொற்களுக்குச் சரியான, பொருத்தமான பொருளை அறிவதற்கு நிகண்டுகள் கடினமானவையாக இருந்தன. செய்யுள் நடையிலே கடினமான பதப்பிரயோகத்துடன் விளங்கிய நிகண்டுகளுக்குப்பதிலாக தமது தேசத்து நடைமுறையையொட்டிய அகராதிகள் ஆக்கவேண்டுமென்று விரும்பினர். அதற்காகப் பல சிரமங்களைப் பட்டுக் கடின உழைப்போடு அகராதி முயற்சியில் ஈடுபட்டனர். "தமிழ்மொழியை ஐயந்திரிபறக் கற்றாலொழியத் தமிழ்ப் பிரதேசத்தில் சேவை செய்யமுடியாதென்ற உண்மையை மிஷனரிமார் நன்கு உணர்ந்திருந்தனர் என்று பேராயர் கலாநிதி எஸ். ஜெபநேசன் குறிப்பிடுவார். அகராதி முயற்சியிலே மிஷனரிமாரை ஈடுபடவைத்தது அவர்களது கல்வித் தேவையே எனலாம்.

கடின உழைப்பும் செவ்வன திருந்தச் செய்யும் பாங்கும் கொண்ட அக்கால மிஷனரிமார் மேலைப்புல அணுகு முறைக்குள் மரபுவழித் தமிழ்ப் புலமையைப் பாயவிட்டனர். அந்தப் பாய்ச்சலின் வெளிப்பாடுகளில் ஒன்றாக அகராதி முயற்சிகளையும் குறிப்பிடலாம்.

மிஷனரிமாரின் அகராதி முயற்சிகளுக்கு யாழ்ப்பாணத்து மரபுவழித் தமிழ்ப் புலமையாளர்கள் மிகுந்த பங்களிப்புச் செய்தனர். யாழ்ப்பாணத்திலே மிஷனரிமார் அகராதி தொகுக்கும் பணியிலே ஈடுபடுவதற்கு முன்னர் வீரமாமுனிவரின் சதுர அகராதியும் உறோட்லரின் தமிழ் ஆங்கில அகராதியொன்றும் வெளிவந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. சதுரகராதியின் முன்பக்கத்திலே வீரமாமுனிவர் "அருளிச் செய்த" சதுரகராதி என்றிருப்பதை அவதானிக்கும் பொழுது ஆரம்ப காலத்தில் அகராதியும் அருளிச்செய்யும் பணியாகவே கருதப்பட்டது என்பது புலனாகின்றது.

தனிமனித முயற்சியாலே சாத்தியமாவது கடினம் என்பதை உணர்ந்த மிஷனரிமார் கூட்டுமுயற்சியாக அகராதி ஆக்கும் பணியை மேற்கொண்டனர். புரட்டஸ்தாந்து மதத்தினரிடையே பல பிரிவுகள் இங்கு நிலவியபோதும் அகராதி முயற்சியில் அவர்கள் ஒருமுகமாக ஒன்றுபட்டு உழைக்கத் திட்டமிட்டனர். சேச்மிஷன், மெதடிஸ்த மிஷன், அமெரிக்க மிஷன் ஆகியவற்றைச் சேர்ந்த அனைவரும் அகராதிப் பணியில் ஒன்றாக உழைக்க முன்வந்ததோடு மதமாற்றம் பெறாத மரவுவழித் தமிழ்ப் புலமையாளர்களையும் இணைத்துக் கொண்டு பணியை ஆரம்பித்தனர்.

1833 ஆம் ஆண்டு வண.ஜே.நைற் என்பவர் தலைமையிலே தமிழ்- ஆங்கிலம், ஆங்கிலம்- தமிழ் அகராதிகளை ஆக்குவதற்குத் திட்டமிட்டனர். அகராதி ஆக்கும் முறையியலை நன்கு அறிந்திருந்த வண நைற் கொழும்பு காபிரியேல் திசெரா, உடுவில் சந்திரசேகர பண்டிதர் இருபாலை சேனாதிராஜ முதலியார் இன்னும் சில தமிழறிஞர்கள் ஆகியோரின் உதவியுடன் சொற்களைத் தொகுத்து விளக்கும் பணியில் ஈடுபட்டிருந்தார். ஏறத்தாழ ஆறு ஆண்டுகளாக இப்பணி முன்னெடுக்கப்பட்டது. துரதிர்ஷ்டவசமாக 1938 ஆம் ஆண்டு வண.நைற் அவர்கள் இவ்வுலக வாழ்வை நீத்தார்.

வண.நைற் அவர்களின் தலைமையின் கீழ் தொகுக்கப்பட்ட விடயங்களை ஆதாரமாகக் கொண்டு வண.லெவி ஸ்பால்டிங் என்பவர் 1842 இல் ஒரு தமிழகராதியை வெளியிட்டார். வண.ஸ்பால்டிங் என்பவரின் வழிகாட்டலில் சந்திரசேகர பண்டிதர், சரவணமுத்துப்பிள்ளை ஆகியோர் இந்த அகராதியை ஆக்கினர்.

யாழ்ப்பாண அகராதியென்றும் மானிப்பாய் அகராதியென்றும் அழைக்கப்பட்ட இந்த அகராதியே ஈழநாட்டில் எழுந்த முதலாவது தமிழ் அகராதி என்ற பெருமைக்குரியது. **'Manual Dictionary of the Tamil Language'** என்று ஆங்கிலத்தில் அச்சடிக்கப்பட்ட முதற்பக்கத்துடன் யாழ்ப்பாண புத்தக சங்கத்தாரால் 1842 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. இந்த அகராதியின் அப்போதைய விலை 10 சிலிங்ஸ் அல்லது ஐந்து ரூபா என்பதும் குறிப்பிடத்தக்கது.

யாழ்ப்பாண அகராதி 2006 ஆம் ஆண்டு மறுபதிப்பாக கோ.இளவழகன், பூ.பத்மசீலன் ஆகியோரினால் தமிழ்மண் பதிப்பகம், சேமமடு பொத்தகசாலை ஆகிய நிறுவனங்களினூடு வெளியிடப்பட்டுள்ளது. இம்மறுபதிப்புக்குப் பேராசிரியர் கா.சிவத்தம்பி வாழ்த்துரையும் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா, பேராயர் கலாநிதி எஸ்.ஜெபநேசன் ஆகியோர் அணிந்துரையும் வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. இந்த அணிந்துரைகள் ஈழத்து அகராதி முயற்சிகள் பற்றிக் குறிப்பிட்டுள்ளன.

யாழ்ப்பாண அகராதியிலே 58,500 சொற்களுக்குப் பொருள் கூறப்பட்டுள்ளது. இன்றும் பயன்படக்கூடியதாகவுள்ள இந்த அகராதியை மீள் பதிப்புச் செய்தவர்களைப் பாராட்ட வேண்டும்.

யாழ்ப்பாணத் தமிழ் அகராதி உருவாக அரும்பாடுபட்டுழைத்த மிஷனரிமார் தாம் ஏலவே திட்டமிட்டிருந்தபடி ஆங்கில- தமிழ் அகராதி முயற்சியை முன்னெடுக்க வண. மைரன் உவின்சிலோ தலைமையில் அகராதி ஆக்கக் குழுவொன்றினை உருவாக்கினர். வண. மைரன் உவென்சிலோ, கறோல் விசுவநாதப்பிள்ளை, நெவின்ஸ் சிதம்பரப்பிள்ளை ஆகியோரின் உதவியுடன் சொற்களைத் தொகுக்கும் பணியில் ஈடுபட்டார். 1855 இல் மைரன் உவென்சிலோ விடுதலையிலே அமெரிக்கா சென்றபோது அவருக்குப் பதிலாக பீற்றர் பேர்சிவல் அகராதிப் பணியைக் கவனித்தார். உவென்சிலோ நாடு திரும்பியதும் துரிதகதியில் அகராதி வேலைகள் நடைபெற்றன. 1862 ஆம் ஆண்டு செம்மையான முறையிலே தமிழ்- ஆங்கிலப் பேரகராதி வெளிவந்தது. 67,452 சொற்களையுடைய இவ்வகராதி 976 பக்கங்களைக் கொண்டது. இவ்வகராதியே பிற்காலத்தில் எழுந்த மதறாஸ் லெக்ஷிக்கனுக்கு வழிகாட்டியாக அமைந்ததென்று அறிஞர்கள் கூறுவர்.

நிறுவனவழிவந்த கல்வி முயற்சிகளினாலே 19 ஆம் நூற்றாண்டு யாழ்ப்பாணம் பல நன்மைகளைப் பெற்றது. அதிலே அகராதிக் கலையில் நம்மவர்கள் ஈடுபட்டுழைத்தமையும் ஒன்றாகும். மிஷனரிமாரின் அனுசரணையுடன் தொடங்கிய அகராதிப் பணி பின்னர் தனியாள் முயற்சியாக இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதிவரை யாழ்ப்பாணத்திலே நடைபெற்றது.

உவைமன் கதிரைவேற்பிள்ளை, சுன்னாகம் அ.குமாரசுவாமிப்புலவர், நாவலர் கோட்டம் முத்துத்தம்பிப்பிள்ளை, பருத்தித்துறை சுப்பிரமணியசாஸ்திரிகள், நா.சி. கந்தையாபிள்ளை முதலானோர் அகராதி முயற்சிகளிலீடுபட்டுழைத்த ஈழநாட்டுத் தமிழறிஞர்கள் என்ற பெருமைக்குரியவர்கள்.

உவைமன் கதிரைவேற்பிள்ளை ஆங்கிலம், தமிழ் ஆகிய மொழிகளில் சிறந்த புலமையும் தேர்ச்சியும் உடையவர். வட்டுக்கோட்டை மிஷனரிகளோடு அத்தியந்த உறவை வைத்திருந்தவர். அத்துடன் மரபுவழித் தமிழறிஞர்களுடன் நெருக்கமான உறவைப் பேணியவர். உவைமன் கதிரைவேற்பிள்ளையின் அகராதிப் பணிக்கு யாழ்ப்பாணத்து மரபுவழித் தமிழறிஞர்கள் பலர் உதவியுள்ளனர். சுன்னாகம் அ.குமாரசுவாமிப் புலவர் கதிரைவேற்பிள்ளையின் அகராதி முயற்சிகளுக்குப் பெரிதும் உதவியுள்ளார். இதனைக் குமாரசுவாமிப்புலவரே பலவிடங்களிலும் குறிப்பிட்டுள்ளார். உவைமன் கதிரைவேற்பிள்ளை அரச உயர் பதவிகளை வகித்தவர். ஊர்காவற்றுறை நீதிபதியாகப் பணியாற்றி ஓய்வுபெற்றவர். நல்லூரில் இருந்து இவர் வாழ்ந்த வீதி இன்றும் உவைமன் றோட் என்று வழங்குகின்றது. அகராதி முயற்சியிலே தீவிரமாக ஈடுபட்டார். செம்மையாகவும் சிறப்பாகவும் அகராதி வெளிவரவேண்டும் என்பதிலே கண்ணும் கருத்துமாகவிருந்த உவைமன் கதிரைவேற்பிள்ளை அகராதி அச்சிடுவதற்குத் தயாரான •நிலையிலே இருக்கும்பொழுது அமரரானார். சுன்னாகம் அ.குமாரசுவாமிப்புலவர் உள்ளிட்ட அக்காலத்துத் தமிழறிஞர்கள் பலர் இவரைப் பாராட்டிப் புகழ்ந்துள்ளனர்.

ஸ்ரீகதிரைவேற்பிள்ளையவர்கள் எழுதிய அகராதி மதுரைத் தமிழ்ச் சங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டு மூன்று பாகங்களாக வெளிவந்தது. முதலாவது பாகம் 17, 600 சொற்களையும் இரண்டாவது பாகம் 18,100 சொற்களையும் மூன்றாவது பாகம் 28,200 சொற்களையும் கொண்டது.

உவைமன் கதிரைவேற்பிள்ளையின் தமிழ்ச்சொல் அகராதியை உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் 1998 ஆம் அண்டு மீள்பதிப்புச் செய்தமை குறிப்பிடத்தக்கது. யாழ்ப்பாணத்து அறிஞர்கள் தமிழுக்குப் புதுவதாக அறிமுகமான அகராதிக் கலையில் அதிக ஆர்வத்துடன் ஈடுபட்டனர். கல்வி பரவலாகியமையும் அகராதியின் பயன்பாட்டின் அதிகரிப்புக்குக் காரணமெனலாம்.

பல்பரிமாண ஆளுமைகொண்ட நாவலர்கோட்டம் ஆ.முத்துத்தம்பிப்பிள்ளை அபிதானகோசம் என்னும் அகராதியை ஆக்கினார். ஒருவகையிலே கலைக்களஞ்சியத்தின் தன்மையைக் கொண்டதாக அபிதானகோசம் அமைந்தது என்பர். அபிதானகோசத்துடன் ஆங்கில- தமிழ் அகராதியொன்றினையும் இவர் ஆக்கியுள்ளார். 1908 ஆம் ஆண்டு அவரது ஆங்கில- தமிழ் அகராதி வெளிவந்தது.

யாழ்ப்பாணத்தில் எழுந்த தமிழ் அகராதிகளிலே சுன்னாகம் அ.குமாரசுவாமிப்புலவர் எழுதிய இலக்கியச் சொல்லகராதி சற்று வித்தியாசமானது. பழந்தமிழ் இலக்கியங்களில் இடம்பெற்றுள்ள பெயர்ச்சொற்களுக்குப் பொருள் கூறும் இச்சொல்லகராதிக்கு மாணாக்கர் மத்தியிலே நல்ல வரவேற்பு இருந்ததாக அறிய முடிகின்றது. உவைமன் கதிரைவேற்பிள்ளையின் தமிழகராதிப்பணிக்கு உதவியமை •சுன்னாகம் அ.குமாரசுவாமிப்புலவருக்கு நல்ல பயிற்சியையும் அனுபவத்தையும் கொடுத்திருக்கும் என நம்பலாம். மரபுவழித்தமிழறிஞரான குமாரசுவாமிப்புலவர் நவீன கல்வி மரபினூடு முகிழ்ந்த அகராதிக்கலையிலே ஈடுபட்டமை குறிப்பிடத்தக்க முக்கியத்துவம் வாய்ந்தது.

அ.குமாரசுவாமிப்புலவரின் இலக்கியச் சொல்லகராதி 1944 ஆம் ஆண்டு வெளிவந்தது. ஈழத்தவர்களின் அகராதி முயற்சிகளிலே மேலைப்புலோலி நா. கதிரைவேற்பிள்ளையின் தமிழகராதிக்கும் குறிப்பிடத்தக்கதோர் முக்கியத்துவம் உண்டு.

(34ஆம் பக்கம் பார்க்க)

தர்மத்தின் குரலாய் ஒலிக்கும்
வலம்புரி 20 ஆவது ஆண்டு நிறைவு மலர்


# நொதேர்ன் சென்ரல் வைத்தியசாலை

நொதேர்ன் சென்ரல் வைத்தியசாலை இப்பொழுது ஜனாதிபதி நிதியத்தினால் இலவசமாக வழங்கப்படும் உதவித்தொகையை கோருவதற்கான அங்கீகாரத்தினைப் பெற்றுள்ளது .

நொதேர்ன் சென்ரல் வைத்தியசாலையில் மேற்கொள்ளப்படும் குறிப்பிட்ட

**எலும்பியல்**

**நரம்பியல்**

**இருதய சத்திரசிகிச்சைகள்**

மற்றும் டயாலிசிஸ் (Dialysis) ஆகியவற்றுக்கு இப்பொழுது ஜனாதிபதி நிதியத்தினால் இலவசமாக வழங்கப்படும் உதவித்தொகையை பெற்றுக்கொள்ள முடியும்.

இது தொடர்பான ஆலோசனைகள், விண்ணப்பப் படிவங்கள் மற்றும் சிகிச்சை தொடர்பான ஆவணங்கள் அனைத்தையும் இலவசமாக நொதேர்ன் சென்றல் வைத்தியசாலையிலேயே எந்தவித காலதாமதமுமின்றி செய்து தரப்படும்.

வட மாகாணத்திலேயே இவ்வங்கீகாரத்தை பெற்றுள்ள ஒரேயொரு தனியார் வைத்தியசாலை

மேலதிக தொடர்புகளுக்கு :

**உங்களின் நலன் கருதி நொதேண் சென்றல் ஆய்வுகூடத்தின் இலவச நடமாடும் மாதிரி சேகரிப்பு சேவைகள் இப்பொழுது ஆரம்பம்!**

- உங்கள் வைத்தியரால் கூறப்படுகின்ற ஆய்வுகூடப் பரிசோதனைகளை எந்தவித சிரமமுமின்றி செய்து கொள்வதற்கு அழையுங்கள்

0773439988

- பயிற்றப்பட்ட ஆய்வுகூடப் பணியாளர்கள் உங்களது வசதிகளுக்கேற்றவாறு உங்கள் வீட்டிற்கே வருகை தந்து மாதிரிகளை சேமிப்பார்கள்
- உங்களது பரிசோதனை அறிக்கைகளை காலதாமதமின்றி பெற்றுக் கொள்ளமுடியும்
- மேற்குறிப்பிட்ட தொலைபேசி இலக்கத்திற்கு அழைப்பினை மேற்கொண்டு உங்களுடைய பரிசோதனையை 10% விலைக்கழிவுடன் செய்து கொள்ளலாம்

**Northern Central Hospitals (PVT) LTD.**
342, Palaly Road, Thirunelvely, Jaffna.
, 021 221 9988, 021 222 2263
E.mail: nchjaffna@gmail.com
Web: www.nchjaffna.com


# யாழ்ப்பாணத்தில் அகராதிக் கலை

(33 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பருத்தித்துறை தும்பளையைச் சேர்ந்த சோதிட கணித சித்தாந்தியாகிய சுப்பிரமணிய சாஸ்திரிகள் எழுதிய சொற்பொருள் விளக்கம் என்னும் அகராதி 1924 ஆம் ஆண்டு வெளிவந்தது.

பல பதிப்புக்களைக் கண்ட சொற்பொருள் விளக்கம் என்னும் அகராதி மாணாக்கரின் கல்வித் தேவையை மனங்கொண்டு எழுதப்பட்டது போலத் தெரிகின்றது. மரபுவழித் தமிழறிஞரான சுப்பிரமணிய சாஸ்திரிகள் கந்தபுராணத்திற்கு உரையெழுதியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

நா.சி.கந்தையாபிள்ளையின் தமிழ் இலக்கிய அகராதி 1952 ஆம் ஆண்டு சென்னையிலே அச்சாகியது. யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கந்தையாபிள்ளை தமிழ் நாட்டையே வாழ்விடமாகக் கொண்டு தமிழ்ப்பணியாற்றியவர்.

இவரது தமிழ் இலக்கிய அகராதி இன்றும் ஆய்வாளர்க ளுக்குப் பயன்படக் கூடியது. இந்த அகராதி யிலே இன்று கிடைக்காத பல நூல்களின் விபரங்கள் அடங்கியுள்ளன. பின்வந்த இலக்கியச் சொல்லடைவுகள் பலவற்றிற்கு இத்தமிழ் இலக்கிய அகராதி வழிகாட்டியாக அமைந்தது எனக்கூறலாம்.

தமிழ் அகராதி வரலாற்றிலே புதுமை படைத்தவராக நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசரைக் குறிப்பிடலாம். தமிழ் சொற்பிறப்பு ஒப்பியல் அகராதி இவரது ஆராய்ச்சித் திறனை அகில உலகுக்கும் தெரியப்படுத்தியது எனலாம். 1938 ஆம் ஆண்டுக்கும் 1946 ஆம் ஆண்டுக்குமிடையே ஒப்பியல் அகராதியின் ஆறுபாகங்கள் வெளிவந்தன. மொழியியல் நன்கு வளர்ச்சியடையாத காலத்திலே சுவாமிகளின் அகராதி மொழியியலுடன் தொடர்புடையதாக அமைந்தமை பிரதான அம்சமாகும்.

சுவாமி ஞானப்பிரகாசரின் சொற்பிறப்பு ஒப்பியல் அகராதி அண்மையில் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தினாலே மீள் பதிப்புச் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. சுவாமி ஞானப்பிரகாசரின் பணியை வண.தாவீது அடிகள் முன்னெடுத்துச் சொற்பிறப்பு ஒப்பியல் அகராதிகளை வெளியிட்டுள்ளார். பண்டிதர் இராமச்சந்திரன் (வெள்ளை அண்ணன்) சொற்பிறப்பு அகராதியொன்றினை ஆக்கினார் என்றும் அது அச்சாகவில்லையென்றும் அறியமுடிகின்றது.

தமிழ் அகராதி முயற்சிகளில் ஈடுபட்டுழைத்த பல அறிஞர்கள் உரையாசிரியர்களாகவும் விளங்கியுள்ளனர். இந்த வகையிலே சுன்னாகம் அ.குமாரசுவாமிப் புலவர், சுப்பிரமணிய சாஸ்திரிகள், ஆ. முத்துத் தம்பிப்பிள்ளை, நா.கதிரைவேற்பிள்ளை முதலியோர் விதந்து குறிப்பிடப்படவேண்டியவர்கள். யாழ்ப்பாணத்திலே மிஷனரிமாருடன் இணைந்து சந்திரசேகரபண்டிதர் உள்ளிட்ட அறிஞர்கள், உவைமன் கதிரைவேற்பிள்ளை, ஆ.முத்துத்தம்பிப்பிள்ளை, அ.குமாரசுவாமிப் புலவர், நா. கதிரைவேற்பிள்ளை, நா.சி. கந்தையாபிள்ளை, சுப்பிரமணிய சாஸ்திரிகள், சங்கரபண்டிதர், சைமன் காசிச் செட்டி, சுவாமி ஞானப்பிரகாசர், தாவீது அடிகள், பேராசிரியர் சுபதினி ரமேஷ், அ.சிவஞானசீலன் முதலான பலர் அகராதி முயற்சியிலே ஈடுபட்ட பெருமைக்குரியவர்கள். இந்த வரிசையிலே இன்று நடராசா சிறீரஞ்சனும் இணைந்து கொள்கின்றார்.

யாழ்ப்பாணத்திலே தோன்றிய யாழ்ப்பாண அறிஞர்களால் தோற்றுவிக்கப்பட்ட அகராதிகள் பற்றியும் அவற்றின் தார தம்மியம் பற்றியும் சிறப்பான ஆய்வு செய்யப்படவேண்டியது அவசியமாகும்.

இந்த நீண்ட நெடிய பின்னணியிலே அண்மையில் வெளிவந்த, நடராசா சிறீரஞ்சனின் யாழ்ப்பாணத் தமிழ் அகராதி, யாழ்ப்பாணச் சொல் அகராதி ஆகியவற்றையும் இணைத்து நோக்குதல் வேண்டும். இயல்பாகவே அகராதியியலில் ஆர்வமுடையவரான சிறீரஞ்சன் சர்வதேச அகராதியியல் மகாநாடுகளிலே ஆய்வுக் கட்டுரைகள் படித்தவர். கடின உழைப்பு, மொழி ஆற்றல், நவீன பழந்தமிழ் இலக்கியப் பரிச்சயம், உடைய சிறீரஞ்சனின் முயற்சியைப் பாராட்ட வேண்டும்.

இந்த அகராதிகள் காலத்தின் தேவையை உணர்த்தி நிற்கின்றன. மூத்த மொழியியற் பேராசிரியரான சுசீந்திரராஜவினுடைய வழிகாட்டலுடன் இவர் இந்த அகராதிகளை ஆக்கியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த அகராதிகளின் அமைப்பு, உள்ளடக்கம், அச்சுமுறைமை முதலான்வை மிகச் சிறப்பாக உள்ளன. கூட்டு முயற்சியாக, நிறுவன வழி வெளி வரவேண்டிய அகராதி முயற்சியிலே தனி ஆளாக நின்று உழைத்து அகராதி வெளியிட்ட சிறீரஞ்சனைப் பாராட்டுகிறோம்.

பின்னர் இந்த அகராதிகள் பற்றித் தனியே எழுதுவோம். அகராதிப் பணிக்கு ஆதி உண்டு, அந்தம் இல்லை என்று கலாநிதி க.இரகுபரன் குறிப்பிடுவது சாலப்பொருத்தமானது. அகராதிகள் இன்னும் இன்னும் வரவேண்டும் என்பதை இரகுபரனின் கூற்றுப்புலப்படுத்தி நிற்கிறது.

# NEW SCIENCE HALL

KANNATHIDDY JAFFNA

## 2022 A/L கணித, உயிரியல் பிரிவு

**தமிழ் மொழி மூலம்**

**PHYSICS**
திரு. S.சோதிலிங்கம்
திரு. N.கபிலன்
திரு. G.பிரபா
திரு. K.செல்வன்

**CHEMISTRY**
திரு. K.சிவத்திரன்
திரு. N.மகேஸ்வரன்
திரு. G.BENO
திரு. T.சுசாந்தன்

**BIOLOGY**
திரு. V.S.குணசீலன்
திரு. T.கெங்காதரன்
திரு. K.இராகவன்

**COM.MATHS**
திரு. P.செந்தில்நாதன்
திரு. S.சிவகரன்

**AGRICULTURE**
திரு. A.அரசிளங்குமரன்

**INFORMATION & COMMUNICATION TECHNOLOGY**
திரு. K.கேதீஸ்வரன்

**ENGLISH MEDIUM**

**PHYSICS**
MR.S.SOTHILINGAM
MR.M.KUGANESWARAN

**CHEMISTRY**
MR.G.BENO
MR.N.MAHESWARAN

**BIOLOGY**
MR.V.S.GUNASEELAN
MR.S.P.NAGANATHAN

**COM.MATHS**
MR.P.SENTHILNATHAN
MR.S.SIVAKARAN

சுப நேரத்தில் ஆரம்பம்

**ஆரம்பம்:-23.12.2019 திங்கள் பி.ப.1.00 மணி**


# சட்டவிரோதமாகவே என்னை கைது செய்துள்ளனர்-சம்பிக்க

(கொழும்பு)

சபாநாயகருக்கும் நீத வானுக்கும் அறிவிக்காமல் சட்டவிரோதமாக வீட்டினுள் நுழைந்தே கொழும்பு குற் றப்பிரிவினர் தன்னைக் கைது செய்ததாக முன்னாள் அமைச்சர் சம்பிக்க ரண வக்க தெரிவித்தார்.


நேற்று முன்தினம் மாலை சட்டமா அதிபரால் முன் னாள் அமைச்சர் சம்பிக்கவை கைது செய்து மன்றில் ஆஜர்படுத்துமாறு மேல் மாகா ணத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக் கோ னுக்கு வழங்கிய ஆலோ சனைக்கமைய அவர் கைது செய்யப்பட்டிருந்தார்.

சம்பிக்க ரணவக்கவை கைது செய்வதற்காக பொலி ஸார் அவருடைய இல்லத்திற்குள் உள்நுழைந்த நிலையில், உடனடியாகவே இந் தக் கைது நடவடிக்கை சட்ட விரோதமானது என்று குறிப்பிட்டு சம்பிக்க ரணவக்க அவரது உத்தியோகபூர்வ பேஸ்புக் பக்கத்தில் நேரடி காணொலியொன்றைப் பதி வேற்றம் செய்திருக்கிறார்.



நான் தேரர்களைச் சந் தி த்து விட்டு எனது இல்லத்தி ற்கு வந்தேன். அப்போது குற்றப்பிரிவு பொலிஸ் அதிகாரி கள் என்னுடைய இல்லத்திற்குள் நுழைந்தது டன். என்னைக் கைது செய்வதற்கான உத்தரவு இருப்பதாகக் கூறினார்கள்.

பாராளுமன்றத்திற்கு அறி வித்திருக்கிறார்களா? என்று அவர்களிடம் கேட்டேன். ஆனால் அவர்கள் பாராளுமன்றத்தி ற்கு அறிவிக்கவில்லை. அதன் பின்னரே பிரதி சபாநாயக ரிடம் பேசினார்கள். நந்தன என்பவரே இவ்வாறு பிரதி சபாநாயகரிடம் பேசினார். நீதவானுக்கும் இது தொடர் பில் அறிவிக்காமலேயே இந்த அதிகாரிகள் எனது வீட்டினுள் நுழைந்தார்கள். வீட்டில் நுழைந்த பின்னரே சபாநாயகருக்கும் நீதவானு க்கும் அறிவித்தார்கள். இது சட்ட விரோத செயலாகும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)


**வாழ்க வையகம்**  **வாழ்க வளமுடன்**

### ஆளுமைத் திறனூக்கப் பயிற்சிகள் ஆரம்பமாகிறது

தமிழகத்திலிருந்து வருகை தந்திருக்கும் மனவளக்கலைப் பேராசிரியர் அருள்நிதி ச.இந்திரா அவர்களால் பயிற்சிகள் நடாத்தப்பட இருப்பதால் இந்த அரிய வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

- எளியமுறை உடற்பயிற்சிகள்
- எளியமுறை தியானப்பயிற்சிகள்
- காயகல்ப்பப் பயிற்சி
- அகத்தாய்வுப் பயிற்சிகள்

காலம்: 21.12.2019 திங்கட்கிழமை தொடக்கம் 27.12.2019 வெள்ளிக்கிழமை வரை
நேரம்: மாலை 5.00 மணி தொடக்கம் 7.00 மணி வரை
பயிற்சிகளை வழங்குபவர்கள் மனவளக்கலை பேராசிரியர் அருள்நிதி ச.இந்திரா
மனவளக்கலை பேராசிரியர் அருள்நிதி ஆ.சுப்பிரமணியன்
துணைப்பேராசிரியர் த.நந்தகுமரன் (சி-8593)

அகத்தாய்வு 1 மற்றும் 2ஆம் நிலைகள் 21.12.2019 சனி மற்றும் 22.12.2019 ஞாயிறு ஆகிய தினங்களில் காலை 9.00 மணிக்கு நடைபெறும்.

யாழ்ப்பாணம் அறிவுத்திருக்கோவில்,
இல.81 பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.இல.0212222772



## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.
## திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்

### வணிகத்தில் இரண்டாம் தேர்வு (வெளிவாரி)–2017
### முதலாம் அரையாண்டுப் பரீட்சை

மேற்படி பரீட்சையானது எதிர்வரும் தை மாதமளவில் நடாத்துவதற்கு ஏற்பாடுகள் பூர்த்தியாகியுள்ளன. மேற்படி பரீட்சைக்கு தோற்றுவதற்கு தகுதியான மாணவர்கள் பரீட்சைக்கான விண்ணப்பப்படிவத்தினை எதிர்வரும்.21.12.2019ஆம் திகதியிலிருந்து அலுவலக நேரத்தில் திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தில் அல்லது www.codl.jfn.ac.lk என்ற இணையத்தளத்தினூடாகவும் பெற்றுக்கொள்ள முடியும்.

மேற்படிப் பரீட்சைக்கான விண்ணப்பப்படிவத்தினை 31.12.2019 (செவ்வாய்க் கிழமை) இற்கு முன்னர் திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தில் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள். மேலும் பரீட்சை அனுமதி அட்டை விநியோகம், மேற்படி பரீட்சைக்கான நேர அட்டவணை தொடர்பான விபரங்கள் பின்னர் அறியத்தரப்படும்.

மேலதிக விபரங்களுக்கு 021 222 3612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளலாம்.

குறிப்பு : மீள் பரீட்சார்த்திகள் பாட அலகொன்றுக்கு ரூபா 1500.00 வீதம் மக்கள் வங்கிக் கிளையொன்றில் செலுத்தி பற்றுச்சீட்டினை விண்ணப்பப்படிவத்துடன் இணைத்து திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தில் அலுவலக நேரத்தில் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள். (சி-8594)

பதிவாளர்
திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்
19.12.2019

தர்மத்தின் குரலாய் ஒலிக்கும்
# வலம்புரி 20 ஆவது ஆண்டு நிறைவு மலர்


# NEW SCIENCE WORLD

## 2022 A/L கணித, உயிரியல் பிரிவுகள்

**தமிழ் மொழி மூலம்**

| | |
|---|---|
| பௌதிகவியல் | திரு. R. குமரன் |
| | திரு. R. குகன் |
| இரசாயனவியல் | திரு. டயஸ் |
| | திரு. K.T. சிவகுமார் |
| உயிரியல் | திரு. N.T. கஜேந்திரன் |
| இணைந்த கணிதம் | திரு. S. செந்தில்ராஜ் |

**English Meidium**

| | |
|---|---|
| Physics | Mr.R.Kumaran |
| chemistry | Mr.Dias |
| Biology | Mr.N.T.Gajenthiran |
| Com.Maths | Mr.S.Krishna |

**23.12.2019 ஆம் திகதி**
**திங்கட்கிழமை ஆரம்பம்**

**T.P - 0773364055, 0212216690**
(Navalar Road - Brown Road Junction, Jaffna)

20ஆவது ஆண்டை வெற்றிகரமாக பூர்த்தி செய்கின்ற "வலம்புரி" பத்திரிகைக்கு மனமார்ந்த வாழ்த்துக்கள்...

BEST QUALITY | BEST PLACE | BEST PRICE & YOUR BEST CHOICE

# MATHI COLOURS

## PRINTERS & WEDDING CARDS

WE OFFER A WIDE RANGE OF SERVICES FROM
**OFFSET | DIGITAL | SCREEN PRINTING | DESIGNING | COLOUR SEPARATION | BINDING | COLOUR PRINT & ALL KIND OF PRINTING SERVICE**

100% CUSTOMER SATISFACTION
100% ON - TIME DELIVERY
100% COST EFFECTIVE





BANNER PRINTING WITH IN 30 MINS

No. 10, Murugaser Lane, Nallur, Jaffna.
Tel : +94 21 222 9285 | Mobile : +94 77 722 2259
Email : mathicolours@gmail.com

வெற்றிக்கும் தோல்விக்கும் சிறு வித்தியாசம். கடமையைச் செய்தால் அது வெற்றி. கடமைக்குச் செய்தால் அது தோல்வி. - மாவீரன் அலெக்சாண்டர்

வலம்புரி

TP: 021 222 3378

website : www.valampurii.lk

## இருபது ஆண்டு நிறைவில் உங்களுடன்...

வலம்புரி முகிழ்த்து இன்று இருபது ஆண்டுகள் நிறைவடைந்துள்ளன. இன்று போல் இருக்கிறது அந்த ஆரம்பம்.

வலம்புரி என்ற நாமத்துடன் அவதரித்த இந்தக் குழந்தை எங்களுக்குத் தேவை என்று நீங்கள் தூக்கி வளர்த்து பாலூட்டி பாதுகாத்து விட்டதால் இன்று இருபது வயது ஆகிவிட்டது.

ஆம், தர்மத்தைக் காப்பாற்றுவதற்காக அவதரித்த கிருஷ்ண பரமாத்மாவின் வரலாறு நீங்கள் அறிந்ததே.

ஒரு பாலகனாலேயே தனக்கு மரணம் என்றறிந்த கம்சன் எனும் அசுரன் தன் நாட்டிலுள்ள குழந்தைகளைக் கொல்லுமாறு கட்டளையிட்டான். அவனின் அசுர குணத்தால் எத்தனையோ குழந்தைகள் கொல்லப்பட்டன.

தனக்கு எந்த அழிவும் இல்லை என்று கருதிய வேளை, வாசுகிக்கும் வசுதேவருக்கும் பிறந்த குழந்தை கண்ணனைக் காப்பாற்றுவதற்காக குழந்தையைக் கூடையில் வைத்து தலையில் சுமந்தபடி வசுதேவர் கோகுலத்துக்குள் செல்கிறார்.

மழை பெய்கிறது. கூடவே ஆற்றைக் கடக்க வேண்டிய சூழ்நிலை, இவ்வேளையில்தான் ஐந்து தலை நாகம் குழந்தைக்கு குடையாகிறது.

யமுனை நதி வசுதேவருக்கு பாதை விட்டுக் கொடுக்கிறது. குழந்தை கண்ணன் கோகுலத்தில் பக்குவமாகச் சேர்க்கப்பட்டு விடுகிறான்.

அதர்மத்தை அழிப்பதற்காக - தர்மத்தை நிலைபேறடையச் செய்வதற்காக கண்ணன் என்ற குழந்தையை காப்பாற்ற ஆதிசேடன் முதல் யமுனை நதி, கோகுலத்து குழாம் என பலரின் உதவியோடு கிருஷ்ணன் வளர்த்தெடுக்கப்பட்டான்.

அந்த வளர்ப்பு கம்சன் எனும் அசுரனை வதம் செய்து தர்மத்தை நிலைநிறுத்த உதவிற்று.

இது கிருஷ்ணனுக்கு மட்டுமல்ல. அந்தக் கிருஷ்ணனின் கரத்தில் இருக்கும் வலம்புரிச் சங்கின் நாமம் கொண்ட வலம்புரிப் பத்திரிகைக்கும் பொருந்தும்.

20ஆம் திகதி டிசம்பர் மாதம் 1999ஆம் ஆண்டு வலம்புரி பத்திரிகை உதித்தெழுந்த போது அந்தக் குழந்தையை அழித்துவிட சில கம்சன்கள் முன்னெழுந்தனர்.

ஆனால் வலம்புரி என்ற குழந்தை தர்மத்தின் குரலாக ஒலிக்க வல்லது என்பதனை உணர்ந்து கொண்டு, நீங்கள் அந்தக் குழந்தையைக் காப்பாற்றினீர்கள்.

அதனால் வலம்புரி தர்மத்தின் குரலாக நடுநிலை நின்று தன் பணியை ஆற்றி வருகிறது.

இன்று இருபது ஆண்டுகள் நிறைவு கண்டு 21ஆவது ஆண்டில் காலடி எடுத்து வைக்கின்ற இவ்வேளையில்; வலம்புரியின் வாழ்வுக்காக நீங்கள் அத்தனைபேரும் வாரி வழங்கி வரும் ஆதரவை நாம் ஒருபோதும் மறந்து விடமாட்டோம்.

வலம்புரி என்றும் தர்மத்தின் குரலாக ஒலிக்கும் என்ற உறுதிமொழியை சத்தியம் செய்கிறோம்.

வலம்புரி எவருக்கும் எதிரானதல்ல. எம்மைப் பொறுத்தவரை எங்கள் தமிழினம் வாழ வேண்டும். எம் தமிழ் உறவுகள் பட்ட துன்பங்கள், வேதனைகள் கொஞ்சமல்ல. இதற்கெல்லாம் தீர்வு வேண்டும்.

இந்த உண்மையை உரக்கச் சொல்வது தமிழினம் சார்ந்த ஊடகங்களின் தார்மீகக் கடமை என்ற அடிப்படையில், வலம்புரி என்றும் நீதி நெறி வழுவாது தர்மத்தின் குரலாக ஒலிக்கும் என்பதை உங்கள் முன் உறுதி செய்கிறோம்.

# ஊடகத்துறை கற்கையை மேம்படுத்த பல்கலைக்கழக கல்லூரி விரைவில்

## நிறுவப்படும் என்கிறார் பந்துல

(கொழும்பு)

ஊடகத்துறை கற்கையை மேம்படுத்துவதற்காக பல்கலைக்கழக கல்லூரி விரைவில் நிறுவப்படும். ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் அனைவரும் பல்கலைக்கழகம் செல்ல வேண்டும் என்ற நோக்கம் அடுத்த வருடம் முதல் நடைமுறைப்படுத்தப்படும் என தகவல் தொடர்பாடல் மற்றும் உயர்கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

ஊடகக்கல்வி மற்றும் இதழியல் டிப்ளோமா கற்கையைப் பூர்த்தி செய்த மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் புதன்கிழமை பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துரைக்கையில் அவர் மேற்கண்டவாறு கூறினார்.

ஜனநாயக நாட்டில் ஊடகத்துறை நான்காவது பிரதான துறையாகக் காணப்படுகின்றது. அரசியலுக்கு அப்பாற்பட்ட சேவையை ஊடகங்கள் முன்னெடுப்பது ஊடக தர்மத்தை மதிப்பதாகக் கருதப்படும். இன்று இளம் தலைமுறையினர் பலர் அரச மற்றும் தனியார் நிறுவனாங்களின் ஊடாக ஊடகத்துறை தொடர்பான பாட நெறியைப் பூர்த்தி செய்து துறைசார் ரீதியில் தேர்ச்சி பெற்றுள்ளனர்.

சர்வதேசத்தின் மத்தியில் செயற்பாட்டு ரீதியில் செல்வாக்குச் செலுத்தும் ஊடகத்துறையில் காலத்தின் தேவைக்கேற்ப மாற்றங்களை ஏற்படுத்துவது அவசியமாகும். மேற்குலக நாடுகளில் ஊடகத்துறை தொடர் பான கற்கை நெறிகள் தேவைக்கேற்ப விரிவுபடுத்தப்பட்டுள்ளன.

மக்களுக்குச் சிறந்த சேவையை வழங்கும் ஊடகத்துறை தொடர்பான கொள்கைகளில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் தலைமையிலான அரசாங்கத்தால் பல மாற்றங்கள் முன்னெடுக்கப்படும். இதற்கமைய ஊடகத்துறைக்காக பிரத்தியேக பல்கலைக்கழக கல்லூரி நிறுவுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் அனைத்து மாணவர்களும் பல்கலைக்கழகம் செல்லும் வாய்ப்பைப் பெற வேண்டும் என்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தனது தேர்தல் கொள்கைப் பிரகடனத்தில் குறிப்பிட்டிருந்தார்.

இலவசக்கல்வி பயனுடையதாக அமைய வேண்டுமாயின் அனைத்து மாணவர்களும் உயர்கல்வியைப் பெற வேண்டும் என்ற ஜனாதிபதியின் நோக்கம் அடுத்த வருடம் முதல் செயற்படுத்தப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# எக்னெலிகொட கடத்தல் வழக்கு விசாரணைகள்

## பெப்ரவரிவரை ஒத்திவைப்பு

(கொழும்பு)

ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொடவை கடத்திச் சென்று காணாமல் ஆக்கிய சம்பவம் தொடர்பான வழக்கு விசாரணைகளை எதிர் வரும் பெப்ரவரி மாதம் 20 ஆம் திகதி முதல் நடத்த கொழும்பு, மூவரடங்கிய விசேட மேல் நீதிமன்ற அமர்வு நேற்றுத் தீர்மானித்தது.

குற்றம் சாட்டப்பட்ட 9 இராணுவப் புலனாய்வாளர்களுக்கும் குற்றப் பத்திரிகை கையளிக்கப்பட்ட நிலையில், நேற்று அவ் வழக்கு நீதிபதி சம்பத் அபேகோன் தலைமையில் சம்பத் விஜேரத்ன மற்றும் கிஹான் குலதுங்க ஆகியோர் அடங்கிய விசேட மேல் நீதிமன்ற நீதிபதிகள் அமர்வின் முன்னால் விசாரணைக்கு வந்தது.

இதன்போதே எதிர்வரும் பெப்ரவரி மாதம் 20 ஆம் திகதி முதல் விசாரணைகளை ஆரம்பிக்கத் தீர்மானிக்கப்பட்டது.

2010 ஜனவரி 24 மற்றும் 27 ஆம் திகதி காலப்பகுதிக்குள், கிரிதலே, கொஸ்வத்த மற்றும் பத்தரமுல்ல ஆகிய பகுதிகளில், தம்முடன் தொடர்பில்லாத நபர்களுடன் இணைந்து பிரகீத் எக்னெலிகொடவை இரகசியமாக சிறை வைக்கும் நோக்கத்தில் கடத்திச் சென்றமை, அவருக்கு மரணத்தை ஏற்படுத்தியமை தொடர்பில், பிரதிவாதிகளுக்கு எதிராகக் குற்றப்பத்திரிகையில் குற்றம் சுமத்தப்பட்டது.

கிரித்தலை இராணுவப் புலனாய்வு முகாமின் கட்டளைத் தளபதியாக இருந்த லெப்டினன் கேணல் சம்மி அர்ஜுன குமார ரத்ன, ஸ்டாப் சார்ஜன் வடுகெதர வினி பிரியந்த டிலஞ்சன் உபசேனா எனப்படும் சுரேஷ், ஸ்டாப் சார்ஜன் ஆர்.எம்.பி.கே. ராஜபக்ஷ எனும் நாதன், ஸ்டாப் சார்ஜன் செனவிரத்ன முதியன் சலாகே ரவீந்திரூபசேன எனப்படும் ரஞ்சி, சமிந்த குமார அபேரத்ன, எஸ்.எம். கனிஷ்க குமார அபேரத்ன, ஐய்யா சாமி பாலசுப்பிரமணியம், கி.ஜி. தராங்க பிரசாத் கமகே, எரந்த பீரிஸ் ஆகியோரே குற்றம் சுமத்தப்பட்டுள்ள புலனாய்வாளர்களாவர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# யாழ்.பல்கலை மாணவி

## மல்லாகத்தில் சடலமாக மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முதலாம் வருட மாணவி ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

மல்லாகம் விசாலாட்சி வீதியில் உள்ள தங்குமிட வீடு ஒன்றிலிருந்து அவர் நேற்று இரவு சடலமாக மீட்கப்பட்டார்

கிளிநொச்சியைச் சேர்ந்த மகேந்திரம் யதுஷா (வயது-21) என்ற மாணவியே இவ்வாறு சடலமாக மீட்கப் பட்டார்.

சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்கும் தெல்லிப்பளை பொலிஸார், மாணவியின் சடலத்தை மீட்டு தெல்லிப்பளை வைத்தியசாலையில் ஒப்படைத்துள்ளனர். (ம-3)

# சுதந்திரக் கட்சியின் தீர்மானத்திற்கு எதிராக பௌசி மனுத்தாக்கல்

(கொழும்பு)

தன்னை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர் பதவியில் இருந்து நீக்கியமை மற்றும் தன்னை பாராளுமன்ற உறுப்பினர் பதவியில் இருந்து நீக்குவதற்கு அந்தக் கட்சியின் தலைமைத்துவம் எடுத்த தீர்மானத்தை வலுவிழக்கச் செய்யுமாறு கோரி முன்னாள் அமைச்சர் மற்றும் தற்போதைய பாராளுமன்ற உறுப்பினரான ஏ.எச்.எம்.பௌசி உயர் நீதிமன்றத்தில் மனுவொன்றைத் தாக்கல் செய்தார்.

இந்த மனுவின் பிரதிவாதிகளாக சுதந்திரக் கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன, அந்தக் கட்சியின் செயலாளர் தயாசிறி ஜெயசேகர, கட்சியின் ஒழுக்காற்றுக் குழு, தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் உள்ளிட்ட 14 பேர் பெயரிடப் பட்டனர். (இ-7)

## ஒளிவிழா

(குப்பிளான்)

யாழ்.மாவட்டச் சமூக அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் ஒளிவிழா நாளை சனிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் கந்தர்மடம் அரசடி வீதியிலுள்ள காரியாலய மண்டபத்தில் நடைபெறும்.

இவ் விழாவில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்டக் கூட்டுறவுச் சபையின் செயலாளர் திரு மதி.வேதவல்லி செல்வரட்ணம் கலந்து கொள்வார். (இ-18)

## அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

### சுவாமி அறையில் வைக்கக்கூடாத தெய்வங்கள் எவை?

பூஜை அறையில் எந்தச் சுவாமிப்படங்களை வைக்கக்கூடாது என சில சாஸ்திரங்கள் உள்ளன.

அந்தவகையில் சாஸ்திரப்படி எந்தச் சுவாமிப் படங்களை பூஜை அறையில் வைக்கக்கூடாது என்பதை பற்றி பார்ப்போம்.

சுவாமிப் படங்களில் சனீஸ்வர பகவானின் படங்களை பூஜை அறையிலே வைக்கக் கூடாது.

நவக்கிரகங்களின் படங்களை பூஜை அறையில் வைத்து எப்போதும் பூஜை செய்யக் கூடாது.

நடராஜரின் உருவப்படத்தை வீட்டில் வைக்கக் கூடாது.

கடவுளின் உருவமானது மிகவும் ஏழ்மையாக இருந்தால் அதாவது மொட்டை அல்லது கோவணம் கட்டிய நிலையில் உள்ள முருகப்பெருமானின் படத்தை வீட்டு பூஜை அறையில் வைக்கக்கூடாது.

கோபமாக இருக்கக் கூடிய காளியின் படத்தை வீட்டில் வைத்து பூஜை செய்யக் கூடாது.

தலைக்கு மேல் வேல் இருக்கும். முருகனின் படத்தை பூஜை அறையில் வைக்கக் கூடாது.

ருத்ர தாண்டவமாடும் உருவம், கொடூர பார்வை உள்ள சுவாமிப் படங்களை வீட்டில் வைத்து பூஜை செய்யக் கூடாது.

வீட்டில் உடைந்த சிலைகள், சிதைந்த சுவாமி சிலைகள், கிழிந்த உருவப்படங்கள் போன்றவற்றை வீட்டில் வைத்து பூஜை செய்யக் கூடாது.

## வாழ்வைப் பொன்னாக்கும் வைர வரிகள்

நல்ல நூல்களை நாள்தோறும் வாசிக்கும் பயிற்சியை ஏற்படுத்திக் கொள்ளுங்கள். கோணலான மனமும் நேராகுவதற்கு இப்பயிற்சி உதவும். -வாரியார் சுவாமிகள்

# குற்றப்பிரேரணை மீதான வாக்கெடுப்பில் ட்ரம்ப் தோல்வி!

(வோஷிங்டன்)

அமெரிக்க நாடாளுமன்றத்தின் பிரதிநிதிகள் சபையில் முன்வைக்கப்பட்டிருந்த குற்றப்பிரேரணை மீதான வாக்கெடுப்பில் டொனால்ட் ட்ரம்ப் தோல்வியடைந்துள்ளார்.


ட்ரம்ப் மீது ஜனநாயகக் கட்சி கண்டனத் தீர்மானம் கொண்டு வந்தது. இந்தத் தீர்மானத்தின் மீது நாடாளுமன்றத்தின் பிரதிநிதிகள் சபையில் 14 மணித்தியாலங்கள் விவாதம் நடைபெற்றுள்ளது.

இதனைத் தொடர்ந்து இடம்பெற்ற வாக்கெடுப்பில் ட்ரம்ப்பை பதவி நீக்கக்கோரும் தீர்மானத்திற்கு ஆதரவாக 230 பேரும் எதிராக 194 பேரும் வாக்களித்தனர்.

பிரதிநிதிகள் சபையில் நிறைவேற்றப்பட்டுள்ள குறித்த தீர்மானம் செனட் சபையில் விவாதத்திற்கு அனுப்பி வைக்கப்படவுள்ளது.

விசாரணைக்குப் பின்னர் செனட் சபையில் வாக்கெடுப்பு நடக்கும் என்பதால் ட்ரம்ப்பின் ஜனாதிபதி பதவிக்கு உடனடியாக சிக்கல் இல்லை.

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் ஜனநாயகக் கட்சியின் வேட்பாளர் ஜோ பிடனுக்கு எதிராக உக்ரேய்னில் சதித்திட்டம் தீட்டினார் என்றும் அவருக்கு எதிராகச் சதி செய்ய உக்ரேய்ன் ஜனாதிபதியிடம் பேரம் பேசினார் என்றும்



டொனால்ட் ட்ரம்ப் மீது குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

இந்தச் சதித் திட்டத்தின் மூலம் அரசியலமைப்புச் சட்டம், தேசிய பாதுகாப்பு, ஜனாதிபதித் தேர்தலுக்கான நம்பகத்தன்மை ஆகியவற்றுக்கு ட்ரம்ப் முரணாக நடந்து கொண்டார் என்று எதிர்க்கட்சியான ஜனநாயகக் கட்சியினர் தெரிவித்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-2)

# குடியுரிமைத் திருத்தச் சட்டத்தை எதிர்த்து ரயில் மறியல் போராட்டங்கள்




(சென்னை)

குடியுரிமை திருத்தச் சட்டத்தை எதிர்த்து பீகார் மாநிலத்தில் ரயில் மறியல் போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

குடியுரிமை திருத்தச் சட்டம் மற்றும் தேசிய குடிமக்கள் பதிவேடு ஆகியவற்றை எதிர்த்து பீகார் மாநிலத்தில் நேற்று வியாழக்கிழமை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினர் ரயில் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தர்பங்கா மாவட்டம் லகரி சராய் ரயில் நிலையத்திற்குள் திடீரென சென்ற மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினர், அங்கு நின்றிருந்த ரயிலை புறப்பட விடாமல் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் அங்கு சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது.

இதேபோல், பாட்னா ராஜேந்திர நகர் ரயில் நிலையத்தில் அனைத்து இந்திய மாணவர் கூட்டமைப்பைச் சேர்ந்தவர்கள் ரயில் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

குடியுரிமை திருத்தச் சட்டத்திற்கு எதிராக நாடு முழுவதும் போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன. ஆங்காங்கே இப்போராட்டத்தில் வன்முறைச் சம்பவங்களும் அரங்கேறுவதால் பதற்றமான பகுதிகளில் ஆயுதம் தாங்கிய பொலிஸார் குவிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, குடியுரிமை திருத்தச் சட்டத்தை எதிர்த்து தொடரப்பட்ட வழக்குகளை விசாரித்த உச்ச நீதிமன்றம் மத்திய அரசின் குடியுரிமை சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு இடைக்கால தடை விதிக்க மறுத்து விட்டது.

அதேசமயம், இந்தச் சட்டம் தொடர்பாக மத்திய அரசு ஜனவரி 22 ஆம் திகதிக்குள் விரிவான விளக்க அறிக்கை அளிக்கும்படி உத்தரவிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ-2)

# கைதிகளுக்கிடையே துப்பாக்கிச்சூடு; 12 பேர் பரிதாபமாக உயிரிழப்பு!

(பனாமா சிட்டி)

பனாமா நாட்டின் தலைநகரான பனாமா சிட்டியில் லா ஜொய் டா என்ற சிறைச்சாலை அமைந்துள்ளது. இந்தச் சிறைச்சாலையில் கொலை, கொள்ளை உள்ளிட்ட பல்வேறு குற்றச் செயல்களில் ஈடுபட்ட குற்றவாளிகள் கைதிகளாக அடைத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், அந்த சிறைச்சாலையில் நேற்று இரு தரப்பு கைதிகளுக்கு இடையே திடீரென மோதல் வெடித்தது.



இந்த மோதலின் போது சில.கைதிகள் தாங்கள் சட்டவிரோதமாக சிறைக்குள் மறைத்து வைத்திருந்த துப்பாக்கிகளை கொண்டு கண்மூடித்தனமாக சுட்டனர்.

இந்த தாக்குதலில் 12 கைதிகள் உயிரிழந் தனர். மேலும், 13 பேர் படுகாயமடைந்தனர். இதையடுத்து துரிதமாக செயற்பட்ட சிறைத் துறை பொலிஸார் கைதிகளின் மோதலை தடுத்து நிலைமையை கட்டுக்குள் கொண்டு வந்தனர். இந்தச் சம்பவம் குறித்து விசாரணை நடத்திவரும் பொலிஸார் சிறைக்கைதிகள் தாக்குதலுக்கு பயன்படுத்திய 8 துப்பாக்கிகளை கைப்பற்றினர். (ஐ-2)

# நீதிமன்ற அறைக்குள் கைதி சுட்டுக்கொலை; 18 பொலிஸார் பணியிடை நீக்கம்

(டில்லி)

உத்தரப்பிரதேசத்தில் நீதிமன்ற அறைக்குள் கைதி சுட்டுக் கொல்லப்பட்ட விவகாரத்தில் 18 பொலிஸார் பணியிடை நீக்கம் செய்யப்பட்டனர்.பிஜ்னோர் மாவட்டத்தில் கொலை வழக்குத் தொடர்பாக ஜப்பார் மற்றும் ஷா நவாஸ் ஆகியோர் நீதிமன்றத்தில் விசாரணைக்கு அழைத்து வரப்பட்டிருந்தனர்.

இவ்வாறு அழைத்து வரப்பட்டிருந்த சந்தேக நபர்கள், நீதிமன்ற அறைக்குள் அமர்ந்திருந்த வேளையில், அவர்களை நோக்கி 3 பேர் கொண்ட குழு, சரமாரியாக துப்பாக்கிச்சூடு நடத்தினர். இதன்போது ஷா நவாஸ் நிகழ்விடத்திலேயே உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக கொலையாளிகள் 3 பேரும் கைது செய்யப்பட்டனர். மேலும் சம்பவத்தின்போது நீதிமன்ற வளாகத்திற்குள் நுழையும் பொது மக்களை சோதனை செய்யாமல் அனுமதித்தது தவறு என குற்றம் சாட்டப்பட்டது.

இதையடுத்தே நீதிமன்ற வளாகத்தில் பாதுகாப்புப் பணியில் இருந்த ஒரு உதவியாள், 5 பெண் பொலிஸ் அதிகாரிகள் உட்பட 18 பொலிஸார் பணியிடை நீக்கம் செய்து மாவட்ட காவல் கண்காணிப்பாளர் உத்தரவிட்டார்.(ஐ-2)

# மோடி தடுக்கி விழுந்த படியை இடிக்க உத்தரவு!

(கான்பூர்)

பிரதமர் நரேந்திர மோடி தடுக்கி விழுந்த படியை இடிக்க உத்தர பிரதேச அரசு அதிரடி உத்தரவு பிறப்பித்துள்ளது.

கங்கை நதியை தூய்மைப்படுத்துவதற்காக அமைக்கப்பட்ட தேசிய கவுன்சிலின் முதல் கூட்டம் உத்தர பிரதேசம் கான்பூரில் கடந்த 14 ஆம் திகதி நடைபெற்றது.

கூட்டத்தில் கலந்து கொண்ட பிரதமர் நரேந்திர மோடி கூட்டம் முடிந்து கங்கை நதியில் படகுப் பயணம் செய்து திரும்பிய பின்னர் படி ஏறும்போது நிலை தடுமாறி கீழே விழுந்தார். இந்த செய்தி ஊடகங்களில் பரவலாக பேசப்பட்டது.

இந்நிலையில் குறித்த படிக்கட்டுகளை இடித்துவிட்டுச் சீரமைக்க உத்திர பிரதேச அரசு முடிவு செய்துள்ளது.

இது குறித்து அம்மண்டல கமிஷனர் பாப்டே கூறுகையில், 'பிரதமர் தடுக்கி விழுந்த படி மட்டும் மற்றப் படிக்கட்டுக்களைக் காட்டிலும் வேறுபட்டு இருக்கும். உயரம் சற்று உயரமாக இருக்கும். எனவே விரைந்து அந்த படியை மட்டும் இடித்து சரியான உயரத்தில் கட்ட முடிவு செய்யப்பட்டுள்ளது" என்றார். (ஐ-2)

# அமெரிக்காவில் நகர மேயராக 7 மாத குழந்தை பதவியேற்பு



(வோஷிங்டன்)

அமெரிக்காவின் டெக்சாஸ் நகர மேயராக 7 மாதக் குழந்தை பதவியேற்ற சுவாரஸ்யமான சம்பவம் இடம்பெற்றுள்ளது.

டெக்சாஸில் உள்ள வைட் ஹால் நகரின் தீயணைப்புத்துறையில் பணிபுரியும் தன்னார்வலர்களுக்கு நிதி திரட்ட ஆண்டுதோறும் மேயர் பதவி ஏலம் விடப்படும்.

இந்த மாதத்திற்கான ஏலத்தில் 7 மாதக் குழந்தையான வில்லியம் சார்லஸ் மெக்மில்லன் வெற்றி பெற்றார். இதனைத்தொடர்ந்து மேயராக 7 மாதக் குழந்தையான சார்லஸ் பதவியேற்கும் நிகழ்வு நடைபெற்றது.

150 இற்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்ட இவ்விழாவில் சார்லஸ் மெக்மில்லன் மேயராக பதவியேற்றுக்கொண்டார்.

பதவியேற்புக்குப் பின் சார்லஸின் வளர்ப்புத் தாயிடம் மேயர் குடியரசுக் கட்சி ஆதரவாளரா? அல்லது ஜனநாயகக் கட்சி ஆதரவாளரா? என நகைச் சுவையாக கேள்வி எழுப்பினர்.

அதற்கு பதில் அளித்த தாய் நான்சி, மேயர் சார்லஸ் அனைவரையும் நேசிப்பார். அனைவரின் ஒற்றுமைக்காகவும் உழைப்பார். அமெரிக்காவை மீண்டும் கனிவான நாடாக உருவாக்குவதே அவரின் அரசியல் நோக்கம்" எனத் தெரிவித்தார். (ஐ-2)

## எதிர்ப்புகளுக்கு...

ஆசிரியர் திரு.ந.விஜயசுந்தரம் அவர்களின் வழிப்படுத்தல்.

"வலம்புரியின்" இவ் இருபதாண்டு வளர்ச்சிக்குக் காரணமாய் அமைந்தது வெளிப்படை.

எத்தனையோ தரம் எனது கருத்தை அங்கீகரித்தும் அதனோடு முரண்பட்டும் நின்ற போதும்,

அக்கருத்துக்களைப் பத்திரிகையில் வெளியிட்டு நடுநிலை பேணிய அவர்தம் செயலால் மகிழ்ந்திருக்கிறேன்.

அவரைப் போலவே "வலம்புரியின்" நிர்வாக இயக்குநர் சி. வெற்றிவேலாயுதம் அவர்களும்,

எங்களது கழக முயற்சிகளை பெரிதும் ஊக்குவித்து வரும் ஒருவராவார்.

ஜனநாயகத்தைத் தாங்கும் நான்கு தூண்களில் ஒன்றாக ஊடகமும் கருதப்படுகிறது.

அந்த சக்தியை "வலம்புரியூடு" தமிழினத்திற்கு வழங்கி வரும் அனைவர்க்கும் எனது வாழ்த்துக்கள்.

நிறைவுறும் இருபது ஆண்டுகள் இன்னும் பெருகி "வலம்புரி" எழுச்சி கொள்ள,

என்னை வாழ்விக்கும் கம்பனாடன் தாள்பணிந்து வாழ்த்துகிறேன்.

"இன்பமே எந்நாளும் துன்பமில்லை"

## வடக்கு ஆளுந...

தகுந்த வட்டாரங்கள் மூலம் அறியக் கிடைத்துள்ளது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் சகல மாகாணங்களினதும் ஆளுநர்களைப் பதவி விலகுமாறு கோரியதன் அடிப்படையில் புதிய ஆளுநர்கள் நியமிக்கப்பட்டனர்

இந்நிலையில் வடக்கு மாகாணத்துக்கு மட்டும் ஆளுநர் ஒருவரை நியமிப்பது தொடர்பில் நீண்ட இழுபறி நிலை ஏற்பட்டது.

இந்நிலையில் கடந்த காலங்களில் வவுனியா, மட்டக்களப்பு மாவட்டங்களில் அரச அதிபராகவும் சுங்கத் திணைக்களத்தின் பணிப்பாளராகவும் தற்போது சுகாதார அமைச்சின் செயலாளராகவும் கடமையாற்றிக் கொண்டிருக்கும் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் வடக்கு மாகாண ஆளுநராகப் பெரும்பாலும் உறுதி செய்யப்பட்ட நிலையில் எதிர்வரும் தை மாதம் தனது கடமைகளைப் பொறுப்பேற்பார் என நம்பப்படுகிறது. (ம-3,10)

## மீன் பிடிக்கச்...

நேற்று அதிகாலை குளத்திற்கு மீன் பிடிக்கச் சென்ற 57 வயதுடைய ஜி.விஜயசிறி என்ற மூன்று பிள்ளைகளின் தந்தையே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

நேற்று அதிகாலை 4.30 மணியளவில் மீன் பிடிப்பதற்கு சென்ற விஜயசிறி என்பவர் நீண்டநேரமாக வீடு திரும்பவில்லை.

இந் நிலையில் ஊர்மக்கள் தேடிச் சென்ற போது உளுக்குளம் குளத்தினுள் மிதந்த நிலையில் சடலம் காணப்பட்டதை தொடர்ந்து சடலம் மீட்கப்பட்டுள்ளது. (ம-3,250,299)

## ஆவரங்காலில்...

வெட்டுச் சம்பவத்தில், இளைஞன் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

இத்தாக்குதலில் படுகாயமடைந்தவர் அச்சுவேலி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ம-3)

## வாக்குவாதம்...

சாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

வேலணைப் பிரதேச சபையின் மாதாந்த அமர்வு நேற்றைய தினம் சபை மண்டபத்தில் தவிசாளர் நமசிவாயம் கருணாகரகுருமூர்த்தி தலைமையில் இடம்பெற்றது.

இந்நிலையில் மண்டைதீவு வட்டார பெண் உறுப்பினர் ஒருவரால் பிற விடயங்கள் தொடர்பான விவாதத்தின்போது தமது வட்டாரப் பகுதிகளுக்கு பிற வட்டாரங்களைச் சேர்ந்த உறுப்பினர்கள் வரும்போது தமக்கு ஏன் தெரியப்படுத்துவதில்லை எனக் கேள்வி எழுப்பினார்.

அதுமட்டுமல்லாது தவிசாளரின் பயன்பாட்டுக்கென வழங்கப்பட்ட வாகனத்தில் சில உறுப்பினர்கள் தமது பகுதிகளுக்கு வருகை தந்ததாகவும் குற்றம் சாட்டினர்.

இதனையடுத்து குறித்த உறுப்பினருக்கு ஆதரவாக சில உறுப்பினர்கள் பேசிய நிலையில் இரு பகுதிகளுக்குமிடையில் வாக்குவாதம் முற்றிக் கைகலப்பாக மாறியது.

இதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர் எஸ்.நாவலன், பொதுஜன பெரமுன சார்பில் சபைக்குத் தெரிவான இன்னொருவரும் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த சம்பவம் தொடர்பில் தவிசாளரைத் தொடர்பு கொள்ள முயற்சித்தபோதும் முயற்சி பயனளிக்கவில்லை. (ம-3,10)

## ஐ.நா தீர்மான...

நேற்று நண்பகல் ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்ற கொழும்பிலுள்ள வெளிநாட்டு ஊடகவியலாளர்களுடனான சந்திப்பின்போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

அம்பாந்தோட்டை துறைமுகம் தொடர்பில் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு பதிலளித்த ஜனாதிபதி, "ஒரு அரசால் கைச்சாத்திடப்பட்ட வர்த்தக உடன்படிக்கையை அடுத்துவரும் அரசால் இரத்து செய்வது நடைமுறைச் சாத்தியமற்றதாகும் எனக் குறிப்பிட்டார்.

"நாட்டிலுள்ள அனைத்து துறைமுகங்களும் இலங்கை அரசின் கீழ் செயற்பட வேண்டும் என்பதே எனது அரசின் நிலைப்பாடாகும். அனைத்து துறைமுகங்களிலும் நாட்டிலுள்ள பொதுவான சட்டமே நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும்.

வர்த்தக செயற்பாடுகள் இடம்பெறும் அதேவேளை, நாட்டின் பாதுகாப்பை உறுதிப்படுத்தல் அடிப்படை தேவையாகும்" என்பதையும் ஜனாதிபதி சுட்டிக் காட்டினார்.

19வது அரசியலமைப்பு திருத்தம் பெரும் பிழையாகும் எனவும் நாட்டின் எதிர்கால பயணத்திற்கு அது பெருந்தடையாகும் என்பதையும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ சுட்டிக் காட்டினார். (ம-3)

## உண்மையைக்...

வர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

யாழில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தென்னிலங்கையில் உங்களுக்கு எதிராக பல்வேறு கருத்துக்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. அதன் தொடர்ச்சியாக உங்களைக் கைது செய்ய வேண்டுமென்று கோரி வருவதை நீங்கள் எவ்வாறு பார்க்கின்றீர்கள் என ஊடகவியலாளரால் கேட்கப்பட்டது.

இதற்குப் பதிலளித்த அவர், "என்னிடம் கேள்வி ஒன்று தரப்பட்டது. அந்தக் கேள்விக்கான பதிலை நான் ஆங்கிலத்தில் எழுதி அனுப்பினேன். அவற்றைப் பத்திரிகைகள் பிரசுரித்தன. அதன் காரணமாக அதை பொது மக்கள் வாசித்து தென்னிலங்கையிலே முக்கியமாக சிங்கள மக்கள் கொதிப்படைந்திருக்கின்றார்கள், கோபம் கொண்டுள்ளார்கள் என்று தெரிகின்றது.

இதிலே கோபம் கொள்ள வேண்டிய அவசியம் எதுவும் இல்லை. நான் கூறுவது எனக்குத் தெரிந்த வரலாற்றின் அடிப்படையிலேயே நான் அறிந்து கொண்ட தரவுகளிலிருந்து அந்த கருத்துக்களை வெளியிட்டிருக்கிறேன்.

என் கருத்துக்கள் பிழையென்று யாராவது நினைத்தால் அதற்கான மாற்றுக்கருத்துக்களை அவர்கள் தரலாம். நான் கூறியிருப்பது உண்மையென்பது என்னுடைய கருத்து. உண்மையைக் கண்டு அவர்கள் பயப்பட வேண்டிய அவசியம் இல்லை.

ஆனால் அந்த உண்மை வெளிவந்தால் தாங்கள் இதுவரை காலமும் பொய்மமை எவ்வாறு வெளிப்படுத்தி வந்தார்களோ அந்த பொய்ம்மை அழிந்துவிடும் என்றதொரு ஏக்கத்தில் அவர்கள் இவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றார்களோ என நான் அறியேன்.

ஆனாலெது எவ்வாறாக இருப்பினும் நான் கூறுவது உண்மையென்றால் அதனை ஏற்றுக்கொள்ள வேண்டும். அது பிழை என்றால் அவர்கள் அதற்குத் தமது எதிர்க் கருத்துக்களைத் தரவேண்டும். அல்லது நான் கூறியவை பொய் என்று அவர்கள் நினைப்பதால் 'நாங்கள் அதைப் பற்றி எதுவுமே பேச வேண்டிய அவசியம் இல்லையே' என்று வாதாடாதிருக்கலாம்.

இவற்றையெல்லாம் விட்டுவிட்டு அவர்கள் என்னை கைது செய்ய வேண்டும் என்று கூறுவது அவர்களுடைய உள்எண்ணங்களை படம்பிடித்துக் காட்டுகிறது.

ஏதோவொரு பயத்தினால், அதாவது தங்களுடைய கபடங்கள் வெளிப்பட்டுவிடுமோ என்ற பயத்தின் நிமித்தமாக அவர்கள் இவ் வாறு நடந்து கொள்கிறார்களோ என்று என்னை எண்ண வைக்கின்றது.

ஆகவே இவ்வாறான கைதுகளும் என்னை விமர்சிப்பதும் தேவையற்றது என்று தான் நான் பார்க்கின்றேன்.

ஒருவர் தனது கருத்துக்களை வெளிப்படுத்துவது ஜனநாயக நாட்டில் ஏற்றுக்கொள்ளப்படும் ஒரு விடயம். நான் வன்முறையைச் சார்ந்து கருத்துக்களை வெளிப்படுத்தவில்லையே. ஆனால் உண்மையை தொடர்ந்து நான் கூறிக்கொண்டு தான் வருவேன்" என்று அவர் குறிப்பிட்டுள்ளார். (ம-3,9)

## பௌத்த மக்...

தேரர் குற்றம்சாட்டினார்.

சம்பிக்க கைது செய்யப்பட்டதன் பின்னணியில் கோட்டாபய ராஜபக்ஷ இருப்பதாக குற்றம் சுமத்தினார். "தன்னை விட, எல்லாக் காலத்திற்குமான சிறந்த தேசியத் தலைவர் சம்பிக்கதான் என்பதை அறிந்ததாலேயே கோட்டாபய ராஜபக்ஷ இந்த உத்தரவை விடுத்தார்" என்றார்.

ஜனாதிபதித் தேர்தலில் 6.9 மில்லியன் வாக்காளர்கள் வழங்கிய ஆணையை கோட்டா காட்டிக் கொடுத்ததாக அவர் குற்றம் சாட்டினார். "பெரும்பான்மை சிங்கள பௌத்தர்களால் ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டார் என்று அரசாங்கம் பெருமை பேசுகிறது.

ஆனால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு மாதத்திற்குப் பிறகு, அதே சிங்கள பௌத்தர்களின் மரியாதைக்குரிய தலைவரை பழிவாங்குகிறார்கள். வாக்காளர்கள் இந்த வகை அரசியலுக்கு வாக்களிக்கவில்லை. அரசியல் சூனிய வேட்டைகளின் மூலம் சம்பிக்கவை மௌனமாக்குவதற்கான இந்த நடவடிக்கையை நாங்கள் கண்டிக்கிறோம். அது தோல்வியடையும்" என்று தேரர் தெரிவித்தார். (ம-3)

## முன் பிணை...

பிணை மனுவை தாக்கல் செய்துள்ளார்.

வெள்ளை வான் கடத்தல் தொடர்பாக கருத்துத் தெரிவித்த இரு சந்தேகநபர்களும் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினரால் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் ராஜித சேனாரத்ன கோரியதற்கிணங்கவே வெள்ளை வான் கடத்தல்கள் குறித்து ஊடகவியலாளர் சந்திப்பில் வெளிப்படுத்தியதாக இரண்டு சந்தேகநபர்களும் தெரிவித்துள்ளனர்.

இதனை அடுத்து வெள்ளைவான் கடத்தல் விவகாரம் தொடர்பான ஊடக சந்திப்பு தொடர்பாக ராஜித சேனாரத்ன கைது செய்யப்படலாம் என தகவல்கள் வெளியாகின.

இந்நிலையில் நேற்று கொழும்பு நீதவான் நீதிமன்றத்தில் ராஜித சேனாரத்ன முன் பிணை மனுவொன்றை தாக்கல் செய்துள்ளார். (ம-3)

## கொழும்பிலிரு...

முன்னெடுக்கப்படுவதாக ரயில்வே திணைக்களத்தின் பொது முகாமையாளர் டிலந்த பெர்னாண்டோ தெரிவித்தார்.

இரண்டு வருடங்களுக்குள் வடக்கு ரயில் மார்க்கத்தை புனரமைக்கும்பணிகளை நிறைவு செய்வதற்கு தீர்மானித்துள்ளதாக திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது. (ம-3)

வாசனா சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 1574 திகதி 2019/12/19
ஆங்கில எழுத்து Y வெற்றி இலக்கங்கள் 33 42 44 72

மஹஜன சம்பத
திகதி 2019/12/19
சீட்டிழுப்பு இலக்கம் 4073
X 6 0 8 3 9 5

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 19-12-2019
சீட்டிழுப்பு இலக்கம் 2335
ஆங்கில எழுத்து J வெற்றி இலக்கங்கள் 21 44 59 60

நீரோகா
திகதி 2019/12/19
சீட்டிழுப்பு இலக்கம் 0638
லக்கினம் தனுசு வெற்றி இலக்கங்கள் 07 66 68 72

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1094
சீட்டிழுப்பு திகதி 19.12.2019 வியாழக்கிழமை
U 51 59 61 74
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.87,051,696

ராசி அதிர்ஷ்டம்
திகதி 19/12/2019 வெற்றி வாரம் 2712 வர்ணம் கபிலம்
வெற்றி இலக்கங்கள் 01 17 41 62
வெள்ளிக் கிழமை வெற்றிப் பொதி ரூ. 2,995,470
2019/12/20 ம் திகதி வெள்ளிக் கிழமை கருநீலம்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்

ஜயோதா
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 1631 சீட்டிழுப்பு திகதி 19/12/2019
வெற்றி இலக்கங்கள் 07 19 34 66 B
ரூ. 42,966,912

அத கோடிபதி
சீட்டிழுப்பு இல: 826
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 75,284,515/-
வர்ணம் : நீலம்
சீட்டிழுப்பு திகதி: 2019.12.19
வெற்றி இலக்கங்கள் 46 59 76 77 N

# சம்பிக்க ரணவக்கவின் கைது

# பாராளுமன்றத்தின் மரபு மீறப்பட்டுள்ளது - சபாநாயகர்

(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்க கைது செய்யப்பட்டுள்ளமை கவலையளிப்பதாக தெரிவித்துள்ள சபாநாயகர் அலுவலகம்.

குறித்த கைதானது பாராளுமன்ற உறுப்பினர்களை கைது செய்யும் போது பின்பற்றப்பட வேண்டிய பாரம்பரியங்களையும், சிறப்புரிமைகளையும் மீறியுள்ளதாகவும் சபாநாயகர் கருஜயசூரிய சுட்டிக்காட்டியுள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்கவை கைது செய்வதற்கு முன்பதாக அதுகுறித்து சபாநாயகருக்கு எழுத்துமூலம் அறிவித்திருக்க வேண்டும். ஆனால் சம்பிக்க ரணவக்கவின் இல்லத்திற்குள் நுழைந்த பின்னரே பிரதி சபாநாயகருக்கு இவ்விடயம் தொலைபேசி ஊடாக அறிவிக்கப்பட்டதாகவும் சபாநாயகர் கரு ஜயசூரிய தெரிவிததுள்ளார்.

சமல்ராஜபக்ஷ சபாநாயகராக விருந்த காலத்தில் பாராம்பரியங்கள் மற்றும் சம்பிரதாயங்கள் முறைப்படி பின்பற்றப்பட்டதாகவும், அதனை தானும் பின் பற்றி வருவதாகவும் சபாநாயகர் மேலும் தெரிவித்தார். (ம-3)

# மார்ச் 3ஆம் திகதிக்குப் பின் பாராளுமன்றம் கலையும்

(கொழும்பு)

எதிர்வரும் மார்ச் மாதம் 03ம் திகதிக்கு பின்னர் பாராளுமன்றம் கலைக்கப்பட்டு, பொதுத் தேர்தல் நடைபெறும் என்றும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வெளிநாட்டு பத்திரிகையாளரிடம் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி செயலகத்தில் வெளிநாட்டு பத்திரிகையாளர்களுடனான கலந்துரையாடல் நேற்று இடம்பெற்ற போது, இதனை தெரிவித்தார்.

19 வது திருத்தம் மிகப்பெரிய தவறு என்றும், நாட்டின் முன்னேற்றத்திற்கு பெரும் தடையாக இருப்பதாகவும் கூறினார். (ம-3)


SLAS
விசேட இறுதி கருத்தரங்குகள்
விரிவுரையாளர்
த.தவசேகர்
உடன் துறைசார் வளவாளர்களின் வழிகாட்டலில் அனைத்து வினாத் தாள்களுக்குமான எதிர்பார்க்கை விடயங்கள் வழங்கப்படும்.
சனி (21/12), ஞாயிறு (22/12) காலை 9.00 - 4.00 மணிவரை
தொடர்புகளுக்கு 0766883394
யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப் படிப்புக்கள் பிரிவு (யாழ் ஆஸ்பத்திரி வீதியில் பஸ் நிலையத்திலிருந்து 100Mதூரத்தில்)
(C-8598)

விரைவு பொதிகள் சேவை
விசேட விலை குறைப்பு

DELIVERY IN 3-5 DAYS
UK - 550 /=Kg
கனடா - 950 /=Kg
ஜேர்மனி - 650 /=Kg
நெதர்லாந்து- 700 /=Kg
இத்தாலி- 700 /=Kg (நிபந்தனைகளுக்குட்பட்டது)
(C-8144)
● யாழ்ப்பாணம்- ● கிளிநொச்சி ● நெல்லியடி ● கொடிகாமம் ● வல்வெட்டித்துறை ● பருத்தித்துறை ● மானிப்பாய் ● சாவகச்சேரி ● சுன்னாகம் ● மருதங்கேணி ● திருகோணமலை
0768226240
V2 TRAVELS

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603 / 021 567 1532

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்
றாஜ் நகை மாடம்
யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.
தொடர்பு: றாஜ் - 077 679 6623
(1547)

நெல்லியடியில்...
வெளிநாடுகளுக்கான துரித தபால் பொதிகள் சேவை
லண்டன் - 540/=
ஜேர்மனி - 640/=
இத்தாலி - 690/=
கனடா - 950/=
நெதர்லாந்து - 690/=
சலுகை அட்டை (Discount Card) பெற வேண்டும் எனும் நிபந்தனை இல்லை.
076 443 1576
அருள்

பெற்றோல் செற் எதிரில் பிரதான வீதி, நெல்லியடி.
(C-8397)

ஹோட்டல் மனேஜ்மன்ட்
அரசாங்க, சர்வதேச அங்கீகார சான்றிதழ்

பயிற்சிக் காலத்தில் ரூ.1 லட்சம் வரை வருமானம்
100% வேலைவாய்ப்பு
இலவச ஆங்கில வகுப்பு
தமிழ் - ஆங்கில மொழி மூலமான விரிவுரைகள்
2020 பதிவுகள் ஆரம்பம்
✦Certificate in Hotel and Resort Management LKR - 30,000 (520 hrs)
✦Certificate in International Cookery & Culinary Arts LKR 60,000 (600 hrs)
T.P: 076 057 9999, 021 314 6171
No.1544, K.K.S Road, Jaffna.
(C-8599)

KINGS
ELECTRONICS (PVT) LTD
CHRISTMAS & NEW YEAR SPECIAL OFFERS
LIMITED SPECIAL OFFER
ELECTRONICS / FURNITURES / BABAY CARE / TOYS / LIGHTS
மாபெரும் மலிவு விற்பனை JANUARY 10 வரை
மின் உபகரணங்கள், தளபாடங்கள் மற்றும் குழந்தைகளுக்கான பொருட்கள்
10% - 40% OFF
SOFA 1+1+3 FULL SET RS.32,900
5 YEAR WARRANTY
LHD-677 LG RS.33,900
LED TELEVISIONS
3 YEAR WARRANTY
MEGA SEASON SALE
LIMITED TIME OFFER

LG Washing Machine RS.58,900
MX-L90 PARTY SPEAKER RS.23,400
LG~LHD457 RS.26,900
REFRIGERATOR RS.40,900 SAMSUNG R19
Samsung 32" -28900/=
Hisense 32" -20900/=
Sony 32" -29900/=
Video con 32" -19900/=
Panasonic 32" -22900/=
Maxmo 32" -17990/=
Innovex 32" -19250/=
Innovex 40" -39900/=
Maxmo 40" -39500/=
Hisense 50" -91900/=
SINGER SWM-SAR6 RS.23,500
SAMSUNG RT28K REFRIGERATOR RS.73,900 INVERTER
Hisense 55 4K SMART RS.129,900 ONLY
HITACHI 43" FULL HD RS.49,500 ONLY
SAMSUNG 43" 4K SMART RS.95,000 ONLY
INVERTER LG REFRIGERATOR RS.69,900
(C-8584)
076-3594665 KINGS JAFFNA 12,Point Petro Road,Jaffna


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 20.12.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.